பக்கங்கள்:18 விலை : 30/-

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 06 வள்ளுவர் ஆண்டு 2053 சித்திரை 11 ஞாயிற்றுக்கிழமை 24.04.2022 கதிர் 170

### இது ரகசியம் அல்ல!

பஞ்ச தந்திரங்கள் குறித்து நாம் பேசுவதுண்டு. இப்போதும் கூட ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கும் அவரது அரசுக்கும் எதிரான மக்கள் கிளர்ச்சி எழுந்துள்ள இச்சமயத்தில் அவரது அரசுக்கும் அவருக்கும் எதிராக நாடாளுமன்றத்தில் ☞ 2

# நானேதான் பிரதமர் மஹிந்த விடாப்பிடி!

## புதியவர் எவரும் தேவையில்லை என்கிறார்



கொழும்பு, ஏப்ரல் 24

"தொடர்ந்தும் நாட்டின் பிரதமர் நான்தான். அதற்கான உடல், உள உறுதியுடனும் தேகாரோக்கியத்துடனும் நான் இருக்கிறேன். வேறு ஒரு பிரதமர் வர வேண்டிய தேவையில்லை. இடைக்கால அரசு என்றாலும் அதற்கு அதற்கும் நானே தலைமை தாங்குவேன்."

– இவ்வாறு உறுதிபடத் தெரிவித்து இருக்கிறார் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ. ☞ 17

## பவுஸருக்குத் தீயிட முயன்றவர் கைதாகி பின்னர் பிணையில்



ரம்புக்கனையில் எரிபொருள் பவுஸருக்குத் தீ மூட்டுவதற்கு முயன்றவர் எனக் கூறப்படும் ஒருவரை, குற்றப் புலனாய்வு பிரிவினர் கைது செய்தனர்.

கைது செய்யப்பட்டவர் 27 வயதான – பின்னவலையைச் சேர்ந்த – இளைஞராவர். இவர் நேற்று முன்தினம் இரவே கைது செய்யப்பட்டார்.

சந்தேகநபரை நேற்று கேகாலை நீதிவான் ☞ 2

## இன்னும் இருபது எம்.பிக்கள் ஆளும் தரப்பிலிருந்து 'அவுட்'?

ஆளும் கட்சிக்கு ஆதரவளித்து வந்த மேலும் சுமார் 20 நாடாளுமன்ற உறுப்பினர்கள் அரசுப் பக்கத்திலிருந்து வெளியேறி இன்னொரு சுயேச்சை அணியாக இயங்கத் தயாராகி வருகின்றனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

ஜனாதிபதியிடம் தாங்கள் முன்வைத்துள்ள இடைக்கால அரசு யோசனை நடைமுறைப் படுத்தப்படா விட்டால் நாடாளுமன்றத்தில் தாங்கள் சுயாதீனமாகச் செயற்படுவார்கள் என அவர்கள் தரப்பில் கோடி காட்டப்படுவதாகவும் கூறப்படுகின்றது.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் 10 பின்வரிசை நாடாளுமன்ற உறுப்பினர்களும் தமது இடைக்கால ☞ 2

## மஹிந்த விலகாவிடில் சஜித்துக்கு ஆதரவாம்

### 40 எம்.பிக்கள் குழு தீர்மானம்



பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ பதவிவிலகி, இடைக்கால அரசாங்கம் அமைக்கப்படவில்லை எனில், எதிர்க்கட்சியினால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள நம்பிக்கையில்லாப் ☞ 2

## எம்பிலிப்பிட்டியவில் நேற்று ஒன்று திரண்ட சனசமுத்திரம்



அரசின் அடக்குமுறை சார்ந்த மக்கள் விரோதச் செயற்பாடுகளுக்கு எதிராக ஐக்கிய மக்கள் சக்தியால் ஏற்பாடு செய்யப்பட்ட மாபெரும் கவனவீர்ப்புப் போராட்டம் ஒன்று கொலன்ன தேர்தல் தொகுதியின் எம்லிப்பிட்டிய நகரில் நேற்று நடைபெற்றது.

ஐக்கிய மக்கள் சக்தியின் கொலன்ன தேர்தல் தொகுதியின் ☞ 2

## ராஜபக்ஷக்கள் நேற்று ஒன்று கூடி கலந்தாய்வு

### கோட்டா மட்டும் பங்குபற்றவில்லை

தற்போது நிலவும் அரசியல் நெருக்கடி நிலைமைகள் தொடர்பாக கலந்துரையாடுவதற்காக ராஜபக்ஷ குடும்பத்தினருக்கிடையில் நேற்று முற்பகல் விசேட சந்திப்பு ஒன்று நடந்துள்ளது என சிங்கள இணையத்தளம் ஒன்றுசெய்திவெளியிட்டுள்ளது.

ராஜபக்ஷ குடும்பத்தில் மூத்தவரான முன்னாள் ☞ 2

## ராஜபக்ஷக்களுடன் இணைந்து ஒருபோதும் இடைக்கால அரசை அமைக்காராம் சஜித்!

ராஜபக்ஷக்களுடன் இணைந்து ஒருபோதும் இடைக்கால அரசை அமைக்கமாட்டேன் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

அரசின் மக்கள் விரோத செயற்பாடுகளுக்கு எதிராக ஐக்கிய மக்கள் சக்தியால் ஏற்பாடு செய்யப்பட்ட மாபெரும் கவன வீர்ப்புப் போராட்டம் நேற்று கொலன்னாவத் தேர்தல் தொகுதியின் எம்பிலிப்பிட்டிய நகரில் நடைபெற்ற போது அதில் கலந்துகொண்டுஉரையாற்றும் போதே எதிர்க்கட்சித் தலைவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் உரையாற்றுகையில் –

நாடு வீழ்ந்துள்ள நிலையிலிருந்து நாட்டைக் கட்டியெழுப்பும் பொறுப்பை ஏற்பதற்குத் தயாராக இருக்கின்றேன். நாட்டில் மேல் எழுந்துள்ள பிரச்சினைகளுக்குத் தீர்வு ☞ 2

## நாட்டின் சில வங்கிகள் செயலிழக்கும் ஆபத்து!

### எச்சரிக்கின்றார் ரணில்



நாட்டின் சில வங்கிகள் செயலிழக்கும் ஆபத்து ஏற்பட்டு இருப்பதாக முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க எச்சரிக்கை விடுத்திருக்கிறார்.

நேற்று முன்தினம் மாலையில் வங்கியாளர்கள் மத்தியில் கருத்து ☞ 2

## உங்களின் சிங்கள மக்களே உங்களைத் தூஷிப்பார்கள் என கோட்டாவிடம் ஆயர் இராயப்பு ஜோசப் நேரில் கூறியிருந்தார்

### அவரின் தீர்க்கதரிசனம் பலிக்கிறது என்கிறார் செல்வம் எம்.பி.





மன்னார் மறை மாவட்ட ஆயராக இருந்த இராயப்பு ஜோசப் ஆண்டகை அப்போது பாதுகாப்பு செயலராக இருந்த கோட்டாபய ராஜபக்ஷ அவமதித்தார்.

அதற்குப் பதிலாக நிச்சயமாக ஒரு காலகட்டத்தில் சிங்கள மக்கள் உங்களைத் தூஷிப்பார்கள் என்று கோட்டாபய ராஜபக்ஷவிடம் மன்னார் ஆயர் இராயப்பு ஜோசப் நேரில் கூறினார்.

அப்போது ஆயர் கூறிய தீர்க்கதரிசனம் இன்று நடந்து கொண்டிருக்கின்றது என தமிழ் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இடம்பெற்ற – நாட்டின் நெருக்கடி நிலைமை ☞ 2



## இனி இது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

பஞ்ச தந்திர நடவடிக்கைகள் எடுக்கப்படவிருக்கின்றன என்று எதிர்க்கட்சிகள் பிரஸ்தாபிக்கின்றன.

எதிரணியின் ‘சட்டமா அதிபர்’ ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் எம்.பி. நேற்றுக் காலை ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய செவ்வியிலும் இத்தகைய ஐந்து விதமான நகர்வுகள் குறித்துப் பிரஸ்தாபித்திருக்கின்றார்.

அவை குறித்து ஒரு மேலோட்டத்தை இன்று பார்ப்போம்.

முதலாவது – நிறைவேற்றதிகார ஜனாதிபதியின் அதிகாரங்களை ஒரேயடியாகப் பிடுங்கி விடுவது. முழுமையாக நிறைவேற்றதிகார ஜனாதிபதி ஆட்சி முறைமையையே ஒழித்து விடலாம் என்பது ஐக்கிய மக்கள் சக்தியின் முடிவு. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் அதை ஆதரிக்கின்றது. அதற்குரிய அரசமைப்புத் திருத்தப் பிரேரணையை பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி தனிநபர் பிரேரணையாக சமர்ப்பித்துள்ளது. இதற்குப் பதிலாக ஜனாதிபதிக்கு அரசமைப்பின் 20 ஆவது திருத்தம் மூலம் வழங்கப்பட்ட அதிகாரங்களைப் பிடுங்கினால் போதும் என்பது பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் நிலைப்பாடு. இதற்கு வழி செய்யும் பரிந்துரை ஒன்றை நாளை நடைபெறும் அமைச்சரவைக் கூட்டத்துக்கு அவர் கொண்டு வருகின்றார். அது அமைச்சரவையைத் தாண்டுவதற்கு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அனுமதிப்பாரா, அங்கு – அமைச்சரவையில் – இவ்விடயத்தை ஒட்டிப் பிரளயம் வெடிக்குமா என்பவற்றை நாளைக்கு அமைச்சரவைக் கூட்டத்தின் போதுதான் கண்டறிய முடியும்.

தமது அந்த முயற்சிக்கு – தனது தம்பியாரான ஜனாதிபதி கோட்டாபயவின் அதிகாரத்தை வெட்டிக் குறைக்கும் தனது முயற்சிக்கு – பிற கட்சிகளின் ஆதரவையும் பிரதமர் கோரியிருக்கின்றார்.

நாளை மாலை அமைச்சரவையில் இந்த விவகாரம் ஆராய்ந்து முடிந்த பின்னர், இது குறித்துப் பேசுவதற்காக – நாளை இரவு 7.30 மணிக்கு சந்திப்பதற்கு – முதலாவதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்புத் தலைவர்களை அவர் அழைத்திருக்கின்றார் என்று ஒரு தகவல் தெரிவித்தது.

தொடர்ந்து அடுத்தடுத்த நாள்களில் பிற கட்சித் தலைவர்களுடன் அது பற்றி – ஜனாதிபதியின் அதிகாரத்தை வெட்டிக் குறைப்பது பற்றி – அவர் பேசவிருக்கின்றார் என்று தெரிகின்றது.

இதேசமயம், விஜேதாஸ ராஜபக்ஷ எம்.பி. உட்பட அவருடன் இயங்கும் சுயாதீனக்குழுவினரும் ஜனாதிபதியின் நிறைவேற்றதிகாரங்களை வெட்டிக் குறைப்பதற்கு வழி செய்யும் வேறு பிரேரணை ஒன்றை முன்வைத்துள்ளனர்.

இரண்டாவது – ஜனாதிபதிக்கு எதிரான குற்ற விசாரணைப் பிரேரணையை முன்வைப்பது. இதை முன்னெடுப்பதற்கு சிக்கலான – இக்கட்டான – பல தடைகளைத் தாண்ட வேண்டியிருக்கும். இதற்கான முயற்சி ஆரம்பிக்கப்படலாம். ஆனால் அதை முன்நகர்த்துவது சாத்தியமா என்பது ஐயம் எழுப்பும் ஒரு முக்கிய கேள்வியாகும்.

மூன்றாவது – தற்போதைய அரசுக்கு எதிரான நாடாளுமன்றத்தில் நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டு வந்து இந்த ஆட்சியை வீழ்த்துவதும், தொடர்ந்து இடைக்கால அரசையோ, சர்வ கட்சி அரசையோ, தேசிய அரசையோ, காபந்து அரசையோ நிறுவுவதும் குறித்துப் பேசப்படுகின்றது.

நான்காவது – ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மீதும் நம்பிக்கையில்லாப் பிரேரணை ஒன்றை சபையில் கொண்டு வந்து நிறைவேற்றுவது. நாடாளுமன்றத்தில் அப்படி ஒரு தீர்மானம் நிறைவேற்றுவது ஜனாதிபதியின் எந்தச் செயலையும், எந்த அதிகாரத்தையும் தடுத்து விடாது. ஆனால் தார்மீக ரீதியில் இந்த ஜனாதிபதியை நாடாளுமன்றம் கூட ஆதரிக்கவில்லை என்ற உண்மையை வெறுமனே அம்பலப்படுத்துவதாக அது இருக்கும்.

ஐந்தாவது விடயம் – இது நல்லாட்சி காலத்தில் பின்கதவால் மஹிந்த ராஜபக்ஷவைக் கொண்டு வந்து பிரதமரின் அரியணையில் அமர்த்துவதற்கு அப்போதைய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன முயற்சி எடுத்த போது முன்னெடுக்க எத்தனிக்கப்பட்ட விடயம்.

சரியோ, பிழையோ ஜனாதிபதியின் செயற்பாடுகளுக்கு மிகவும் முக்கியமானது நிதி. அந்த நிதிக் கையாள்கை நாடாளுமன்றத்தின் முழுக் கட்டுப்பாட்டின் கீழ் உள்ளது. எகிறும் ஜனாதிபதியின் செயற்பாடுகளுக்கான – அவரது அலுவலகம் உட்பட அதிகார மையங்களுக்கான – நிதியை அப்படியே வெட்டிக் குறைக்கும் தீர்மானம் ஒன்றை நாடாளுமன்றத்தில் நிறைவேற்றுவது.

பிரதான ‘சப்ளை’ வயரை வெட்டி விட்டால் எல்லாச் செயற்பாடும் அடங்கி விடும் அல்லவா? அத்தகைய முயற்சி இது.

இந்த ஐந்து தந்திரங்கையும் எதிர்க்கட்சிகள் ஒரே சமயத்தில் முன்னெடுக்குமா? அவற்றுக்காகவேனும் இந்த எதிர்க்கட்சிகள் தமக்குள் ஒன்றிணையுமா என்பவை எல்லாம் இவ்விவகாரத்தில் தொக்கி நிற்கும் முக்கிய கேள்விகள்.

★ ★ ★

தமது தமையனாரை – தங்களுக்கு எல்லாம் அரசியல் குருவாகத் திகழும் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவை – அப்பதவியில் இருந்து அகற்றும் மறைமுக நடவடிக்கையை ஜனாதிபதி ராஜபக்ஷ சந்தம் சந்தடியின்றி – காதும் காதும் வைத்தால் போல – முன்னெடுக்கின்றார் என்பது உண்மையே.

அதற்கு அவருக்குக் காரணம் உண்டு.

நாட்டின் இன்றைய நெருக்கடி நிலையிலிருந்து மீளுவதற்கு ஒரே வழி சர்வதேச நாணய நிதியத்தின் உதவியைப் பெறுவதுதான். அதுவும் எவ்வளவு விரைவாக முடியுமோ அவ்வளவு விரைவாகப் பெறுவதற்கு முயல வேண்டும் என்பது இலங்கை அரசின் கட்டாய நெருக்கடி நிலைமை.

இலங்கைக்குச் சார்பாக இந்தக் கோரிக்கையை சர்வதேச நாணய நிதியம் ஆராய்வதாயின் அதற்கென சில நிபந்தனைகளை முற்கூட்டியே நிதியம் இலங்கையிடம் தெரிவித்து விட்டது.

அதில் முக்கியமானது – நம்பகமான, நம்பிக்கையான – ஓர் ஆட்சித் தலைமை பொருளாதார விடயங்களைக் கையாளக் கூடியதாக நாட்டில் இருப்பது அவசியம் என்பது. அந்த நிபந்தனைகளுள் அது தலையாயது.

ஜனாதிபதியாகவும், பிரமராகவும் இரண்டு ராஜபக்ஷக்கள் இருக்கும் போது – ராஜபக்ஷக்களின் குடும்ப ஆட்சியினால்தான் ஊழல், மோசடி பெருகி நாடு இந்தக் கேவல நிலைக்கு வந்தது என்று பொதுவாகவே நாட்டு மக்களில் இருந்து அனைத்துத் தரப்பினாலும் குற்றம் சொல்லப்படுகையில், அத்தகைய ஆட்சித் தலைமை தொடரும் போது நாணய நிதியம் எப்படி உதவ முன்வரும்? நாட்டின் கடன் தவணைக் கொடுப்பனவுகள் மீளச் செலுத்தப்படும் என்பதை உறுதியளிக்கும் விடயங்கள் நிறைவேறாமல் கடன் வழங்கப்படமாட்டாது என்பது நாணய நிதியத்தின் ஒரே நிலைப்பாடு. அதற்கும் கூட சரியான – நம்பகத் தன்மையை ஏற்படுத்தக் கூடிய – அரசுத் தலைமை அவசியம். அதாவது இந்த ஆட்சித் தலைமையில் ஒரு மாற்றம் தென்பட்டால்தான் நாணய நிதிய உதவி கிட்டும் என்பது நிலைமை.

ஜனாதிபதி கோட்டாய ராஜபக்ஷ தாம் மாற முடியாது என்று கருதுகிறார். அதனால் பிரதமர் பதவியையாவது மாற்றி, நாணய நிதியம் மற்றும் அதற்குப் பின்புலத்தில் நிற்கும் அமெரிக்கா, இந்தியா போன்ற தரப்புகளைத் திருப்திப்படுத்தி, நாணய நிதிய உதவியை விரைந்து பெற எத்தனிக்கின்றார் கோட்டா.

அப்படி உதவிகள் விரைந்து வந்தால்தான் விலைவாசி உயர்வை சமாளித்து, மக்கள் எழுச்சியை – கிளர்ச்சியை – கட்டுப்படுத்தலாம் எனக் கருதுகின்றார் கோட்டாபய.

ஆனால், இந்த விடயங்கள் விளங்காமல் – அல்லது விளங்கினாலும் விளங்காதவர் போல ஏமாளியாக நடித்து – இந்தச் சமயத்தில் போய் சீனப் பிரதமருடன் சூம் மூலம் தொடர்பாடலை ஏற்படுத்தி, அதைப் பிரசாரப்படுத்தி, சும்மா இருந்த சங்கை ஊதிக் கெடுக்குமாற்போல முறையற்ற வேலைகளை பிரதமர் முன்னெடுக்கின்றார் என்று சீறுகின்றது ஜனாதிபதி தரப்பு.

அண்ணன் – தம்பி முறுகல் சந்தி சிரிக்கும் நிலையை நோக்கி நகர்வதாகவே எனக்குத் தோன்றுகின்றது.

– மின்னல் –

# ஜனாதிபதி ஏன் இன்னும் கூட பதவி விலகாது இருக்கிறார்?

## சுதர்ஷினி பெர்னாண்டோபுள்ளே கேள்வி

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் தன்னிச்சையான தவறான முடிவுகளாலேயே நாட்டிலுள்ள 22 மில்லியன் மக்கள் துன்பங்களை அனுபவித்து வருகின்றனர் என முன்னாள் சுகாதார இராஜாங்க அமைச்சர் சுதர்சினி பெர்னாண்டோபுள்ளே தெரிவித்துள்ளார்.

சுகாதார இராஜாங்க அமைச்சராக கொரோனா தொற்று நோயை ஒழிப்பதற்கு பணியாற்றி, தற்போது அரசாங்கத்தில் இருந்து விலகி சுயாதீன அணியாக செயற்படும் சுதர்சினி பெர்னாண்டோபுள்ளே சிங்கள பத்திரிகை ஒன்றுக்கு பேட்டியளிக்கும் போதே இவ்வாறு தெரிவித்தார்.

அந்தப் பேட்டியில் அவர் மேலும் தெரிவிக்கையில் –

தலைவலிக்கு தலையணையை மாற்றுவது போல் புதிய அமைச்சரவையை நியமித்துள்ளதன் மூலம் பிரச்சினைக்கு தீர்வு கிடைக்காது. அனைத்து கட்சிகளும் இணைந்து இடைக்கால அரசாங்கத்தை உருவாக்கி இந்தப் பிரச்சினையைத் தீர்க்க வேண்டும்.

இரண்டு வருடங்களுக்கு முன்னர் சர்வதேச நாணய நிதியத்திற்குச் சென்றிருக்க வேண்டும் என்பது தொடர்பிலும், விவசாயிகளுக்கு இரசாயனப் பசளையை வழங்காமை தொடர்பிலும் தற்போதே ஜனாதிபதி தவறை ஏற்றுக் கொண்டுள்ளார். தவறு நடந்துள்ளது என்று கூறினால் இராஜினாமாச் செய்ய வேண்டும்.

அப்படியானால் நாட்டின் 22 மில்லியன் மக்கள் ஜனாதிபதி உட்பட ஆளும் தரப்பினரின் தவறு காரணமாக தற்போது துன்பங்களை அனுபவித்து வருகின்றனர். சர்வதேச நாணய நிதியத்திற்கு செல்லவிடாது தடுத்தவர் அஜித் நிவாட் கப்ரால். அவரது எண்ணம் போல் இலங்கை மத்திய வங்கியை நிர்வாகம் செய்து வந்தார். நிதியமைச்சின் சில அதிகாரிகள் தவறான தகவல்களை வழங்கினர். உண்மையான தகவல்களை வழங்கவில்லை.

விவசாயிகளின் பிரச்சினையிலும் இதே நிலைமை. சேதனப் பசளைத் திட்டத்தை 5 ஆண்டு நீண்ட திட்டத்தின் கீழ் செயற்படுத்த வேண்டும் என யோசனை முன்வைத்த கமத்தொழில் ஆலோசகர்களையும் செயலாளர்களையும் பதவியில் இருந்து ஜனாதிபதி நீக்கினார். எவருடையே ஆலோசனைகளையும அவர் பொருட்படுத்தவில்லை.

விவசாயிகளுக்கு சரியான நேரத்தில் இரசாயனப் பசளையை வழங்கியிருந்தால், அவர்கள் வீதியில் விழுந்திருக்க மாட்டார்கள். விவசாயிகளே நாட்டை தன்னிறைவு அடையச் செய்தனர். அதனை ஜனாதிபதி மறந்து போனார். சரியான நேரத்தில் இரசாயனப் பசளைகள் கிடைத்து பயிர் செய்ய முடிந்திருக்குமாயின் மக்களுக்கு பட்டினி ஏற்பட்டிருக்காது. விவசாயிகளின் உதவியால் ஏனைய மக்களுக்கு குறைந்த விலையில் அரிசி கிடைத்திருக்கும். எனினும் நாட்டு மக்களுக்கு அந்த சந்தர்ப்பம் இல்லாமல் போயுள்ளது.

பொருள்களின் விலைகள் வான் அளவுக்கு உயர்ந்துள்ளது. ஜனாதிபதி ஏன் இன்னும் பதவி விலகாது இருக்கின்றார் என்பது எமக்கும் பிரச்சினையாக உள்ளது. அண்மையில் றம்புக்கனை சம்பவத்தில் அப்பாவி ஒருவர் இறந்து போனார். நள்ளிரவு எரிபொருள் விலை அதிகரித்த பின்னர், ரம்புக்கனை கூட்டுறவு சங்கம் முதல் நாள் கொண்டு வரவிருந்த எரிபொருள் கொள்கலனை தாமதப்படுத்தியே கொண்டு வந்தது. இதன் காரணமாகவே மக்கள் மத்தியில் பதற்றமான நிலைமை ஏற்பட்டது. – என்றார்.

# அரசுக்கு எதிராக முல்லையில் பொங்கியெழுந்த மக்கள் படை



இலங்கையில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி உள்ளிட்ட பல்வேறு விடயங்களுக்கு எதிர்ப்புத் தெரிவித்தும், கோட்டாபய அரசைப் பதவி விலகுமாறு வலியுறுத்தியும் முல்லைத்தீவில் மாபெரும் கவனவீர்ப்புப் பேரணி நேற்று முன்னெடுக்கப்பட்டது.

முள்ளியவளை கொமர்ஷல் வங்கிக்கு அருகில் இருந்து ஆரம்பமான கவனவீர்ப் புப் பேரணி தண்ணீரூற்று நகரத்தைச் சென்று நிறைவடைந்தது.

இதில் அரசியல் பிரமுகர்கள், சிவில் சமூக அமைப்பினர், வர்த்தக சங்கத்தினர், ஓட்டோ சாரதிகள் மற்றும் பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

## ராஜபக்ஷக்களுடன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

காணும் ஒரே சக்தி ஐக்கிய மக்கள் சக்தியாகும்.

எனக்கு உலகை ஆளும் பேரரசர் ஆட்சிப் பதவியை வழங்குவதாக உறுதியளித்தாலும் ராஜபக்ஷக்களுடனோ அல்லது கள்வர் கும்பல்களுடனோ இணைந்து ஒருபோதும் இடைக்கால அரசாங்கத்தை அமைக்க மாட்டேன்.

சுமார் 150 ஆசனங்களுடன் இரண்டரை வருடங்களாக மரணப்படுக்கையில் இருந்த அரசு இப்போது கூட்டணி ஆட்சிக்கு வாருங்கள் என்கின்றது. வந்து பிரதமர் பதவியைப் பெற்றுக் கொள்ளுங்கள் என்கின்றார்கள். அமைச்சுப்பதவிகளைப் பெற்றுக்கொள்ளுங்கள் என்கின்றார்கள். ஆனால் யாருடைய மனதையும் கெடுக்கும் நோக்கில் திருட்டு அரசை அமைப்பதற்கு நாங்கள் தயாராக இல்லை. மக்கள் மூலம் ஆட்சி அமைக்கவே நாங்கள் தயாராகவுள்ளோம்.

இரண்டரை வருடங்களாக நாட்டை குட்டிச்சுவராக்கி அழித்துவிட்டு இப்போது பொய் இறக்கைகளை அணிவிக்க வருகிறார்கள். அந்த இறக்கைகளை அணிவதற்கு நாங்கள் தயாரில்லை.

ஐக்கிய மக்கள் சக்தி சமூக ஜனநாயக கொள்கைசார் வேலைத்திட்டத்தையே நடைமுறைப்படுத்துகின்றது. இது தீவிர தாராளவாதத்தையோ அல்லது உச்ச முதலாளித்துவத்தையோ அல்ல.

மக்களால் தெரிவு செய்யப்பட்ட எனது தலைமையிலான அரசாங்கத்தின் கீழ் அனைத்து சமூக, பொருளாதார மற்றும் அரசியல் பிரச்சினைகளுக்கும் தீர்வு காண்பேன்.

அரசாங்கத்திற்குள் அமைச்சுப் பதவிகளையோ அல்லது ஏனைய பதவிகளையோ நாங்கள் ஒருபோதும் ஏற்றுக் கொள்ள மாட்டோம்.

ஊழல் பேரங்களில் ஈடுபடுவதை விட அரசியலில் இருந்து விலகுவதையே விரும்புகின்றேன்.

சர்வஜன வாக்கெடுப்பின்றி ஜனாதிபதி அல்லது பிரதமர் பதவியை ஏற்குமாறு நிர்ப்பந்தித்தால் அரசியலில் இருந்து ஓய்வு பெறுவேன். – என்றார்.

## பவுஸருக்குத்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

நீதிமன்றில் ஆஜர்படுத்திய போது, தலா 100,000 ரூபா பெறுமதியான இருவரின் சரீரப் பிணையில் அவரை விடுவிக்க நீதிமன்றம் அனுமதித்தது.

# கச்சதீவை மீட்டெடுக்க மோடிக்கு அரியவாய்ப்பு!

## துரை வைகோ கோரிக்கை

(ந.லோகதயாளன்)

கச்சத்தீவை மீடக இந்தியாவின் முன்னாள் பிரதமர்களுக்கு கிடைக்காத அரிய வாய்ப்பு மோடிக்கு கிடைத்துள்ளமையால் அதனைப் பயன்படுத்தி கச்சதீவை மீடக வேண்டும் என ம.தி.மு.கவின் துரை வைகோ கோரிக்கை விடுத்துள்ளார்..

தமிழ்நாடு ராமேஸ்வரம் பஸ் நிலையம் அருகே இலங்கை அரசிடமிருந்து தமிழக மீனவர்கள் மற்றும் ஈழத் தமிழ் உறவுகளின் உரிமைகளைப் பாதுகாக்கக் கோரி ஒன்றிய அரசை கண்டித்து உரிமை முழக்க ஆர்ப்பாட்டம் அக்கட்சியின் தலைமை கழக செயலாளர் துரை வைகோ தலைமையில் நடைபெற்றது.

இதன்போதே இதில் உரையாற்றிய அவர் இந்தக் கோரிக்கையை விடுத்தார் .

இங்கு தொடர்ந்தும் உரையாற்றுகையில் –

இலங்கையில் தற்போது கடும் பொருளாதார நெருக்கடி ஏற்பட்டுள்ள இந்தத் தருணத்தில் பிரதமர் மோடி கச்சதீவை மீடக நடவடிக்கை எடுக்க வேண்டும்.

தற்போது இலங்கையில் கடுமையான பொருளாதார நெருக்கடி ஏற்பட்டு அங்கு உள்ள இலங்கை மக்கள் அன்றாட உணவிற்கு கடும் சிரமப்பட்டு வருவதால் இந்திய அரசு அவர்களுக்கு பல்வேறு விதமான உதவிகளை செய்து வருகின்றது. இந்தத் தருணத்தைப் பயன்படுத்தி முன்னாள் பிரதமர்கள் இந்திரா காந்தி, வாஜ்பாய் ஆகியோருக்கு கிடைக்காத அரிய வாய்ப்பு தற்போதைய பிரதமர் மோடிக்கு கிடைத்துள்ளது.

இவ்வாறு கிடைத்துள்ள அரிய வாய்ப்பைப் பயன்படுத்தி கச்சதீவை மீடக வேண்டும் அல்லது கச்சதீவு பகுதியில் மீன் பிடிக்கும் உரிமையையாவது இந்திய மீனவர்களிற்கு பிரதமர் மோடி பெற்றுக்கொடுக்க வேண்டும். – என்றார்.



# மாங்கல்யா லக்ஷ்மி நாராயணா திருமண சேவை

இல.266, பலாலி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம்.
077 197 1667, 077 316 4796

| மணமகள் விவரம் | மணமகன் விவரம் |
| --- | --- |
| பிறந்த திகதி - 16.01.1993, மதம் - இந்து, ஜாதி - -Visvagulam, நட்சத்திரம் - சுவாதி, கி.பா - 50, செவ் 8 இல், தகைமை - G.C.E A/L, தொழில் - -, எதிர்பார்ப்பு - வெளிநாட்டு மணமகன் தேவை | பிறந்த திகதி - 02.03.1985, மதம் - இந்து, ஜாதி - P பகுதி, நட்சத்திரம் - திருவாதிரை, கி.பா - 23, செவ் 3 இல், தகைமை - B.A, தொழில் - D.O அரச சேவை, எதிர்பார்ப்பு - அரச சேவை மணமகள் தேவை |
| பிறந்த திகதி - 30.12.1995, மதம் - இந்து, ஜாதி -V பெண், நட்சத்திரம் - ரேவதி, கி.பா - 13, செவ் 10 இல், தகைமை - B.A பட்டதாரி, தொழில் - Company, எதிர்பார்ப்பு - வெளிநாட்டு PR உள்ள மணமகன் | பிறந்த திகதி - 07.03.1985, மதம் - இந்து, ஜாதி -Visvagulam, நட்சத்திரம் - உத்தரம் 1 இல், கி.பா - 40, செவ் 10 இல், தகைமை - G.C.E A/L, தொழில் - France PR, எதிர்பார்ப்பு - ஐரோப்பா மணமகள் தேவை |
| பிறந்த திகதி - 22.10.1994, மதம் - இந்து, ஜாதி -P பகுதி, நட்சத்திரம் - உத்தரட்டாதி, கி.பா - 32, செவ் 12 இல், தகைமை - B.A, தொழில் - அரச சேவை, எதிர்பார்ப்பு - அரச சேவை மணமகன் | பிறந்த திகதி - 26.02.1986, மதம் - இந்து, ஜாதி - கோவியர், நட்சத்திரம் - உத்தரம் 2 இல், கி.பா - 49, செவ் 7 இல், தகைமை - E.Eng, தொழில் - T.O அரச சேவை, எதிர்பார்ப்பு - அரச சேவை, தனியார் மணமகள் தேவை |
| பிறந்த திகதி - 18.09.1994, மதம் - இந்து, ஜாதி - P பகுதி, நட்சத்திரம் - சதயம், கி.பா - 30, செவ் 8 இல், தகைமை - B.B.M, தொழில் - Management Assistant, எதிர்பார்ப்பு - அரச சேவை மணமகன் தேவை | பிறந்த திகதி - 09.02.1979, மதம் - இந்து, ஜாதி - Gurugulam, நட்சத்திரம் - புனர்பூசம் 4 இல், கி.பா - 36, செவ்/சூரி 4 இல், தகைமை - G.C.E A/L, தொழில் - சொந்த வியாபாரம், எதிர்பார்ப்பு - A/L மணமகள் தேவை |
| பிறந்த திகதி - 08.12.1990, மதம் - இந்து, ஜாதி - V பெண், நட்சத்திரம் - மகம், கி.பா - 24, செவ் 8 இல், தகைமை - M.BB.S, தொழில் - Doctor, எதிர்பார்ப்பு - Doctor, Engnieer மணமகன் தேவை | பிறந்த திகதி - 11.07.1993, மதம் - இந்து, ஜாதி - V ஆண், நட்சத்திரம் - ரேவதி, கி.பா - 33, செவ் 11 இல், தகைமை - B.Sc Hons, தொழில் - ஆசிரியர், எதிர்பார்ப்பு - ஆசிரியர், Bank Officer, யாழ், மானிப்பாய், வட்டுக்கோட்டை மணமகள் தேவை |
| பிறந்த திகதி - 25.04.1995, மதம் - இந்து, ஜாதி - V பகுதி, நட்சத்திரம் - சித்திரை 2 இல், கி.பா - 57, செவ் 1 இல், தகைமை -G.C.E A/L, தொழில் - Company Manager, எதிர்பார்ப்பு - வெளிநாட்டுஇ உள்நாட்டு மணமகன் தேவை | பிறந்த திகதி - 13.11.1991, மதம் - இந்து, ஜாதி - V ஆண், நட்சத்திரம் - உத்தராடம் 4 இல், கி.பா - 14, செவ்/சூரி 12 இல், தகைமை - Software Engineer, தொழில் - Company Work, எதிர்பார்ப்பு - பட்டதாரி மணமகள் தேவை |
| பிறந்த திகதி - 18.08.1983, மதம் - இந்து, ஜாதி - Visvagulam, நட்சத்திரம் - கேட்டை 4 இல், கி.பா - 51, செவ் 3 இல், தகைமை - Law, தொழில் - சட்டத்தரணி, எதிர்பார்ப்பு - பட்டதாரி மணமகன் தேவை | பிறந்த திகதி - 08.09.1982, மதம் - இந்து, ஜாதி - V ஆண், நட்சத்திரம் - பரணி 4 இல், கி.பா - 35, செவ் 7 இல், தகைமை - NCT Mechanical, தொழில் - அரச சேவை, எதிர்பார்ப்பு - அரச சேவை மணமகள் தேவை |
| பிறந்த திகதி - 08.12.1990, மதம் - இந்து, ஜாதி - V பெண், நட்சத்திரம் - சதயம், கி.பா - 24, செவ் 12 இல், தகைமை - B.Sc I.T, தொழில் - அரச சேவை, எதிர்பார்ப்பு - அரச சேவை உயரபதவி மணமகன் தேவை | பிறந்த திகதி - 16.08.1985, மதம் - இந்து, ஜாதி -V ஆண், நட்சத்திரம் - மகம், கி.பா - 453, செவ்/சூரி 4 இல், தகைமை - G.C.E A/L, தொழில் - அரச சேவை, எதிர்பார்ப்பு - அரச சேவை, தனியார் மணமகள் தேவை |

Australia, Canada, UK, USA,Swiss, Germany, Italy, France, Newzeland- இந்த நாடுகளில் Visa உள்ளவர்கள் இல்லாதவர்கள் மணமகன் மணமகள் விவரம் தந்தால் திருமணம் நிறைவேற்றித் தருவோம்.

காலைக்கதிர் தொலைபேசி 021 222 3000

ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் வெளிவரும் இம் மாங்கல்யா பகுதியில் மணமக்கள் விவரங்கள் பிரசுரிக்க விரும்பின் பின்வரும் தொலைபேசி இலக்கத்தினூடாகவோ அல்லது நேரடியாகவோ அலுவலகத்தில் மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்ள முடியும்.

Northern PC Park
BenQ
வடக்கின் கணினிப் பூங்கா
கணினி உலகில் நம்பகமான சேவையில் 15 வருடங்களுக்கு மேலாக யாழ் மண்ணில்
#10 Muddaskadai Junction, Stanley Road, Jaffna.
info@pcpark.co www.pcpark.co Hot Line :- 077 777 1545
077 757 0124 | 075 555 7327 | 021 567 5566 | 021 222 9581
077 336 6443 | 071 777 2377 | 021 222 2050 | 021 222 0388
Northern Pc Park Npcpark northernpcpark Northern PC Park



Personal English Classes
K.Ganesh (BA.Pera)
யாழ்.நகரில் தனி வகுப்புக்கள்
Grade 7 - GCE O/L, A/L,
பட்டதாரிகள், தொழில்புரிவோர்
சரளமாக ஆங்கிலம் பேசவும், எழுதவும்.
G.C.E. O/L English Literature
077 766 8725
யாழ்நகர்.



அண்ணா விரைவுப் பொதிகள் சேவை
075 330 5500,070 330 5500
076 122 1566
யாழ்ப்பாணம் - நல்லூர்- வட்டுக்கோட்டை - சங்கானை - சுன்னாகம் - ஆவரங்கால்- நெல்லியடி - கைதடி - சங்கத்தானை - பளை - கிளிநொச்சி - புதுக்குடியிருப்பு - முல்லைத்தீவு - கனகராயன்குளம் - மல்லாவி -மன்னார் - வவுனியா - திருகோணமலை- மூதூர் - கொழும்பு
POST YOUR AD yarlads.com
உங்கள் விளம்பரங்களை இலவசமாகப் பதிவிட

இறைச்சிக் கோழி விற்பனை
புறொய்லர், கல்பேட்ஸ். பேரன்ஸ் இறைச்சிக் கோழிகள் மொத்தமாகவும் சில்லறையாகவும் சுத்தம் செய்து மிகக் குறைந்த விலையில் எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம்.



U.S.A பாம்
குளப்பிட்டி வீதி, ஆனைக்கோட்டை.
077 868 9500

சசிகா லேணர்ஸ்
Reg.No:DS882
THE SASIKA LEARNERS
அரச அங்கீகாரம் பெற்ற சாரதி பயிற்சிப் பாடசாலை
தலைமைக் காரியாலயம்:-
இல.57, வேம்படி வீதி, யாழ்ப்பாணம்.
021 221 7578/ 7678
070 301 3011/ 077 949 5706
கிளை நிறுவனங்கள் :-
web:- sasikalearners.com
email:- sasikadrivingschool@gmail.com
உரிமையாளரின் தொடர்புக்கு:
0777 226 247/ 077 614 0361





| மல்லாகம் | பண்டத்தரிப்பு | சங்கானை | சாவகச்சேரி | காரைநகர் | நெல்லியடி | யாழ் மத்தி (Town) | புன்னாலைக் கட்டுவன் | வேலணை |
| --- | --- | --- | --- | --- | --- | --- | --- | --- |
| T.P: 021 224 3393 070 301 3014 077 343 6622 | T.P: 021 225 2333 071 255 4135 077 434 3798 | T.P: 021 225 1664 070 301 3016 077 434 3149 | T.P: 021 227 0616 071 577 0616 077 435 3995 | T.P: 021 225 2454 070 510 2484 | T.P:021 226 0999 071 755 0999 077 261 2446 | T.P: 021 222 8004 070 301 5004 070 301 3017 077 998 6247 | T.P: 021 224 5001 076 384 0684 077 934 6509 | T.P: 021 221 5472 070 301 3012 |

காலைக்கதிர் Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## பதவியில் கண் வைத்திருப்போர்

தனக்கு மூக்குப் போனாலும் பரவாயில்லை, எதிரிக்கு சகுனம் பிழைத்தால் போதும் என்று பேச்சு மொழி உண்டு.

கோட்டாபயவின் அரசுத் தரப்பிலிருந்து வெளியேறி, சுயாதீனமாக இயங்கும் நாற்பது எம்.பிக்கள் அணி இப்போது அப்படிக் காரியமாற்றத் தீர்மானித்திருப்பதாகத் தெரிகின்றது.

பிரதமர் மஹிந்தர் தலைமையிலான இப்போதைய அமைச்சரவையை – அரசை – கவிழ்க்கச் செய்தால் இடைக்கால அரசு என்ற பெயரில் தாங்கள் கோலோச்சலாம் என்பது இந்த சுயாதீனக்குழுவினரின் கருத்து.

பிரதானமாக விமல் வீரவன்ஸ, உதய கம்மன்பில, வாசுதேவ நாணயக்கார போன்ற தரப்பினரின் நப்பாசை அதுதான். நாட்டில் ஏற்பட்டிருக்கின்ற அரசியல் நெருக்கடியை வசமாகப் பயன்படுத்தி பதவியை – அதிகாரத்தை – தாங்கள் எப்படியும் ஈட்டிக் கொள்வதுதான் அவர்கள் எண்ணம்.

ஆரம்பத்தில் என்னவோ ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவை வீட்டுக்கு அனுப்பப் போகின்றோம் என்ற கோஷத்துடன்தான் – இலங்கை மக்களிடையே இப்போது கிளர்ந்திருக்கும் எழுச்சியுடன் சேர்ந்து, அரசியல் பயணம் செய்யப் போகின்றவர்கள் மாதிரித்தான் – இக்குழுவினர் – தரப்பினர் – ஆரவாரம் காட்டினர். ஆனால் இப்போது அவர்கள் நிலை என்ன?

'கோட்டா கோ ஹோம்' என்ற பொதுமக்களின் எழுச்சியுடன் கைகோர்ப்பதை விடுத்து, 'மஹிந்த கோ ஹோம்' என்று சுரத்தை – சுருதியை – மாற்றி இப்போது அபஸ்வரம் இழுத்துக் கொண்டிருக்கின்றனர் அவர்கள்.

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ பதவி விலகி, இடைக்கால அரசாங்கத்தை அமைக்க இடம் தரவில்லை எனில் எதிர்க்கட்சியினால் – ஐக்கிய மக்கள் சக்தியினால் – சமர்ப்பிக்கப்படவுள்ள அரசுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணையை ஆதரிப்பதற்கு இந்த சுயாதீனக் குழுவினர் முடிவு செய்திருக்கின்றனராம்.

இது தொடர்பில் அக்குழுவினர் ஐக்கிய மக்கள் சக்தியுடன் பல சுற்றுப் பேச்சுக்களை நடத்தியுள்ளனர். அந்த நம்பிக்கையில்லாப் பிரேரணை வெற்றியடையுமாயின் இடைக்கால அரசாங்கத்தை நிறுவுவது தொடர்பிலான திட்டங்கள் குறித்தும் அந்த சுயாதீனக் குழு கலந்துரையாடியுள்ளது என்றும், இடைக்கால அரசாங்கத்தின் அமைச்சரவை உறுப்பினர்களை இருபதுக்குக் கீழ் மட்டுப்படுத்திக் கொள்வது குறித்தும் யோசனைகள் முன்வைக்கப்பட்டுள்ளன என்றும் கூட செய்திகள் வெளியாகியிருக்கின்றன.

ஆக, சோழியன் குடுமி சும்மா ஆடவில்லை என்பது தெளிவு. கோட்டாவை வீட்டுக்கு அனுப்ப வேண்டும், இந்த ஆட்சிப் பீடத்தைத் தலைகீழாக மாற்ற வேண்டும் என்பவை எல்லாம் இவர்களுக்கு இரண்டாம் பட்சம்தான்.

தாங்கள் பதவிக் கதிரைக்கு – அதிகாரத்துக்கு – எப்படி வருவது என்பது மட்டுமே இவர்களின் பிரதான இலக்கு. அதற்காக எந்த அரசியல் உருட்டல், பிரட்டல்களுக்கும் அவர்கள் தயங்கார் என்பது இப்போக்கிலிருந்து தெளிவாகின்றது.

நம்பிக்கையில்லாப் பிரேரணை மூலம் கோட்டாவை வீட்டுக்கு அனுப்ப முடியாது என்பது இன்றைய நிலையில் தெளிவு. ஆகவே அதை விடுத்து, குறைந்த பட்சம் கோட்டாபயவின் அதிகாரத்தைப் பிடுங்கும் கைங்கரியத்தையாவது முதலில் நாம் செய்ய வேண்டும்.

கோட்டாவின் சகோதரர் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவே அதை முன்னின்று செய்வார் என்றால் அதற்காகக் கூட அவரை ஆதரிக்கலாம்.

ஆகவே நம்பிக்கையில்லாப் பிரேரணை விடயத்தில் தமிழர் தரப்புகள் ஒன்றுக்கு இரண்டு தரம் சிந்தித்துதான் அணி சேர வேண்டும். அதற்கு சற்று அரசியல் தீர்க்கதரிசனப் பார்வையும் அவசியம்.

# கோரிக்கைகளுக்கு செவி சாய்த்து ஜனாதிபதி பதவி விலக வேண்டும்!

## மக்கள் காங்கிரஸ் தலைவர் ரிஷாத் வலியுறுத்து!



சஜித் பிரேமதாஸ தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தி, சபாநாயகரிடம் சமர்ப்பித்துள்ள அரசமைப்பு திருத்த பிரேரணைக்கு நாடாளுமன்றில் அங்கம் வகிக்கும் அனைத்து பிரதிநிதிகளும் வாக்களிப்பதன் மூலமே, இந்த நாட்டை மீண்டும் சுபீட்சம் அடையச் செய்ய முடியும் என மக்கள் காங்கிரஸ் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ரிஷாத் பதியுதீன் தெரிவித்தார்.

எதிர்க்கட்சி அலுவலகத்தில் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கருத்துத் தெரிவித்த அவர் மேலும் கூறியவை வருமாறு:–

'ஜனாதிபதி ஆவதற்கு முன்னரே கோட்டாபய ராஜபக்ஷ நாட்டை ஆட்சி செய்வதற்கு தகுதியற்றவர் என நாங்கள் பல தடவை கூறி இருக்கிறோம். கலாநிதி கொல்வின் ஆர் டி சில்வா, நிறைவேற்று அதிகாரம் தொடர்பில் ஒருமுறை கருத்து தெரிவிக்கையில், 'பைத்தியக்காரன் ஒருவன் நாட்டின் ஜனாதிபதியாகி, அவரிடம் இவ்வளவு அதிகாரங்களும் ஒப்படைக்கப்படுமானால், இந்த நாடு குட்டிச் சுவராகி, நாசமடைந்துவிடும்'. – என்றார். இன்று நான் அவ்வாறு சொல்லவில்லை, வீதிகளிலும் காலி முகத்திடலிலும் பல நாள்களாக ஆர்ப்பாட்டம் செய்து வருபவர்கள் கோட்டாவுக்கு எதிராக கோஷமிடுவதுடன், 'கோட்டா கோ ஹோம்' எனக் கூறுகின்றனர். இவர்களில் புத்திஜீவிகள், இளைஞர்கள், பொதுமக்கள் மட்டுமன்றி அவரது கட்சிக்கு வாக்களித்த லட்சக்கணக்கானோர் அவருக்கு பைத்தியம் என்று கூறுகின்றனர். எனவே, அவர் செய்த தவறுகள்தான் இந்த நிலை ஏற்பட்டமைக்கு காரணம்.

வரிகளைக் குறைக்க வேண்டாம் என்றோம். அதற்கு செவிசாய்க்காமல் அதனை மீறிச் செயற்பட்டார். விவசாயத்துக்கு தேவையான அசேதன பசளைகளை வழங்குங்கள் எனக் கூறினோம். அதுவும் நடைபெறவில்லை. ஆர்ப்பாட்டம் செய்யும் விவசாயிகளை இராணுவத்தைப் பயன்படுத்தி கழுத்தைப் பிடித்து தள்ளுவோம் என்று கூறினார். இவரது பிழையான முடிவுகளாலேயே ஒரு லட்சம் விவசாயிகளும் பசியாலும் பட்டினியாலும் வாடுகின்றனர். பாதைகளில் இறங்கி ஆர்ப்பாட்டம் நடத்துகின்றனர்.

பணத்தை அச்சடிக்க வேண்டாம் என்றோம். கணக்குவழக்கின்றி அதனையும் செய்தனர் இவையெல்லாம் இவரது தீர்மானங்களே. அத்தியாவசியப்பொருள்களின் விலைகளை நேர்த்தியான முறையில் நடைமுறைப்படுத்துங்கள் என்றோம். அதையும் கேட்கவில்லை. இன்று தினக் கூலிகள் மாத்திரமின்றி அரச அதிகாரிகளால் கூட வாழ முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. இதுவும் இவரது பிழையான முடிவே. நாட்டின் பொருளாதார ஸ்திரம், டொலரின் இருப்பு தொடர்பில் நாடாளுமன்றத்துக்கு வெளிப்படுத்துங்கள் என்றோம். ஆகக் குறைந்தது நாடாளுமன்றத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் கட்சிகளின் தலைமைகளுக்காவது கூறுங்கள் என்றோம். அதையும் கருத்தில் எடுக்கவில்லை. அதேபோன்று, சர்வதேச நாணய நிதியத்திடம் செல்லுங்கள் என்றோம். நடைபெறவில்லை. எனவே, ஒவ்வொரு விடயங்களிலும் கோட்டா தவறிழைத்திருக்கிறார்.

20 ஆவது திருத்தத்தைக் கொண்டுவந்த போது, அவருக்கு எதிராக செயற்பட்ட கட்சிகளின் எம்.பிக்களை பிரித்தெடுத்து அதனை நிறைவேற்றினார். திட்டமிட்டு செய்த நடவடிக்கையே இது. இவ்வாறு பார்க்கின்ற போது, அன்று கொல்வின் கூறியமை போன்றே அவர் செயற்படுகின்றார். எனவேதான் அவரை மக்கள் வீட்டுக்குப் போகச் சொல்கின்றனர்.

கோட்டாவுக்கு நாட்டு மக்கள் மீது பாசம் இருந்தால் மக்களின் வேண்டுகோளை ஏற்று, தன்னுடைய பதவியை இராஜினாமா செய்ய வேண்டுமென வேண்டுகோள் விடுக்கின்றோம். இவ்வாறு வேண்டுகோள் விடுக்கும் மக்கள் பிரதிநிதிகளான நாங்கள் நாடாளுமன்ற அதிகாரத்தை பயன்படுத்தி, அதிகபட்சம் என்ன செய்ய முடியும் என தேடி ஆராய்ந்து வருகிறோம்.

மீண்டும் 19ஆவது திருத்தத்தைக் கொண்டுவந்து, நல்ல அம்சங்களை புகுத்தி ஜனாதிபதி முறைமையை நீக்கி நாட்டை சரியான வழியில் கொண்டு நடத்த எத்தனிப்போம். மக்களின் வேண்டுகோளை ஏற்று 21ஆவது திருத்தத்தைக் கொண்டுவருவதற்கு ஆலோசித்து வருகிறோம். சஜித் பிரேமதாஸவின் தலைமையில் இதனை முன்கொண்டு செல்ல முயற்சிக்கின்றோம். சபாநாயகர் மற்றும் சட்டமா அதிபரிடம் இந்தப் பிரேரணை ஒப்படைக்கப்பட்டுள்ளது. சபாநாயகர் இதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

நாடாளுமன்றில் அங்கம் வகிக்கும் 225 எம்.பிக்களுக்கும் இந்த சந்தர்ப்பத்தில் தார்மீக பொறுப்பு உள்ளது. ஜனாதிபதி மக்களின் கோரிக்கையை ஏற்றுக்கொள்ளாது, 'செவிடன் காதில் ஊதிய சங்கு போல்' இருக்கும் போது, நாடாளுமன்ற உறுப்பினர்களிடமே இந்தப் பிரேரணையை நிறைவேற்றும் கடப்பாடு உண்டு. நிறைவேற்று அதிகாரத்தை நீக்கி, 19ஆவது திருத்தத்தின் ஊடாக பொலிஸ், நீதித் துறையின் சுயாதீனத் தன்மையைக் கொண்டு வருவதும் இவர்களின் கடப்பாடாகும்.

பொருளாதாரத்தை கட்டியெழுப்புவதற்கான திட்டங்களும் அமுல்படுத்தப்பட்டு, இந்த அசாதாரண சூழ்நிலையை இல்லாமல் ஆக்குவதற்கு இதன் மூலம் வித்திடலாம். இதன்மூலமே நாடு ஸ்திரமடையும். எனவே, எமது திருத்தத்துக்கு எல்லா சக்திகளும் ஆதரவளித்து, நாட்டிலே நல்லாட்சியைக் உருவாக்கி, நாட்டின் அவப் பெயரை இல்லாமல் ஆக்க முன்வர வேண்டும். – என்று கூறினார்.

# அதிபர், ஆசிரியர்கள் வேலை நிறுத்தம் எதிர்வரும் ஏப்ரல் 25ஆம் திகதியாம்

நாட்டில் நிலவுகின்ற பொருளாதார மற்றும் அரசியல் பிரச்சினைகள் தற்போதைய அரசாங்கத்தால் உருவாக்கப்பட்டதாகும். ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மற்றும் முழு அரசாங்கமும் பதவி விலக வேண்டும் என அழுத்தம் கொடுக்கும் போராட்டம் நாடு முழுவதும் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றது. இந்தப் போராட்டத்துக்கு அதிபர் ஆசிரியர்கள் தொழிற்சங்க கூட்டமைப்பு முழுமையான ஆதரவினை வழங்கிவருகின்றது.

தற்போதைய சூழ்நிலையில் அனைத்து தரப்பினரும் பாதிக்கப்பட்டிருப்பதுடன் எரிபொருள் தட்டுப்பாடு மற்றும் எரிபொருள் விலையேற்றம் காரணமாக மாணவர்கள் மற்றும் அதிபர், ஆசிரியர்கள் பாடசாலைக்கு செல்லுவதற்கு மிகவும் கஷ்டப்படும் நிலையும் காணப்படுகின்றது. இப்பிரச்சினைக்கு தீர்வாக மாணவர்களை அவர்களின் வீட்டுக்கு அருகில் உள்ள பாடசாலைக்கு இணைத்துக் கொள்வதோடு, ஆசிரியர்களையும் அவர்களின் வீட்டிற்கு அருகில் அமைந்துள்ள பாடசாலைக்கு தற்காலிக இணைப்பு வழங்குமாறும் அல்லது வேறு தகுந்த நடவடிக்கை எடுக்குமாறும் 2022.04. 20 திகதி கல்வி அமைச்சின் செயலாளருக்கு கடிதம் மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது.

இச்சூழலில் பாடசாலை மாணவர்கள் மற்றும்அதிபர்ஆசிரியர்களுக்குபாடசாலைக்கு வருகை தருவதற்கான போக்குவரத்து பிரச்சினைக்கு சரியான தீர்வை மேற்கொண்டு தீர்வினை வழங்க கோரி அனைத்து அதிபர் ஆசிரியர்களும் மற்றும் ஆசிரிய ஆலோசகர் அனைவரும் 2022 ஏப்பிரல் 25ஆம் திகதி திங்கட்கிழமை வேலை நிறுத்தத்தில் ஈடுபட உள்ளனர் என கல்வி அமைச்சின் செயலாளருக்கு கடிதம் மூலம் அறிவித்துள்ளதாக இலங்கை ஆசிரியர் சேவை சங்கத்தின் உப தலைவர் சுந்தரலிங்கம் பிர தீப் தெரிவித்துள்ளார்.

# அருந்ததி

இணைய திருமண சேவை

www.arunthathee.com
+94 777 164 524

## மணமகன் விபரம் (மணமகள் தேவை)

**23701 | வே | 1988**
சதுமலை | இந்து | BSC
Network Engineer
மகம் (சிம்மம்)
177 செ.மீ | செவ்: 01

**23662 | வே | 1991**
மிருசுவில் | MIT, BSC, MBA
Junior Network Engineer
அவுஸ்ரேலியா | கிறிஸ்தவம்
157 செ.மீ

**23671 | வே | 1991**
குரும்பசிட்டி | B.Com
Junior Bank Executive
திருவோணம் (மகரம்)
180 செ.மீ | இந்து

**23584 | வே | 1992**
மல்லாகம் | இந்து
BSC, MBA | Engineer
அனுஷம் (விருச்சிகம்)
170 செ.மீ | செவ்: 01

**23563 | வே | 1993**
உரும்பிராய் | இந்து | BIT
IT Officer | அவுஸ்ரேலியா
திருவோணம் (மகரம்)
171 செ.மீ | செவ்: 02

**23551 | செ.மு | 1993**
முல்லைத்தீவு | இந்து | A/L
Own Business | அவுஸ்ரேலியா
ரோகிணி (ரிஷபம்)
160 செ.மீ | செவ் : 12

**23524 | வே | 1996**
கொக்குவில் | இந்து | B.Eng
Software Engineer
சித்திரை (கன்னி)
168 செ.மீ

**23515 | வே | 1994**
மிருசுவில் | இந்து | B.Eng
Real Estate Agent | கனடா
பூரம் (சிம்மம்)
192 செ.மீ

**23512 | வே | 1991**
இணுவில் | இந்து | A/L
Supervisor | மலேசியா
அனுஷம் (விருச்சிகம்)
170 செ.மீ | செவ் : 12

**23500 | வே | 1986**
திருநெல்வேலி | இந்து | BSC
Quantity Surveyor
மிருகசீரிடம் (மிதுனம்)
188 செ.மீ

**23470 | வே | 1990**
பருத்தித்துறை | BSC
Quanitity Surveyor | ஓமான்
கேட்டை (விருச்சிகம்)
152 செ.மீ | இந்து

**23464 | வே | 1990**
கந்தர்மடம் | இந்து | MBBS
Doctor | லண்டன்
அவிட்டம் (மகரம்)
182 செ.மீ | செவ் : 07

**23452 | வே | 1986**
காங்கேசன்துறை | BD.
Accounts & Finance | Accounts
Manager | லண்டன் | இந்து
ரோகிணி (ரிஷபம்) | 186 செ.மீ

**23419 | வே | 1986**
கைதடி | இந்து | B.Tech
Quality Controller
திருவாதிரை (மிதுனம்)
178 செ.மீ

**23410 | வே | 1992**
கொக்குவில் | இந்து | BSC
Registered Nurse
அனுஷம் (விருச்சிகம்)
172 செ.மீ | அமெரிக்கா

**23377 | வே | 1986**
உடுவில் | இந்து | MBA
Administrator | லண்டன்
ரோகிணி (ரிஷபம்)
170 செ.மீ

**23359 | வே | 1988**
உடுவில் | இந்து
ACCA | Accountant
கேட்டை (விருச்சிகம்)
179 செ.மீ | செவ் : 07

**23356 | வே | 1998**
மட்டக்களப்பு | இந்து | BSC
Intern QA Engineer
பூரம் (சிம்மம்)
178 செ.மீ

**23347 | ந | 1991**
நல்லூர் | இந்து | A/L
Chef | பிரான்ஸ்
அத்தம் (கன்னி)
168 செ.மீ | செவ் : 12

**23332 | வே | 1993**
திருநெல்வேலி | இந்து | A/L
Staff | சுவிட்சர்லாந்து
திருவோணம் (மகரம்)
178 செ.மீ | சூ.செவ் : 02

**23305 | வே | 1991**
உரும்பிராய் | B.Eng, MSC,
Reading PHD | Reseacher
நோர்வே | பூரம் (சிம்மம்)
இந்து | சூ.செவ்: 05 | 178 செ.மீ

**23287 | வே | 1990**
காரைநகர் | இந்து | B.Eng
Software Consultant
பூராடம் (தனுசு)
173 செ.மீ

**23266 | வே | 1993**
அரியாலை | கிறிஸ்தவம் | MSC
Cyber Security Engineer
பிரான்ஸ் | பூரட்டாதி (கும்பம்)
170 செ.மீ

**23275 | வே | 1994**
புங்குடுதீவு | இந்து | BSC
Micro Biologist
மகம் (சிம்மம்)
169 செ.மீ | செவ் : 04

**23251 | வே | 1987**
வேலணை | இந்து | BSC
Development Officer
சதயம் (கும்பம்) | செவ்: 08
167 செ.மீ

## மணமகள் விபரம் (மணமகன் தேவை)

**23713 | வே | 1996**
கரவெட்டி | இந்து | BSC
Waiting for Graduation
அனுஷம் (விருச்சிகம்)
160 செ.மீ

**23710 | வே | 1996**
நெல்லியடி | இந்து
BSC | Student
திருவோணம் (மகரம்)
151 செ.மீ | சூ.செவ்: 06

**23695 | வே | 1989**
நெல்லியடி | இந்து | A/L
Searching for a Job
உத்திரம் (கன்னி)
156 செ.மீ | செவ்: 01

**23668 | வே | 1988**
திருகோணமலை | Divorced
A/L | Tesco Manager
உத்திரம் (கன்னி) | லண்டன்
செவ்: 07 | 168 செ.மீ | இந்து

**23653 | வே | 1991**
நல்லூர் | இந்து | MBBS
Doctor | நோர்வே
அத்தம் (கன்னி)
154 செ.மீ | சூ.செவ் : 06

**23650 | வே | 1991**
பருத்தித்துறை | இந்து
ACCA | Executive Bank
ஆய்யிலியம் (கடகம்)
155 செ.மீ | செவ்: 01

**23638 | வே | 1993**
வெள்ளவத்தை | இந்து
MBBS | Doctor
பூரட்டாதி (மீனம்)
171 செ.மீ | சூ.செவ்: 10

**23614 | வே | 1993**
மானிப்பாய் | இந்து | இந்தியா
B.Tec, MBA, M.Phil, B.Ed
Student | சுவாதி (துலாம்)
170 செ.மீ | செவ் : 01

**23596 | வி | 1991**
வண்ணார்பண்ணை | இந்து
AAT | Audit Assistant
சதயம் (கும்பம்)
149 செ.மீ | செவ் : 08

**23599 | வே | 1997**
திருகோணமலை | இந்து | A/L
Searching for a Job
கார்த்திகை (மேடம்)
157 செ.மீ

**23530 | வே | 1998**
உடுப்பிட்டி | B.Eng, MBA
Software QA Engineer
கேட்டை (விருச்சிகம்) | இந்து
160 செ.மீ | செவ்: 07

**23527 | வே | 1994**
நெடுந்தீவு | இந்து | MBBS
Final Year Student
அத்தம் (கன்னி)
168 செ.மீ | சுவிட்சர்லாந்து

**23491 | வே | 1993**
சாவகச்சேரி | B. Fine Arts
Development Officer
திருவோணம் (மகரம்)
170 செ.மீ | இந்து

**23473 | வே | 1984**
வவுனியா | Widowed | BA
Development Officer
பரணி (மேடம்) | இந்து
155 செ.மீ | சூ.செவ்: 10

**23458 | வே | 1992**
ஏழாலை | இந்து | BSC
Assistant Civil Engineer
பரணி (மேடம்)
164 செ.மீ

**23353 | வே | 1992**
தெள்ளிப்பளை | இந்து
BSMS | Doctor
சித்திரை (துலாம்)
155 செ.மீ

**23326 | வே | 1994**
உரும்பிராய் | இந்து | BSC
Reading MSC | Lecturer
மூலம் (தனுசு)
163 செ.மீ

**23284 | வே | 1992**
வவுனியா | இந்து
BSC | Engineer
சித்திரை (துலாம்)
172 செ.மீ | செவ் : 07

**23248 | வே | 1994**
ஆவரங்கால் | இந்து | BBA,
ACCA, MBA | Analyst
விசாகம் (துலாம்)
166 செ.மீ | சூ.செவ் : 09

**23242 | வே | 1998**
வட்டுக்கோட்டை | இந்து | BSC
Project Manager
பூசம் (கடகம்)
165 செ.மீ

## அருந்ததி பிரைவட் லிமிடட்

**18, ராமகிருஸ்ணா அவினியு, வெள்ளவத்தை | 20 கே.கே.எஸ் வீதி கொக்குவில்**


கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 071 7354308
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இற்கு விசேட விலைக்கழிவாக 30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with Panner & Ghee - 900/=
Chiken Fried Rice with Vegetable - 1100/=
Kothu Rotty With Vegitable in Indian Style
DESSERT
ice Cream Cup - 60/=
Fruit Salad - 60/=
I ce Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
jUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Swchpees Tin - 250/=
Coca Cola Tin - 250/=

# மருத்துவக் கதிர்



## பாத எரிச்சலும் அதற்கான தீர்வுகளும்

நீரிழிவு நோயாளிகளுக்கு, இரத்த சர்க்கரையின் அளவானது சாதாரண அளவை விட அதிகமாக இருக்கும். மற்றும் மூகிளிசரைட்டுகள் போன்ற கொழுப்புகளும் அதிகமாக இருக்கும். காலப்போக்கில் இவை கைகளிலும் கால்களிலும் உள்ள நரம்புகளை சேதப்படுத்தும். சர்க்கரை நோய் தொடர்ந்து கடுமையாக இருக்கும்போது உடலில் உள்ள புறநரம்புகள் எல்லாமே பாதிக்கப்படும்.

காலில் ஏற்படுகின்ற தொடு உணர்வு, வெப்ப உணர்வு, வலி உணர்வு, அதிர்வு போன்றவற்றை மூளைக்கு எடுத்துச் சென்று நமக்கு உணர்த்துவது புற நரம்புகள்தான். இந்த நரம்புகள் பாதிக்கப்படும் போது நரம்பு செல்களில் செய்திகள் கடத்தப்படும் வேகம் குறைகிறது. மேலும் நிலையான அல்லது அவ்வப்போது தோன்றக்கூடிய ஓர் எரியும் உணர்வை இது ஏற்படுத்தும்.

பாதத்தில் எரிச்சல் ஏற்படுவதில், நரம்பு சார்ந்த பிரச்சினைகளுக்கு முக்கியப் பங்கு உண்டு. எரிச்சல் ஏற்படுவதற்கு முன், உணர்ச்சியற்று இருப்பது, கூச்சம் ஏற்படுவது போன்ற அறிகுறிகள் இருந்தால் உடனடியாக மருத்துவ ஆலோசனை பெற்று, இரத்தச் சர்க்கரை அளவைக் கட்டுக்குள் கொண்டுவர வேண்டும்.

மற்ற நரம்புகளுடன் ஒப்பிடும்போது, கால் நரம்பு பாதிப்பு மிக அதிகமாக இருக்கும். அப்போது கீழ்க்காணும் அறிகுறிகள் ஏற்படும்:-

1. கால் மரத்துப்போகும்
2. காலில் எரிச்சல் ஏற்படும்
3. மதமதப்பு உண்டாகும்
4. ஊசி குத்தும் வலி உண்டாகும்
5. எரிச்சலும் வலியும் இரவில் அதிகமாக இருக்கும்
6. பஞ்சு மேல் நடப்பது போலிருக்கும்
7. பாதங்கள் குளிர்ந்திருக்கும்
8. செருப்பு கழன்று போவது கூட தெரியாத அளவுக்கு உணர்வு குறைந்து போகும்.

விற்றமின் குறைபாடு இருப்பவர்களுக்கு, பாத எரிச்சல் ஏற்படலாம். குறிப்பாக, விற்றமின் **B6**, விற்றமின் **B12** குறைபாடு மற்றும் போலிக் அமிலம், தயமின் அல்லது கல்சியம் குறைபாடுகள் இருப்பவர்களுக்கு, காயங்கள், நாள்பட்ட சிறுநீரக நோய்கள் இருப்பவர்களுக்கு இந்தப் பிரச்சினை ஏற்படும். விற்றமின் **B12**, அசைவ உணவுகளில் அதிகம் இருக்கும். அசைவத்தைத் தவிர்ப்பதோடு, விற்றமின் **B12** நிறைந்த சைவ உணவுகளையும் எடுத்துக் கொள்ளாதவர்களுக்குப் பாத எரிச்சல் ஏற்படலாம்.

விற்றமின் **B3** என்று அழைக்கப்படும் நியாசின், இரத்த ஓட்டத்தை மேம்படுத்தவும், நரம்புகளை வலிமைப்படுத்தவும், நரம்புகளுக்கு கொடுக்கப்படும் அழுத்தத்தைத் தடுக்கவும் உதவுகிறது. இந்த விற்றமின் **B3** நிறைந்த உணவுகளை அதிகம் உட்கொண்டு வந்தால், பாதங்களில் ஏற்படும் எரிச்சலைத் தடுக்கலாம். இந்த விற்றமின் குறைபாடு ஏற்பட்டாலும், பாதங்களில் எரிச்சல் உணர்வை அனுபவிக்கக்கூடும். ஆகவே முழு தானிய பொருள்கள், பால், தயிர், பச்சை காய்கறிகள், பீன்ஸ், பட்டாணி, வேர்க்கடலை மற்றும் முட்டை மஞ்சள் கரு போன்றவற்றை உணவில் அதிகம் சேர்த்துக் கொள்ள வேண்டும்.

பைபாஸ் அறுவைச் சிகிச்சை செய்தவர்கள், உடல் எடையைக் குறைப்பதற்காக அறுவைச் சிகிச்சை செய்தவர்கள், அல்சர் பிரச்சினை இருப்பவர்கள், வயிற்றுப் பகுதியில் ஏதேனும் அறுவைச் சிகிச்சை செய்தவர்களுக்கு ஊட்டச்சத்துகளை அகத்துறுஞ்சுவதில் சில நாள்கள் சிக்கல் இருக்கும். அதனாலும் கூட பாத எரிச்சல் ஏற்படும்.

சர்க்கரைநோய், உயர் இரத்த அழுத்தம் காரணமாக சிறுநீரகம் பாதிக்கப்பட்டால், அதன் செயல்திறனில் பாதிப்புகள் ஏற்படலாம். இதனால் உடலில் உள்ள நீரைச் சுத்திகரிப்பதில் சிக்கல் ஏற்பட்டு நரம்பு மண்டலங்கள் பாதிக்கப்பட்டு பாத எரிச்சல் ஏற்படலாம்.

ஆர்த்ரைட்டிஸ், தொற்றுப் பிரச்னைகள், ஊட்டச்சத்துக் குறைபாடு போன்றவற்றால் நரம்பு மண்டலம் பாதிப்புக்குள்ளாவதால் பாத எரிச்சல் ஏற்படலாம். சில நேரங்களில், சிகிச்சையின் பக்கவிளைவாகக்கூட பாத எரிச்சல் ஏற்படலாம்.

நீண்ட காலமாக அதிகபடியான குடிப்பழக்கம் உள்ள நபர்களுக்கு, அவர்களின் கால்களுடன் இணைக்கப்பட்டுள்ள நரம்புகள் சேதமடையக் கூடும். இது உங்கள் நரம்புகளை ஆரோக்கியமாக வைத்திருக்க தேவையான ஊட்டச்சத்துக்களைக் குறைக்கும்.

நாம் உண்ணும் சில உணவுகள் மூலம் ஈயம், ஆசனிக், பாதரசம் போன்ற இரசாயனங்கள் உடலில் சேர வாய்ப்புள்ளது. இவை, ஊட்டச்சத்துகளைக் அகத்துறிஞ்சும் உடலின் செயல்பாட்டில் பாதிப்பை ஏற்படுத்தும். சமையல் பாத்திரங்கள், பரிமாறும் பாத்திரங்களை நன்கு சுத்தப்படுத்தி பரிமாறுவதன் மூலம் இந்த இரசாயனங்கள் உடலுக்குள் செல்வதைத் தவிர்க்கலாம். ஈயப் பாத்திரங்களில் நீண்டநேரம் உணவை வைப்பதைத் தவிர்க்க வேண்டும்.

உடலில் தைரொயிட்டு ஹார்மோனின் சுரப்பு அதிகரித்து நரம்பு மண்டலம் பாதிப்புக்குள்ளாவதாலும் பாத எரிச்சல் ஏற்படலாம். 'ஹைப்போ தைராய்டிசம்' இருப்பவர்களுக்கு,பாத எரிச்சல் அதிகமாக இருக்கலாம். தைரொய்டு அளவைக் கட்டுக்குள் வைத்துக் கொண்டால் இதைத் தவிர்க்கலாம்.

எய்ட்ஸ் நோயால் பாதிக்கப்பட்டவர்களில் 1/3 பகுதியினர் தங்கள் நரம்புகளில் சேதத்தை எதிர்கொள்கின்றனர்.

தரையைச் சுத்தப்படுத்த பயன்படுத்தும் சலவைத் தூள், சவர்க்காரம், துப்புரவாக்கும் திரவங்கள் காலில் நேரடியாகப் பட்டால் அதிலுள்ள இரசாயனங்களால் ஒவ்வாமை ஏற்பட்டு பாதத்தில் எரிச்சல் ஏற்படலாம். சுகாதாரப் பணியாளர்கள், சிகையலங்கார நிபுணர்கள், இயந்திர வல்லுநர்கள் மற்றும் துப்புரவாளர்கள் இதனால் அடிக்கடி பாதிக்கப்படுகிறார்கள். இதை பயன்படுத்திய சில மணி நேரங்களுக்குள் ஒவ்வாமை ஏற்படலாம் அல்லது நேரம் கழித்து கூட இது நிகழக்கூடும்.

**பாத எரிச்சலில் இருந்து தீர்வினைப் பெறுவது எப்படி?**

பாத எரிச்சலைக் குணப்படுத்த வேண்டுமானால், முதலில் இரத்த சர்க்கரையின் அளவைக் கட்டுப்படுத்துவது முக்கியம்.

மஞ்சளில் உள்ள குர்குமின், உடல் முழுவதும் இரத்த ஓட்டத்தை மேம்படுத்தும். மேலும் மஞ்சளில் உள்ள அழற்சி எதிர்ப்பு பண்புகள், பாதங்களில் ஏற்படும். எரிச்சல் உணர்வு மற்றும் வலியைக் குறைக்க உதவும். 2 தேக்கரண்டி மஞ்சள் தூளை எடுத்து நீர் சேர்த்து பசை போன்று செய்து, எரிச்சல் உணர்வு உள்ள பாதங்களில் தடவி உலர வைத்து கழுவ வேண்டும்.

எப்சம் உப்பு பாதங்களில் உள்ள எரிச்சலில் இருந்து உடனடி நிவாரணம் அளிக்கும். எப்சம் உப்பு நரம்புகளின் செயல்பாட்டிற்கு உதவும். அதற்கு ஒரு அகலமான வாளியில் சிறிதளவு எப்சம் உப்பு போட்டு, வெதுவெதுப்பான நீர் ஊற்றி கலந்து, அந்நீரினுள் பாதங்களை 10 – 15 நிமிடம் ஊற வைக்க வேண்டும். இப்படி ஒரு நாளைக்கு ஒருமுறை என சில நாள்கள் தொடர்ந்து பின்பற்ற வேண்டும்.

பாதங்களுக்கு எண்ணெய்களைக் கொண்டு மசாஜ் செய்வதன் மூலம், பாதங்களில் இரத்த ஓட்டம் அதிகரிக்கும். இதனால் பாதங்களில் ஏற்படும் எரிச்சல் மற்றும் அசௌகரியத்தில் இருந்து நிவாரணம் கிடைக்கும். இரவு தூங்கும் முன் வெதுவெதுப்பான தேங்காய் எண்ணெய் அல்லது ஆமணக்கு எண்ணெயால் பாதங்களுக்கு குறைந்தது 10 நிமிடம் மசாஜ் செய்து வருவது மிகவும் நல்லது.

குளிர்ச்சியான நீர் பாதங்களில் ஏற்படும் எரிச்சலில் இருந்து நிவாரணம் அளிக்கும். அதற்கு ஒரு அகலமான வாளியில் குளிர்ச்சியான நீரை நிரப்பி, அந்நீரில் பாதங்களை சில நிமிடங்கள் ஊற வைக்கலாம். பின் சிறிது இடைவெளி விட்டு, மீண்டும் குளிர்ந்த நீரில் ஊற வைக்க வேண்டும். இப்படி ஒரு நாளைக்கு பல முறை செய்து வர சிறந்த பலனை காணலாம். ஆனால் ஐஸ் கட்டிகளையோ அல்லது குளிர் சாதனப் பெட்டியில்



வைத்த நீரையோ நேரடியாக பாதங்களில் பயன்படுத்துவதைத் தவிர்க்க வேண்டும்.

விற்றமின் B3 என்று அழைக்கப்படும் நியாசின், இரத்த ஓட்டத்தை மேம்படுத்தவும், நரம்புகளை வலிமைப்படுத்தவும், நரம்புகளுக்கு கொடுக்கப்படும் அழுத்தத்தைத் தடுக்கவும் உதவுகிறது. இந்த விற்றமின் B3 நிறைந்த உணவுகளை அதிகம் உட்கொண்டு வந்தால், பாதங்களில் ஏற்படும் எரிச்சலைத் தடுக்கலாம்.

இந்த விற்றமின் குறைபாடு ஏற்பட்டாலும், பாதங்களில் எரிச்சல் உணர்வை அனுபவிக்கக்கூடும். ஆகவே முழு தானியப் பொருள்கள், பால், தயிர், பச்சைக் காய்கறிகள், பீன்ஸ், பட்டாணி, வேர்க்கடலை மற்றும் முட்டை மஞ்சள் கரு போன்றவற்றை உணவில் அதிகம் சேர்த்துக் கொள்ள வேண்டும்.

சோற்றுக்கற்றாழையில் உள்ள சோற்றை பாதத்தில் தடவி ஒரு மணி நேரம் கழித்து சுத்தம் செய்தால் பாத எரிச்சல் குறையும், பாத வெடிப்பு குணமாகும்.

பழங்காலத்தில் நாம் மருதாணியை அதிகம் பயன்படுத்துவதுண்டு. அதை இப்போதும் பயன்படுத்தினால் பாத எரிச்சல் குறையும். மருதாணியில் எலுமிச்சை சாறு சேர்ந்து நன்கு அரைத்து அதை பாதத்தில் பூசி அரைமணி நேரம் கழித்து பாதத்தை சுத்தம் செய்து வந்தால் பாத எரிச்சல் குறையும்.

நிரந்தரமாக பாத எரிச்சலில் இருந்து விடுபட வேண்டுமேயாயின் எமது உடலில் உள்ள நோய்களை கண்டறிந்து அதற்கான உரிய சிகிச்சைகளை பெற்றுக் கொள்வதே சிறந்த வழியாகும்.

# RADIANT DAWN
A Sunday Supplement in English to Kalaikkathir

Page I English for all Sunday the 24th of April 2022

**We welcome students' articles in word for publication**
-Editor-
kalaikkathiredu@gmail.com



# A BUTTERFLY

**A butterfly is a beautiful insect. It's body has three main divisions. They are the head, the thorax or the chest and the abdomen. It has two compound eyes on its head. It has a pair of anntena that helps it to feel and find food. It has a long tube like mouth named proboscis to suck the honey from flowers.**

**A butterfly has a pair of beautiful wings attached to the first two segments of the thorax. It has six legs,( two each) attached to the three segments of the thorax. It's abdomen or or it's stomach is divided into segments. Butterflies fly about in groups in the fields and gardens. They sit on the soft petals of flowers and suck honey. Watching butterflies of different colours in the gardens is a delight.**

## *ANSWER THESE QUESTIONS*

**1 . How many main divisions does a butterfly have?**
**2. Name the three main divisions.**
**3. What type of eyes doe a butterfly have?**
**4. How do the antennas help a butterfly?**
**5. What helps a butterfly to suck honey?**
**6.What are the two pairs of wings attached to?**



## Match the statements (A) with the best expressions (B)

| (A) | (B ) |
|---|---|
| 1. Kalyanis very beautiful isn't she? | a) You hit the nail on the head. |
| 2. I'm very very busy,' | b) Yes, she is gorgeous. |
| 3. Your sareee must be very expensive. | c) Yes , he is a vegetable. |
| 4. Rajani is a silly guy. | d) My head is splitting . |
| 5. I have a headache. | e) My hands are full. |
| 6. My stomach is upset. | f) He is a bookworm. |
| 7. David reads a lot. | g) I have a sweet tooth. |
| 8. I'm fond of sweet things. | h) Yes, they are dime a dozen. |
| 9. What you say is absolutely true. | i ) Yes it cost me a fortune. |
| 10. Chinese phones are very cheap. | j) My tummy is rebelling.p |



1-b / 2-e/ 3-i/ 4-c/ 5-d/ 6-j/ 7-b/ 8-f / 9-a/ 10-h

## *Match a noun under A and a noun under B to make a new word.*

### *Fill in the blanks with the new words*

1. Meena is waiting at the ----------- to catch the first bus.
2.The flight arrived at the --------------------------- on time.
3. Dad parked the car at the------------------------------------
4. The express train will arrive at the -----------------------
5. I'm going to post the letter at the--------------------------

| A | B |
|---|---|
| railway | park. |
| bus | office. |
| car | station. |
| post | port. |
| air | stop |

## *B - FILL IN THE BLANKS WITH THE CORRECT WORDS FROM THE LIST GIVEN BELOW.*

**Blue Water Lilly / dry / island / mother / Sinharaja/ Daladha Maligawa/ jungle fowl. / mountain, / wet / mountain**

1. SriLanka is our ---------- mother land.
2. SriLanka is a beautiful.------------------
3. Our National Bird is the ----------------
4. Our National Flower is ------------------
5. Pidurutalagala is our highest ----------
6. Anuradhapura is in the --------zone.
7. Ratnapura is in the ------------- zone.
8.-------------- is the vast rain forest
9. -------------is a beautiful waterfall.
10.----------- is a beautiful temple

## Choose the correct response for each of the sentences:

1. If they hadn't been drunk, the doorman ________.
1) would have let them in
2) had let them in

2. If you ________ your last exam, you would have graduated in May.
1) have not failed
2) hadn't failed

3. My mother ________ this apartment if she had known it was so noisy.
1) wouldn't have rented
2) did not rent

4. I would not _______ to see this movie if I had known how boring it was.
1) go
2) have gone

5. If I hadn't lost my cellphone, I _______ you.
6) would have called
7) would call

6. If I hadn't driven so fast, I _______ into an accident.
1) would not get
2) would not have gotten

7. If the store _______ open, I would have bought some food.
1) would be
2) had been



8. I _______ on time if I hadn't missed the bus.
1) had been
2) would have been

9. If you hadn't changed your hairstyle, I ________ you.
1) would have recognized
2) had recognized

10. If I _______ full, I would have eaten more.
1) would not have been
2) hadn't been

**"Stay positive. Better days are on their way" - Unknown**




***WHAT IS THE IMF?***

The International Monetary Fund (IMF) works to achieve sustainable growth and prosperity for all of its 190 member countries. It does so by supporting economic policies that promote financial stability and monetary cooperation, which are essential to increase productivity, job creation, and economic well-being. The IMF is governed by and accountable to its member countries.

***WHAT DOES THE IMF DO?***

The IMF has three critical missions: furthering international monetary cooperation, encouraging the expansion of trade and economic growth, and discouraging policies that would harm prosperity. To fulfill these missions, IMF member countries work collaboratively with each other and with other international bodies.

***Why is IMF monitoring important?***

Vigilant monitoring by the IMF is essential to identifying stability and growth risks that may require remedial policy adjustments. Moreover, international cooperation on these efforts is critical in today's globally integrated economy, in which the problems or policies of one country can affect many others. IMF membership, which includes all but a handful of the world's nations, can facilitate this cooperation. IMF monitoring includes both bilateral surveillance, focused on individual member countries, and multilateral surveillance, or oversight of the global economy.

***Consulting with member states***

IMF monitoring typically involves annual visits to member countries. During these visits IMF staff engage government and central bank officials in discussions about risks to domestic and global stability as well as policies and reforms to address those risks. These discussions focus on exchange rate, monetary, fiscal, and financial policies, in addition to macro-critical structural reforms. IMF staff also typically meet with other stakeholders, including members of the legislature and representatives from the business community, labor unions, and civil society, among other groups. Comprehensive discussions with a broad array of groups leads to better evaluations of each country's economic policies and outlook.

Upon completion of their evaluation IMF staff present a report to the Executive Board for discussion. The Board's views on the report are then transmitted to the country's authorities, concluding a process known as an Article IV consultation. In recent years, surveillance has become more transparent and most member countries now publish a press release summarizing the staff report and accompanying analysis, as well as the views of the Board.

***Global oversight***

The IMF also monitors regional and global economic trends and analyzes the impact that member country policies may have on neighboring countries and the global economy. It issues periodic reports on these trends and analysis. The World Economic Outlook provides detailed analysis of the global economy and its growth prospects, addressing issues such as the macroeconomic effects of global financial turmoil and the potential for global spillovers, especially those that may result from the economic, fiscal, and monetary policies of large, globally central economies such as the United States, China, and the euro area. The Global Financial Stability Report assesses global capital markets and financial imbalances and vulnerabilities that pose potential risks to financial stability. The Fiscal Monitor updates medium-term fiscal projections and assesses developments in public finances. The IMF also publishes regional economic reports that provide detailed analysis of major regions of the world.

The IMF cooperates closely with other groups, including the Group of Twenty industrialized and emerging market economies, and since 2009 has supported the G20's efforts to sustain international economic cooperation through its mutual assessment process. The IMF analyzes member country policies to determine how consistent they are with the goal of sustained and balanced global growth. External Sector Reports analyze and assess the external positions of 29 of the world's largest economies, plus the euro area. The analysis systematically assesses current accounts, exchange rates, external balance sheet positions, capital flows, and international reserves. Twice a year the IMF issues a Global Policy Agenda that pulls together the key findings and policy advice from multilateral reports and proposes a future policy agenda for the IMF and its members.

***Adapting surveillance to evolving global challenges***

The IMF periodically reviews its surveillance activities to better adapt to changes in the global economy. Reflecting a heightened awareness of the implications of financial interconnectedness across countries, the 2011 review focused on multilateral surveillance. This laid the foundation for the 2012 Integrated Surveillance Decision, which clarified that IMF surveillance should focus on policies related to members' domestic and balance-of-payments stability, as well as systemic stability. In September 2012 the Board endorsed a Financial Surveillance Strategy that proposed concrete steps to further strengthen IMF monitoring activities. Together these reforms led to an overhaul of the surveillance toolkit and update of the legal framework.

The 2014 Triennial Surveillance Review supported these reforms, and the 2018 Interim Surveillance Review, which took stock of progress in advancing the TSR's recommendations, found that IMF surveillance had become better adapted to the global conjuncture during 2014-17. The ongoing Comprehensive Surveillance Review (CSR) is considering how to adapt surveillance for the global landscape of 2021-30. The CSR has identified four broad surveillance priorities to better support the membership in the period ahead: (i) confronting risks and uncertainties; (ii) preempting and mitigating spillovers; (iii) fostering economic sustainability; and (iv) adopting a more unified approach to policy advice. A key objective of the CSR is to strengthen the traction of the IMF's policy advice by realigning how the IMF engages with member countries in line with these surveillance priorities.

# THE EVOLUTION OF COLOR IN FILM FEATURE

***Written by Taraneh Niakan***

Cinema was born in black-and-white, and this forced early filmmakers to develop a mastership of light and dark. With decades of development, filmmakers now have more and more technology to bring their vision to life. Today, the power of color remains strong as ever, and modern filmmakers have the flexibility of digital cameras and color-grading programs.

From the silent films of the 1890s, our first filmmakers began experimenting with tinting and toning to move our visual experience closer to reality. These attempts were far from today's standards though nonetheless necessary steps in the development of Kinemacolor (1908-1915) and Technicolor. Technicolor produced their first color film, The Gulf Inbetween (1917), with their two-color method. The introduction of sound in 1927 posed problems, but by 1932, Technicolor perfected its three-color process that didn't affect sound recording. Technicolor offered vibrant colors in a durable process unprecedented from anything before.

The founder and president of Technicolor was Herbert T. Kalmus (1881-1963). His wife, Natalie Kalmus (1878-1965), saw the entrepreneurial potential of Technicolor and began selling it to Hollywood and Europe. She oversaw the entire coloring process, becoming the head director for Technicolor and referring to herself as "ringmaster of the rainbow." She supervised vital operations that related to color, including lighting, camera, set design, costumes, and post-production. Her hearty list of credits on IMDB includes close to 400 films. She was the head color director on the most well-known color films, such as Wizard of Oz (1939), Gone with the Wind (1939), and Disney's first colorized cartoon, Flowers and Trees (1932).

Though Technicolor was gaining popularity, it was expensive- too expensive to last. In 1950, Eastman Kodak marketed Eastmancolor, his more affordable three-color system. Technicolor still made a legacy, though, with era-defining films such as The Godfather (1973) and Susperia (1977). By the 1990s, filmmakers began to switch to digital. Film reels were expensive, and advancements in digital camera afforded more takes with less money. Digital video became a style in itself, and eventually, cameras were out-competing each other with pixels, higher definition, and ranges of color. Digital color-grading created new tones with vibrant colors that stimulated audiences like never before. The Matrix (1999), shot on film, was digitized through Digital Intermediate finishing- the acclaimed cyberpunk world owing itself to the murky-green tones.



Now, color-grading is a specified field, with coveted softwares that offer different abilities, an industry favorite being DaVinci Resolve. For blockbusters and independent films alike, color-grading has become an indispensable part of the budget. Ari Aster, director of the vibrantly-colored horror film, Midsommar (2019), spoke about how the movie's LUT (color template) mimics the nostalgic Technicolor-feel.

Many modern filmmakers try to emulate the legacy that Technicolor left behind. Anna Biller's The Love Witch (2016) was shot on 35mm film and pays homage to the Technicolor-era more than one way. With close to endless possibilities, making a movie in film versus digital, or black-and-white versus color, is a bold stylistic move, done by choice and not by necessity. Examples of black-and-white color schemes used as a stylistic advantage include A24's The Lighthouse (2019), an eery time-piece, and the Iranian-vampire-western, Girl that Walks Home at Night (2014).

The creative discretion on HOW to shoot a movie has become a passionate undertaking to directors, cinematographers, and editors alike. Filmmakers continue to push the boundaries of what color can do for a movie's tone. The innovation of this medium throughout history has afforded today's filmmakers with more options than ever to captivate audiences, getting only more and more spectacular.



## குட்டிக் கதை ஒன்று படித்துப் பாருங்கள்




# கிணற்றுக்குள் வைர மோதிரம்



அந்த ஆண்டு கோடைக்காலம் மிகக் கடுமையாக இருந்தது. ஆறு, குளங்கள், கிணறுகள் வற்றிப் போயின. செடி, கொடிகள் வாடி வதங்கின. நண்பகலில் தெருக்கள் வெறிச்சோடிப் போயின. வெயிலுக்கு பயந்து மக்கள் தங்கள் வீடுகளுக்குள்ளேயே முடங்கிக் கிடந்தனர்.

ஒரு நாள் அதிகாலையில், சக்கரவர்த்தி அக்பர், சில அதிகாரிகள் புடைசூழ வெளியே உலாவக் கிளம்பினார். பீர்பலும் அவர் கூடவே சென்றார். அக்பர் கோடையின் கொடுமையைப் பற்றி பேசிக் கொண்டே வந்தார். அவர்கள் செல்லும் வழியில் ஒரு கிணறு தென்பட்டது. அதைப் பார்த்த அக்பர், தலைநகரில்உள்ள கிணறுகள் யாவும் வற்றி விட்டன என்று கேள்விப்பட்டேன். இந்தக் கிணற்றில் தண்ணீர் இருக்கிறதா? பார்ப்போம் என்று சொல்லிக் கொண்டே அதன் அருகில் சென்று குனிந்து பார்த்தார்.

இது மிகவும் ஆழமான கிணறு. அடியில் தண்ணீர் இருக்கிறதா, இல்லையா என்றே தெரியவில்லை என்று அக்பர் கூறவும், அதைக் கேட்ட பீர்பால், பிரபு! தண்ணீர் இருக்கிறதா என்று அறிய ஒரு கல்லைத் தூக்கிப் போட்டால் தெரிந்து விடுமே! தண்ணீர் இருந்தால் கல்பட்டு தெளிக்கும், என்று சொல்லிவிட்டு, கிணற்றினுள் ஒரு கல்லை எறிந்தார். கல் அடியில் சென்று விழுந்த ஒலியைக் கேட்டதுமே, கிணறு முற்றிலும் வற்றியுள்ளது என்று தெரிந்தது.

பீர்பால்! கிணற்றினுள் ஒற்றைக் கல்லாகப் போடக் கூடாதென்று சொல்லுவார்கள். அதனால் இன்னொரு கல்லை நான் போடுகிறேன் என்று சொல்லிக் கொண்டே, தன் விரலில் இருந்த ஒரு வைர மோதிரத்தை அக்பர் கிணற்றினுள் போட, சுற்றியிருந்த அனைவரும் திகைத்துப் போயினர்.

பிரபு! வைரமோதிரத்தை ஏன் போட்டீர்கள்? என்று பீர்பால் கேட்க, வைரமும் ஒரு கல்தானே! அதனால்தான் போட்டேன் என்றார் அக்பர். ஆயினும் கல்லெல்லாம் வைரக்கல்லாகுமா? நீங்கள் செய்தது சரியா? என்று பீர்பால் கேட்டார்.

அதனால் என்ன, பீர்பால்! யாரையாவது கிணற்றில் இறங்கச் சொல்லி மோதிரத்தை எடுத்து விட்டால் போகிறது! என்ற அக்பர் தொடர்ந்து, கிணற்றுள் இறங்கினால் யார் வேண்டுமானாலும் மோதிரத்தை எடுத்து விடலாம். ஆனால் யாராவது கிணற்றுக்குள் இறங்காமலே அந்த மோதிரத்தை எடுக்க முடியுமா? என்று கேட்டார்.

முடியவே முடியாது, பிரபு! என்றார் கூட இருந்த பிரமுகர் ஒருவர். முடியாதது என்று ஒரு காரியமும் இல்லை. முயன்று பாருங்களேன் என்று அக்பர் சொல்ல, பிரபு! அது யாராலும் செய்ய முடியாத காரியம் என்றார் அதே பிரமுகர். மற்றவர்களும் அதை ஆமோதித்தனர்.

பீர்பால்! நீ என்ன நினைக்கிறாய்? என்று அக்பர் கேட்க, அதைப் பற்றித்தான் நானும் யோசிக்கிறேன் என்ற பீர்பால், தன் தலைப்பாகையை அவிழ்த்துவிட்டுத் தனது தலையைச் சொறிந்தார்.தலையைச் சொறிந்தால் மட்டும் யோசனை தோன்றி விடுமா? என்று மிட்டாலால் என்ற அதிகாரி பீர்பாலை நோக்கி ஏளனத்துடன் கேட்டார். தலையைச் சொறிந்தால் எனக்கு நல்ல யோசனை தோன்றும்.

ஆனால் உங்களுக்குத் தோன்றாது. என்று பீர்பால் லாலை நோக்கிக் கூறினார். எனக்குத் தோன்றாது, ஆனால் உனக்குத் தோன்றுமோ? அது எப்படி? என்று மிட்டாலால் கேலியாகக் கேட்க, எனக்கு மூளைஇருக்கிறது. அதனால் தலையைச் சொறிந்ததால் மூளை வேலை செய்யும். ஆனால் உங்களுக்கு என்ன செய்தாலும் யோசனை தோன்றாது என்று பீர்பால் அவனுக்கு பதிலடி கொடுத்தார். பிரபு! எனக்கு யோசனை தோன்றிவிட்டது! என்று பீர்பால் உற்சாகத்துடன் கூற, அப்படியா? நீ எப்படி மோதிரத்தை கிணற்றுள் இறங்காமலே எடுப்பாய்? என்று ஆர்வத்துடன் அக்பர் கேட்டார்.

நூலின் மறுமுனையை கிணற்றுக்கருகே இருந்த ஒரு மரத்துடன் சேர்த்துக் கட்டினார். பிறகு, வைரக்கல்லைக் குறிபார்த்து ஏற்கெனவே கிணற்றின் உள்ளேஇருந்த சாணத்தின் மீது வீசியெறிந்தார். கல் சரியாக சாணத்தின் மீது விழுந்தது.

தன்னுடைய வேலைக்குத் தானே ஒரு சபாஷ் போட்டுக் கொண்டு, அங்கிருந்த காவலர்களை அதைப் பார்த்துக் கொள்ளச் சொல்லிவிட்டு பீர்பால் வீடு திரும்பினார். வீடு திரும்பியபின் உணவருந்தி விட்டு நிம்மதியாகத் தூங்கினார். பிறகு மாலையில் எழுந்து கிணற்றை நோக்கிச் சென்றார். காலையில் அவர் வீசியெறிந்த சாணம் வெயிலில் நன்றாகக் காய்ந்து உலந்திருந்தது. அதன் மீது அவர் வீசிய கல்லும் சாணத்துடன் நன்றாக ஒட்டிக் கொண்டிருந்தது. பிறகு பீர்பால் மிகவும் நிதானமாகவும், ஜாக்கிரதையாகவும் நூலைப் பிடித்து மேலே இழுக்க, கல் கிணற்றுக்குள்இருந்து மேலே வந்துவிட்டது. கல்லில் ஒட்டிய சாணமும் உலர்ந்து போய் அதனுடன் சேர்ந்து பத்திரமாக இருந்தது. அதிலிருந்து மோதிரத்தை எடுத்து, சுத்தமாகக் கழுவியபின், பீர்பால் அரண்மனை தர்பாருக்குச் சென்றார்.

அந்த நேரத்தில் அக்பர் தர்பாரில் தன் அதிகாரிகளுடன் அமர்ந்திருந்தார். அவரை வணங்கிய பீர்பால், பிரபு! நான் வெற்றிகரமாகத் தங்கள் மோதிரத்துடன் வந்திருக்கிறேன் என்றதும் அக்பருக்கு ஆச்சரியம் தாங்க முடியவில்லை.

கிணற்றுள் இறங்காமலேயே மோதிரத்தை எடுக்க உன்னால் எப்படி முடிந்தது? என்று அக்பர் ஆவலுடன் கேட்க மூளையைப் பயன்படுத்தினால் முடியாதது ஒன்றுமில்லை என்று நீங்கள் சொன்னதை நிரூபித்து விட்டேன் என்று கூறிய பீர்பால், தான் மோதிரத்தை மீட்டதை விளக்கிக் கூறினார். பலே! சபாஷ்! உன்னைப் போல் புத்திசாலியை நான் பார்த்ததே இல்லை! என்று பாராட்டிய அக்பர் பொற்காசுகள் நிரம்பிய பையை பீர்பாலுக்குப் பரிசளித்தார்.

## எழுதுகோல் தெய்வம் – பாரதி



‘எழுதுகோல் தெய்வம் இந்த எழுத்தும் தெய்வம்’ என்று பாடிய பாரதி உண்மையான எழுத்துக்கு உதாரணமாக வாழ்ந்தவர். இப்படிப்பட்ட எழுத்தாளர் பொன்னுக்கும், பொருளுக்கும் மட்டுமல்ல, புகழுக்கும்கூட எழுதுகிறவன் அல்ல.

உலகம் உய்ய வேண்டும் என்பதைத் தவிர, வேறு நோக்கம் இல்லை. அவன் படைப்புகள் காலம் கடந்து வாழ்கிறபோது அவனும் வாழ்கிறான் அவனால் மனித சமுதாயமும் வாழ்கிறது.

## புத்தகக் களமே வெற்றியைத் தேடித்தரும்



புதிய உலகத்தைப் படைப்பதற்கும், புரட்சிப் பாதையைக் காட்டுவதற்கும் போர்க்களத் தைவிட புத்தகக் களமே வெற்றியைத் தேடித்தந்திருக்கிறது. அதனால்தான் வாளின் வலிமையைவிட எழுது கோலின் வலிமையே பெரிது என்பதை நெப்போலியன் போன்ற மாவீரர்களே ஒத்துக் கொண்டனர். ‘நாம் எழுத்தால் புத்தகத்தால் சண்டை போடுகிறோம்’ என்று ஷேக் ஸ்பியர் கூறியமையும் அதனால் தான்.

1789 ஆம் ஆண்டு உலக வரலாற்றின் போக்கையே மாற்றியமைத்த பிரெஞ்சுப் புரட்சி தொடங்கியது. அதற்கான சிந்தனைகளை அடிமைப்பட்டுக் கிடந்த மக்களிடம் விதைத்து விட்டுப் போன மாபெரும் எழுத்துலகச் சிற்பிகள் வால்டேரும், ரூசோவும் என்பதைக் காலம் மறக்குமா? ரூசோவின் ‘சமுதாய ஒப்பந்தம்’ என்னும் நூலில் உள்ள வாசகங்களே பிரெஞ்சுப் புரட்சியின் சுதந்திரப் பிரகடனத்திலும், அமெரிக்க சுதந்திரப் பிரகடனத்திலும் இடம்பெற்றன.

மானிட சமுதாயம் ஏற்றத்தாழ்வற்ற நல்வாழ்வு வாழ வேண்டும் என்ற வெறியோடும், ‘நெறியோடும் கார்ல் மார்க்ஸ் படைத்தளித்த காபிடல்’ என்னும் மூலதனம் இன்றுவரை உலகில் ஆட்சி செய்து கொண்டிருக்கிறது. 1883 இல் அவர் சிந்திப்பதை நிறுத்தும்வரை எழுதிக் கொண்டிருந்தார்.



காலைக்கதிர் வார இதழ்
Kalaikkathir

# ஆச்சரியம் நிறைந்த தம்புள்ளை பொற்கோவில்



குகை ஓவியங்களுக்கு பிரசித்தி பெற்ற தம்புள்ளை பொற்கோவில், இலங்கையின் மத்திய மாகாணத்தில் மாத்தளை மாவட்டத்தில் அமைந்துள்ளது. இதுவரை 80க்கும் மேற்பட்ட குகைகள் இப்பகுதியில் கண்டறியப்பட்டுள்ளன. அதில் 5 குகைகள் மிகவும் முக்கியமானவைகளாக கொள்ளப்படுகின்றன. இங்கு புத்த பெருமானின் 153 சிலைகளும், அரசர்களின் சிலைகளும், 4 தெய்வ சிலைகளும் காணப்படுகின்றன. அந்த 4 தெய்வ சிலைகளில் இந்துக் கடவுள்களான விஷ்ணு, பிள்ளையார் சிலைகளும் அடங்கு கின்றன.

ஆதி காலங்களில் வெறும் குகைகளாக மட்டுமே பார்க்கப்பட்டு வந்த இது, முதல் நூற்றாண்டுகளில் தான் கோவில்களாக மாற்றப்பட்டது. வலகம்பா எனும் மன்னன் தென்னிந்தியர்களால் அனுராதபுரத்திலிருந்து நாடு கடத்தப்பட்டு 15 ஆண்டுகளுக்குப் பிறகு மீண்டும் தன் தலைநகரை கைப்பற்றியதால் தனது கடவுளுக்கு நன்றி செலுத்தும் விதத்தில் தான் இக்குகைகள் கோவில்களாக மாற்றப்பட்டது என்கிறது வரலாறு.

இது அனுராதபுர காலத்தில் கி.மு. 1ஆம் நூற்றாண்டு முதல் கி.பி.923 வரையான காலப்பகுதியாகும். இக்குகை கோவில்களில் புத்தமத தாக்கம் அதிகமாக காணப்பட்டாலும், இலங்கைக்கு புத்தமதம் வரும் முன்னரே 3,000 ஆண்டுகளுக்கு முன்பு இக்குகைகளில் மனிதர்கள் வாழ்ந்திருப்பதற்க்கான புதைபடிமங்கள் மற்றும் எலும்புக்கூடுகள் போன்ற சான்றுகள் கிடைத்துள்ளன என ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர்.

இலங்கையில் பெரும்பாலும் சிங்களவர்களே புத்த மதத்தவராக இருப்பதால் இக்குகையின் கலை மற்றும் கலாசார அம்சங்கள் சிங்கள இனத்தவர்கள் சார்ந்தே அமைக்கப்பட்டுள்ளது. இங்குள்ள குகைகளில் மொத்தமாக 1,500 க்கும் மேற்பட்ட ஓவியங்கள் வரையப்பட்டுள்ளன.

தம்புள்ளை பொற்கோவில் மத்திய மாகாணத்தின் தலைநகர் கண்டியிலிருந்து வடக்கே 27 கிலோமீற்றர் தூரத்தில் அமைந்திருக்கிறது பொற்கோவில். அண்ணார்ந்து பார்க்கும் அளவுக்கு புத்தர் சிலை ஒன்று சாந்தமாய் அமர்ந்திருக்க அமைக்கப்பட்டுள்ளது.

1991 இல் உலக பாரம்பரியங்களில் ஒன்றாக அறிவிக்கப்பட்டது. குகைக் கோவிலாக சிறப்புப் பெற்றுள்ள இந்த பொற்கோவிலைச் சுற்றி 80 இற்கும் மேற்பட்ட குகைகள் இதுவரை கண்டு பிடிக்கப்பட்டுள்ளன. இவற்றில் 5 குகைகளில் 4 இந்துக் கடவுள்களான விஷ்ணு, பிள்ளையார் சிலைகளும், கௌதம புத்தரின் 153 சிலைகளும், 3 அரசர்களின் சிலைகளும் காணப்படுகின்றன. அமர்ந்த, நின்ற, சயன நிலை என புத்தர் சிலைகள் வெவ்வேறு தோற்றங்களில் காணப்படுகின்றன.

ஓவியங்கள் என்றதும் மனதுக்கு வருவது சிகிரிய ஓவியங்கள் மட்டும் தான் ஆனால் தம்புள்ளை குகை ஓவியங்கள் நம் நாட்டிற்கே உரித்தான கலை அம்சங்களைக் கொண்டவை என்பது குறிப்பிடத்தக்கது. 2,100 மீற்றர் பரப்பளவுக்கு சுவர் ஓவியங்கள் வரையப்பட்டுள்ளமையுடன் புத்தரும், அவரின் போதனைகளை கேட்கும் சீடர்களும் ஓவியங்களாக தீட்டியுள்ளனர். 18ஆம் நூற்றாண்டு காலப்பகுதியில் இவ் ஓவியங்கள் தீட்டப் பட்டன என நம்பப்படுகின்றது. இவ் ஓவியங்கள் அழிவ டையாது பாதுகாப்பதற்காக 1938 ஆம் ஆண்டு கதவுகள்செய்யப்பட்டுகுகைகள்பூட்டிவைக்கப்பட்டுள்ளன. ஏறக்குறைய 77 ஆண்டுகளுக்கு முன்பு இவ்வாறு செய்யப்பட்ட கதவுகளும் அதில் செய்யப்பட்டுள்ள வேலைப்பாடுகளும் இன்றும் அழிந்து போகாமல் இருப்பதுஅதிசயம். பௌத்தர்களின் கலைக்கலாசாரத்துடன் ஒன்றிணைந்து முதலாம் நூற்றாண்டில் வலகம்பா மன்னனால் கட்டப்பட்டது இவ் விகாரை. மன்னனின் பாதுகாப்பிற்காக இவ்விகாரை அமைக்கப்பட்டிருக்கலாம் என நம்பப்படுகின்றது.

இங்குள்ள 16 பெரிய புத்தர் சிலைகளும், அமர்ந்த சிலையில் உள்ள 40 புத்தர் சிலைகளும் வலகம்பா மன்னனால் பூஜிக்கப்பட்டவை. இவ்வாறு தோற்றம் பெற்ற இவ்விகாரை 11 ஆம் நூற்றாண்டு காலப்பகுதியில் பௌத்தர்களின் முக்கிய வணக்கஸ்தலமாக மாற்றமடைந்தது. 1190 ஆம் ஆண்டு காலப்பகுதியில் நிஸங்கமல்லனால் இவ்விகாரை வழிப்படப்பட்டுள்ளதுடன் 70 புத்தர் சிலைகளுக்கு தங்கமுலாம் பூசப்பட்டுள்ளது. அதன் பின்னர் 12 ஆம் நூற்றாண்டில் மேலும் 50 புத்தர் சிலைகளுக்கு தங்க முலாம் பூசப்பட்டுள்ளதாக ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர்.

அனுராதபுரத்துக்குட்பட்ட இவ்விகாரை இலங்கையின் இறுதி சுயாதீன அரசான கண்டி இராச்சிய 18 மன்னர்களாலும் பராமரிக்கப்பட்டு வந்ததுடன், புனருத்தாரணம் செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இவ்வாலயத்தில் இன்னுமோர் சிறப்பு உள்ளது. உண்மையில் இவ்வாலயத்தில் உள்ள தண்ணீர்க் குடம் ஒரு புரியாத புதிர் தான். மண்ணாலான இந்த குடம் ஆலயத்தில் உள்ள ஒரு கற்பாறைக்குள் அமைந்துள்ளது. பாறையில் இருந்து தண்ணீர்த் துளிகள் விழும் சத்தம் அமைதியான அந்த இடத்தில் துல்லியமாய் கேட்கும்.

சதா தண்ணீர் கொட்டிக் கொண்டிருந்தாலும் இது வரையில் இந்த குடம் நிரம்பி தண்ணீர் கீழே சிந்தியதில்லை. அதே போல் குடத்தில் விழும் தண்ணீர் எங்கே செல்கின்றது என்பதும் யாருக்கும் தெரியாது. முதலாம் நூற்றாண்டில் ஆரம்பித்த இக் கோயிலின் வரலாற்றில் இன்று வரை இது புரியா புதிராகவே தான் இருந்து வருகின்றது.

# கல்விக்கதிர்



- அகரன் -

## அரிஸ்டோட்டில்



அரிஸ்ரோட்டில் பிளேட்டோவின் சீடர். அரிஸ்ரோட்டில் தத்துவ மேதை என்பதோடு மருத்துவ விஞ்ஞானியாகவும் இருந்தார். தத்துவ ஆராய்ச்சியைத் தொடங்கி வைத்து அதன் ஒவ்வொரு கிளையையும் தழைக்கச்செய்தவர் அவர். அறிவியலில் அவருடைய பங்களிப்பு கணிசமானது. விவேகமான அணுகு முறை கொண்டவர். ‘படைப்பு நியதிகளுக்குட்பட்டது, மனித வாழ்வின் ஒவ்வொரு நிலையும் சமூகமும் நுணுகி ஆராயத்தக்கவை’ என்பது அவருடைய நூல்களில் விவரிக்கப்படுகிற உண்மை. அரிஸ்டோட்டில் மெஸி டோனியாவில் உள்ள ஸ்டகிரா நகரில் பிறந்தார். அவருடைய தந்தை புகழ்பெற்ற மருத்துவர்.

17 வயதானபோது அரிஸ்ரோட்டில் எதன்ஸ் நகரத்துக்குச் சென்று பிளேட்டோவின் கல்விக் கழகத்தில் படித்தார். அங்கே இருபதாண்டுகள் தங்கியிருந்தார். பிளேட்டோ மறைந்த பின்பு அங்கிருந்து மெஸிடோனியாவுக்குத் திரும்பினார். தம்நாட்டு அரசனுடைய 13 வயது மகனுக்கு ஆசிரியரானார். அந்த மாணவன்தான் உலகப் புகழ் பெற்ற மகா அலெக்ஸாண்டர். அவனுக்குப் பல ஆண்டுகள் ஆசிரியராகவிருந்து கல்வி கற்பித்தார். அலெக்ஸாண்டர் அரியணையேறிய பிறகு, எதன்ஸ் சென்ற அரிஸ்டாட்டில் தம்முடைய சொந்தக் கல்விக்கழகத்தை நிறுவினார்.

அடுத்த 12 ஆண்டுகளை அவர் எதன்ஸில் கழித்தார். அலெக்ஸாண்டர் அவரிடம் அறிவுரைகள் கேட்ப தில்லை. ஆனால், ஆசிரியரின் ஆராய்ச்சிகளுக்குத் தாராளமாய் பணத்தை வழங்கியிருக்கிறார். ஒரு விஞ்ஞானி தன்னுடைய ஆராய்ச்சிக்காக அரசுப் பணத்தை பெருமளவில் பெற்றதற்கு வரலாற்றில் அதுவே முதல் உதாரணமாய் இருக்கும். அரிஸ்டோட்டிலுக்கு தம்முடைய மாணவனின் சர்வதிகாரப் போக்கு அறவே பிடிக்காத ஒன்று.

தமது மருமகன் மீது துரோகக் குற்றம் சாட்டி அலெக்ஸாண்டர் அவனுக்கு மரணதண்டனை விதித்ததும் அவருடைய மனத்தை வெகுவாய் பாதித்தது. அலெக்ஸாண்டர் மரணமடைந்ததும் எதன்ஸ் நகரம் மெஸிடோனிய எதிர்ப்பாளர்கள் கைக்குப் போனது. அரிஸ்ரோட்டில் அங்கிருந்து தப்பியோடினார். அரிஸ்ரோட்டில் தம்முடைய 62 வயதில் இறந்தார். அரிஸ்ரோட்டில் ஒப்பற்ற மனிதர், பரந்த மனப் பான்மை கொண்டவர், மென்மையாக பேசும் பண்பும், அமைதியான குணமும் உடையவர். பிளேட்டோவின் கல்விக் கழகத்தில் சேர்ந்த போது பகட்டான உடைகளை அணிந்திருந்தாலும் பிற்பாடு ஆடம்பர வாழ்க்கையைக் கைவிட்டார்.

### அரிஸ்ரோட்டிலின் விஞ்ஞான ஆய்வுகள்

அவர் எழுதிய நூல்களின் எண்ணிக்கை 170 இற்கு குறையாது. ஆனால் அவற்றுள் பிழைத்திருப்பவை 47 என்கிறார்கள். நம்மை வியப்பிலாழ்த்துவது அவருடைய நூல்களின் எண்ணிக்கையல்ல, அவரது அறிவும் புலமை யும். பண்டைய கிரேக்கர்கள் அறிந்திருந்த அத்தனை பாடப் பொருள்களிலும் வானவியல், விலங்கியல், புவியியல், மண்ணியல், சரீரவியல், இயற்பியல் உட்பட அவர் நூல்கள் எழுதியிருக்கிறார். மற்றவர்கள் கண்டறிந்ததையும், தமது உதவியாளர்கள் கண்டறிந்த தகவல்களையும் பயன்படுத்தி அரிஸ்ரோட்டில் விஞ்ஞான ஆய்வுகள் செய்தார்.


அவர் சுயமாய் கருத் தூன்றிக் கவனித்த விடயங்களும் உண்டு. அவரைப் போல விஞ்ஞானத்தின் அத்தனை களன்களிலும் செயல்பட்டவர் யாருமில்லை. அத்துடன் அவர் அசலான தத்துவமேதை என்பதும் குறிப்பிடத்தக்கது. உளவியல், பொருளாதாரம், மதம், கவிதை, அரசியல், இயற்கை அறிவியல் என்று பல்வேறு பரப்புகளில் அவருடைய சிந்தனையும், எழுத்தும் சிறந்திருக்கின்றன. தர்க்கவியலைத் தொடங்கி வைத்தவர் அரிஸ்ரோட்டில் தான்.

அவருடைய கருத்துகளில் சில இன்றைய அளவீட்டுக்குப் பொருந்தாமலிருக்கலாம். ஆனால், ‘வறுமையே புரட்சிக்கும், குற்றங்களுக்கும் மூலகாரணம்,என்பது போன்ற அவருடைய கருத்துகள் நவீனமானவை, மறுக்க முடியாதவை. போதிய வசதிகளும், கருவிகளும் இல்லாத காலத்தில் அவர் செய்த மருத்துவ விஞ்ஞான ஆராய்ச்சிகள் பாராட்டத்தக்கவை. ‘மருத்துவத்தின் தந்தை’ என்ற போற்றுதலுக்கு முற்றிலும் பொருத்தமானவராகவே அவர் இருந்திருக்கிறார்.

# கலைக் கதிர்



# மிஸ்ரா ஜப்பாரின் ‘ஒரு மிடறு அடர் வெண்மை’




**விமர்சனம்**

கற்பனையின் உச்ச சாத்தியங்களாக புனைபிரதிகள் எழுகின்றன. அவை கதையாகவோ அல்லது கவிதையாகவோ அல்லது இன்னும் கண்டுபிடிக்கப்படாத ஏதேனும் ஓர் வடிவமாகவோ அமைகின்றன.

புனைவின் இயங்குவிசையாக மொழியே அமைகின்றது. புனைபிரதிகளில் கவிதைக்கும் மொழிக்குமிடையே மிக நெருங்கிய தொடர்பாடல் நிகழ்கிறது.

இதனை கவிதைப்பிரதிகளினூடே வினைத்திறனுடன் நெருக்கமுறும் வாசகன் உணர்ந்துகொள்ள முடியும்.

இவ்வகையான மொழிதல்களின் உச்சமே அல்லது மொழியின் உச்சக்கட்ட சாத்தியமே கவிதை என்பதாகும்.

இதனை இன்னொரு விதமாக கூறினால் கவிதை மொழியை பெருக்குகிறது என கூறி விடலாம்.

அண்மையில் நான் வாசித்த கவிதைப்பிரதிகளில் மொழிக்கும் கவிதைக்குமிடையிலான நெருங்கிய உறவினை அல்லது கவிதை மொழியினை பெருக்குவதன் அதிக சாத்தியங்களை கொண்டமைந்த பிரதியாக நான் காண்பது மிஸ்ரா ஜப்பார் அவர்களின் ‘ஒரு மிடறு அடர் வெண்மை’ என்பதாகும்.

கவிதைப்பிரதி குறித்து பேசுவதற்கு முன்னர் இந்த பிரதியினை தந்த மிஸ்ரா ஜப்பார் அவர்கள் குறித்தும் பேச வேண்டியுள்ளது.

இலங்கையில் இருந்து எழுத்தியக்கத்தில் இயங்குகின்ற இளைய கவிதை சொல்லியாக இவர் இருக்கிறார். சமூக வலைதளங்களின் பின்னணியிலேயே தற்கால பிரதியாளர்கள் முன்னணிக்கு வருகின்றனர் என்பது யாவரும் அறிந்த விடயமே.

அந்தவகையில் இவரும் சமூகவலைத்தளங்களில் அதிகமதிகமாக இயங்கி வருபவர். இவரின் அநேக கவிதைகளை முகநூலின் வாயிலாகவே வாசித்திருந்தேன். அதற்குமப்பால் இவர் தன்னைச் சுற்றி ஒரு மாய வலையினை கொண்டுள்ளார் என்றே கூறலாம். ஏனெனில் பொதுவெளிகளில் நடைபெறும் இலக்கிய நிகழ்வுகளில் இவர் பங்குகொண்டமைக்கான பதிவுகளோ அல்லது அடையாளங்களோ எதுவுமில்லை என்றே கூறி விடலாம்.

இவரின் இருப்பிடம் கண்டி என்பதாக இந்த நூலில் குறிப்பிடப்பட்டுள்ளது. அண்மைக்காலங்களில் காத்திரமான கவிதைப்பிரதிகளை வாசகரிடத்தே கொண்டு சேர்த்த கவிதைசொல்லி தில்லை அவர்களின் ‘தாயதி’ பதிப்பகத்தின் நான்காவது வெளியீடு இது.

தயாதி பதிப்பகத்தின் வெளியீடுகளில் கவிதைப்பிரதிகளின் பெயர்த்தெரிவும் அதன் அட்டைப்படங்களும் கனதியான செய்தியினை நல்குபவை. றஸ்மி அவர்களினால் இந்த தொகுதிக்காக வடிவமைக்கப்பட்ட படமும் அவ்வாறானதே.

‘ஒரு மிடறு அடர்வெண்மை’ என்ற சொல்லாடலே வாசகனிடத்தே அதிகமான சிந்தனைகளை தூண்டிவிடக்கூடிய ஒன்றாகிறது. மிடறு என்ற சொல்லாடல் எழுகின்ற அவசியம்தான் என்ன என நோக்குகையில் அங்கே தாகம் என்பது மறைபொருளாகிறது. அது என்ன தாகம், தாகத்துக்காக நீர்தானே அருந்த வேண்டும் ஏன் வெண்மையினை அருந்த வேண்டி நேர்கிறது என்பதையெல்லாம் கவிதை தொகுதியினுள்ளே பயணம் செய்கையில் அறிந்து கொள்ளலாம்.

தாகம் என்பதை நினைக்கையில் கவிஞர் ரூமியின் ‘தாகம் கொண்ட மீனொன்று’ தொகுதியே நினைவில் எழுகிறது. இந்த பிரதியில் முன்னுரையினை வழங்கியிருக்கும் கவிஞர் சேரன் அவர்கள் கவிதை சொல்லி மிஸ்ராவினை ‘தாகம் கொண்ட மீனென’ விளித்துள்ளமையினையும் குறிப்பிட்டாக வேண்டும். கவிஞர் ரூமி அவர்களின் கவிதைகளுக்கும் மிஸ்ராவின் கவிதைகளுக்குமிடையிலும் கூட நெருங்கிய தொடர்பினை காண முடிகிறது. ரூமி அவர்களின் கவிதைகள் போலவே மிஸ்ராவின் கவிதைகளும் இருண்மை நிறைந்துள்ளமையுடன் உள்ளொளி தேடுகின்ற தேடலாகவே அந்த கவிதைகள் அமைந்திருப்பதையும் நாம் காணலாம் .

**‘என் ஆன்மாவின்**
**கதவுகள்**
**அலையடங்கிய கடல்**
**பேரமைதி பரப்பி**
**ஆழமான சுகந்தம் ஒன்றை**
**நுகர்ந்து கொண்டிருக்கின்றன.’**

இவ்வாறு தொடங்கிவிடுகிறார். தனது முதலாவது கவிதையினை மிஸ்ரா அவர்கள். இவரது கவிதைகளின் சாரமாக இந்த கவிதை அமைந்து விடுகிறது எனலாம். கவிதையினூடே உள்ளொளி பெருக்கும் அவரது பாணி முதலாவது கவிதையிலேயே வெளிப்பட்டு நிற்கிறது. கவிதைகள் ஆன்மாவின் கதவுகளை திறக்கின்றன.

உள்ளே பார்க்கையில் அலையடங்கிய கடல் ஒன்று பேரமைதியினை பரப்பியவாறு உறங்கி கொண்டிருக்கிறது. கதவுகளான கவிதைகள் ஆன்மாவின் கதவுகளை திறப்பது மட்டுமல்ல ஆழமான சுகந்தம் ஒன்றையும் நுகர்ந்து கொண்டிருக்கின்றன. இந்த ஆழமான சுகந்தம் என்ற சொல்லாடல் அர்த்தங்களை பன்மைப்படுத்தி விடுகிறது. இவரின் கவிதைகள் வாசகனுக்குள் கதவுகளை திறந்து அமைதிக்குள் அமிழ்த்தி சுகந்தத்தினை நுகர வைப்பதுடன் தமக்குள்ளும் கதவுகளை திறந்து சுகந்தத்தினை நுகர்ந்து கொண்டிருக்கின்றன.

தன்னிலையின் முன்வைப்புக்களாக நகரும் இந்த தொகுதியின் அநேக கவிதைகள் அகத்திணையினை (ஆன்மா) புறத்திணையுடன்(கடல்) இணைத்து மாயாஜாலம் புரிகின்றன என தனது முதலாவது கவிதையிலேயே வாக்குமூலம் தந்து விடுகிறார் மிஸ்ரா.

சிறப்புமிக்க கவிஞர்கள் பலர் தங்களது ஒரு கவிதையின் மூலமாகவே நினைவுகொள்ளப்படுவதுடன் அந்த கவிதையே அவர்களின் மொத்த கவிதைகளின் சாரத்தினையும் தந்துவிடுவதனை நாம் பிரதிகளின் வாசிப்பனுபவத்தில் அறிகின்றோம்.

உதாரணமாக கூறினால் பிரமிள் அவர்களின் ‘சிறகிலிருந்து பிரிந்த இறகு ஒன்று காற்றின் தீராத பக்கங்களில் ஒரு பறவையின் வாழ்வை எழுதிச்செல்கிறது’ என்ற கவிதையானது பிரமிள் தனது கவிதைகளில் அதிகமதிகமாக கையாண்ட படிமங்களுக்கு உதாரணமாவதுடன் அவரது கவிதைகளின் உட்பொருளாக அமைந்த ஆன்மீக தேடலினையும் கொண்டிருக்கிறது.

பிரமிளின் அந்த கவிதையினை போன்றே மிஸ்ரா அவர்களின் இந்த கவிதையும் அவரது மொத்த கவிதைகளின் சாரமாகவும் கவிதைகள் எதனை நோக்கி பயணிக்கின்றன என்பதையும் விளக்கி விடுகின்றது என்றால் அது மிகையல்ல.

இவரது கவிதைகளில் இருள் என்பது படிமமாக விரவிக்கிடக்கின்றதனை காண்கிறேன். இருள் என்பது அமைதி நிறைந்தது. அமைதி நிறைந்த இருளினூடே நடக்கும் தேடலினூடே புதிய கதவுகள் திறக்கின்றன. இருள் என்பது இல்லாவிடின் ஒளி என்பதற்கு அர்த்தமே கிடையாது. ஆனால் பொதுவாக இருளினை அச்சத்தின் குறியீடாக பாவித்து ஒதுக்கி விடுவதே வெகுசன மனநிலை. எனவே இருள் என்பது வெகுசன மனநிலையில் விளிம்பு நிலையில் வைக்கப்படுகிறது. இவ்வாறு விளிம்பு நிலையில் வைக்கப்படுள்ள இருளினை தனது கவிதைகளில் மையமாக வைத்து உரையாடுகிறார் மிஸ்ரா அவர்கள்.

இருளினை படிமமாக இவரது இருவேறு கவிதைகளின் பகுதிகளை ஒன்றாக்கி வாசிக்கையில் வேறொரு பிரதி உண்டாகியது. அது வேறொரு அனுபவமாக என்னுள் முகிழ்ந்தது.

**‘நான் தனிமை இருளில்**
**மனிதர்களுக்கான எல்லாக்கதவுகளையும்**
**பூட்டிக்கொள்கிறேன்’**
(இரண்டாம் கவிதையின் ஒரு பகுதி)
**‘மூடப்பட்ட ஓர் அறையில்**
**சுவாசத்திணறலை உணர்கிறேன்**
**நேர்த்தியான கோடுகளால்**
**வகிடெடுக்கப்பட காரிருளின் சூழ்ச்சி**
**தூரத்தில் கேட்கும் இசையின் பரவசம்**
**பிரபஞ்ச கதவின் சாயல்**
**குமைகிறேன்’ (முப்பத்தியொன்பதாம் கவிதை)**

இந்த இரண்டு கவிதைகளையும் இணைத்து வாசிக்கையில் உருவாகிய புதிய பிரதி இந்த இரண்டு பிரதிகளும் தனியாக கட்டமைத்த அர்த்தத்தினையும் விடவும் புதிய அர்த்த பரிணாமத்தில் இன்னொன்றாக இருப்பதை உணர்ந்தேன் .வாழ்வின் அந்திமத்தில் நிகழும் மரணமும் மரணத்துக்கு அப்பாலான உலகை நோக்கிய பயணமும் என இதனை நான் அர்த்தம் கொள்கிறேன்.

கவிதை வெறுமனே சொற்களின் அலங்காரம் என ஒதுக்கி வைத்து கடந்து விடுபவர்கள் அநேகம், ஆனால் கவிதைகளில் வரும் சொற்களின் குணம் தனித்துவமானது. ஒரு கவிதையில் வரும் சொல் காலம், இடம், சூழல் யாவற்றினையும் கடந்து தன்னோடு வாசகனை இணைத்துக்கொள்கிறது. மேலே நான் இணைத்து வாசித்த கவிதைகளில் வந்த சொற்களும் அவ்வாறே வாசகனை இன்னுமோர் அனுபவத்தினை தந்தது என்றால் அது மிகையன்று.

**‘ரகசியங்கள் எழுத்துக்களில்**
**புதைந்து கிடக்கின்றன**
**அவை ரகசியம் என**
**அடையாளம் காண முடியாதபடி**
**புனைவுகள் சூழ்ந்திருக்கின்றன ’**

எழுத்துக்களின் ஆழம் நோக்கி பயணம் செய்கையில் விரியும் புதிய தரிசனத்தினை இந்த வரிகளில் கொண்டு வருகிறார் மிஸ்ரா. இதனை வெறுமனே எழுத்துக்களின் மீதான சாதாரண தேடல் என கடந்து விட முடியாது. எழுத்துக்களில் அடையாளம் காண முடியாத பிரபஞ்ச இரகசியம் போல ஏதோவொரு மெய்மை பரந்து கிடக்கிறது. ஆனால் அந்த இரகசியத்தினை எல்லோராலும் அடைய முடிவதில்லை. உண்மையை மூடி இருக்கும் பொய்மையினை போல இந்த இரகசியத்தினை சூழவும் புனைவுகள் சூழ்ந்திருக்கின்றன. இந்த கூற்றினை இந்த தொகுதியின் கவிதைகளுக்கும் பொருத்தி பார்க்க முடியும். தனது கவிதைகளில் மறைந்திருக்கும் இரகசியங்களை கட்டவிழ்க்க அழைப்பு விடுக்கிறார் கவிதை சொல்லி. ஆனால் ஒரு பிரதி முழுதுமாக ஆன்மீக நூல்களை போல சத்திய வார்த்தைகளினால் நிரம்பியவையுமல்ல. அதில் புனைவுகளும் உண்டு. வாசகனின் வேலை என்பது கவிதையுடன் பயணித்து அதன் மெய்ப்பொருளினை அறிந்து உணர்வதே எனலாம்.

இந்த தொகுதியின் அநேக கவிதைகள் இருண்மையினை தமக்குள்ள வைத்திருப்பவை. அந்த கவிதைகளின் உட்பொருளானது ஒரு வாசிப்பில் புரிந்து விடுவதுமில்லை. வாசகனின் அதீத ஈடுபாட்டையும் உழைப்பினையும் கோருகின்ற தற்கால கவிதைகள் வாசிப்பினை விரிக்கையில் அர்த்தங்களை பன்மைப்படுத்துபவை. இதனை இந்த தொகுதியினை முழுதுமாக வாசிக்கையில் உணர்ந்து கொள்ள முடியும்.

கவிதை ஒரு மாய விளையாட்டு எனவும் கூறலாம். மிஸ்ரா அவர்கள் இந்த தொகுதியில் இருக்கும் கவிதைகளில் நிகழ்த்தி இருப்பதுவும் ஒரு மாய விளையாட்டே. அந்த மாயங்கள் சில இடங்களில் வானவில் போல கலைந்தும் மலையினை போல நிலைத்தும் இன்னும் சில இடங்களில் பனியில் இருந்து நீராகவும் நீரில் இருந்து பனியாகவும் உருமாற்றம் செய்தும் தம்மை கவிதைகளாக நிகழ்த்துகின்றன.

**- லலிதகோபன் -**

# நாளை நானுமொரு நாட்டிய தாரகை....!

**அழகான தோகை விரித்து**
**ஆடும் மயிலே**
**அனைவரையும் வசீகரித்து**
**ஆடும் மயிலே**
**எங்கே நீயும் பயின்றாயோ**
**இந்தக் கலையை**
**அங்கே என்னை அழைத்துச்செல்**
**நானும் பயில**

**எங்கேயும் நான் கற்றதில்லை**
**இந்தக் கலையை**
**இயற்கை தந்த செல்வமடி**
**சின்னப் பெண்ணே**
**உனது ஊரில் நடனப்பள்ளி**
**நிறைய உண்டு**
**அங்கே சென்று நீ நடனம்**
**பயின்றால் என்ன**


**ஏழைகளுக்கு எட்டாத**
**நடனப் பள்ளி - அதில்**
**எப்படி நான் சேருவேனோ**
**வண்ண மயிலே**
**காசு பணம் உள்ளவர்க்கே**
**ஆன கலையாய்**
**கவின் கலையாம் நடனக்கலை**
**மாறிப் போச்சு**

**அழகழகாய் பட்டாடை**
**வாங்க வேண்டும்**
**அதற்கேற்ற அணிகலன்கள்**
**நிறைய வேண்டும்**
**இதையெல்லாம் ஏழைப்பெண்**
**நானும் வாங்க**
**எங்கேதான் போவேனோ**
**சொல்லு மயிலே!**

**இப்படியோர் நிலையு முண்டா**
**சின்னப் பெண்ணே**
**இதை நானு மறியேனே**
**ஏழைப் பெண்ணே**
**கவலை விடு உன்குடிசை**
**நாடி வந்து நான்**
**காசுபணம் ஏதுமின்றி ஆடல்**
**கற்றுத் தருவேன்!**

**நெல்லிதாசன் - திருகோணமலை**

# வாழ்க்கை ஒரு முறைதான்



சிலர் எப்படி அனைத்து சூழ்நிலைகளிலும் மகிழ்ச்சியாக இருக்கிறார்கள்? என்ற கேள்வி பலருக்கு எழுவது சாதாரணமாகிவிட்டது.

. மகிழ்ச்சி வேண்டுமெனில் வாழ்க்கையில் சிலவற்றை மறந்து செல்லுங்கள்.

முடியவில்லை என்றால் மறக்க இயலாத வற்றை கடந்து செல்லுங்கள்

மகிழ்ச்சி என்பது வசதிகளில் இல்லை. நாம் சிரிக்கும் ஒவ்வொரு தருணங்களிலும், செய்யும் ஒவ்வொரு செயலிலும் இருக்கிறது. ஒவ்வொரு நொடியையும் அனுபவித்து வாழவேண்டும் ஏனென்றால் வாழ்க்கை ஒரு முறைதான் .



## நமது வாழ்க்கையின் உண்மையான மதிப்பு என்ன

ஊரோடு ஊராக, ஆளோடு ஆளாக, பத்தோடு பதினொன்றாக, நித்தமும் தின்றேன், உறங்கினேன், இருந்தேன், வாழ்ந்தேன். என்பதற்காக நாம் பிறக்கவில்லை.

நிலத்தில் எத்தனையோ இருக்கு. வளருது மடியுது.

ஆனால் தங்கத்திற்கும் வைரத்திற்கும் எப்போதுமே மவுசு தான் ஏன் தெரியுமா ? ஆயிரம் ஆயிரம் காலம் அது பூமிக்குள்ளே இருக்கும். வெளியில் தெரியாமல் அமைதியாக கிடக்கும். ஆனால் அது இருக்கும் இடம் தேடி மனிதன் தானே சென்று. அதற்கு உரிய மரியாதையை மதிப்பை வழங்குகிறான்.

நமது படிப்பு, அந்தஸ்து, செல்வாக்கு, என்பதெல்லாம் மழை நேரத்தில் பூமியில் துளிர்விடும் காளான்கள் போல. காலத்திற்கெல்லாம் அது உதவாது.

நமது வாழ்க்கையின் உண்மையான மதிப்பு என்பது..? குறைந்தபட்சம் உன் கடமைகளை செய்!! அதிகபட்சம் உன்னால் முடிந்த சாதனைகள் செய்!! நீ சுவாசிக்கும் காற்று-ஒவ்வொரு நிமிடமும் உனது குருதியை உயிர்ப்பித்துக் கொண்டு இருப்பது போல வாழும் நாட்களில் ஒவ்வொரு நாளும் உலகுக்கென்று, உன் குடும்பத்திற்கு என்று இருங்கள்.

**உன்னால் முடிந்ததை செய்!!**
**முடிந்ததெல்லாம் செய்!!**

யாரும் எண்ணிப்பார்த்தால் வியக்கும் அளவு செய்!! உன் செயல்கள் உன் மரணத்தின் பின்பும் எல்லோர் மனங்களிலும் நிலைத்திருக்கும்படி செய்!!

ஒவ்வொரு நாளும் இதை நினைத்துத்தான், இப்படித்தான் வாழ்க்கையை உண்மையான மதிப்பு உடையதாய் ஆக்கிக் கொள்ள வேண்டும்.

வாழ்க்கையை உண்மையான மதிப்பு உடையதாய் ஆக்குவதில் தான் வாழ்க்கையின் சிறப்பே இருக்கிறது. உன்னுடைய பிறப்பின் அர்த்தமே இருக்கிறது.





ப்ரியமதா பயஸ்

# வாழ்க்கையின் உண்மையான பாடங்கள்

வாழ்க்கையில் நீங்கள் கற்றுக்கொண்ட உண்மையான பாடங்கள் என்னவென்றால் நாம் யார் மேலாவது அதிகமாகப் பாசம் வைத்திருப்போம். அவர்களுக்காக நாம் எல்லா தியாகங்களும் செய்வோம். அவர்கள் சந்தோஷத்துக்காக எது வேண்டும் என்றாலும் செய்ய நினைப்போம்.

நம்மைவிடவே அவர்களுக்கு அதிக முக்கியத்துவம் தருவோம்.நமக்கு இரண்டாம் இடம் கொடுத்து அவர்களுக்கு முதல் இடம் கொடுத்திருப்போம் நம்ம மனதில் .

அந்த நபர் யாரா வேண்டுமானாலும் இருக்கலாம். குடும்பத்துக்காகவோ, காதலுக்காகவோ, நட்புக்காகவோ நீங்கள் அவங்களுக்கு இவ்வளவு முக்கியத்துவம் கொடுத்திருக்கலாம்.

ஆனால் இப்படி நீங்க யாருக்காக எல்லாம் செய்தீர்களோ அவர்கள் உங்க எதிர்ப் பார்ப்பை பூர்த்தி செய்யவில்லை உங்கள் உணர்வுகளை புரிந்துகொள்ளவில்லை என்றாலோ உங்களுக்கு வரும் வலிமிகவும் அதிகமாக இருக்கும்.

அதனால் தான் நம் வாழ்க்கையில் முதல் இடத்தை நமக்கு கொடுக்க வேண்டும். நமக்கு முக்கியத்துவம் கொடுக்கவேண்டும் .நமக்காக முதலில் வாழ வேண்டும். சுயநல வாதியா இருக்கலாம் தப்பில்லை.

நம்மை நாம் காதலிப்பது மிகவும் முக்கியம். மகிழ்ச்சியை அடுத்தவர்களிடம் தேடுவதை விட்டு விட்டு நம்மை நாமே மகிழ்ச்சியாக வைத்துக்கொள்ள வேண்டும். எப்போதும் மகிழ்ச்சியாக இருப்பதற்கு இது ஒரு சிறந்த வழி.

# பூக்கோவா பயன்கள்



பூக்கோவாவில் விற்றமின்கள் A, B, E, K சத்துக்கள் அதிகம் உள்ளன. பூக்கோவா சாப்பிடும்போது விற்ற மின் C சத்து கிடைக்கின்றது. பூக்கோவா மூளையை போன்ற தோற்றம் உடையது. இது மூளை வளர்ச்சிக்கு உதவுகின்றது. பூக்கோவாவில் உள்ள ஊட்டச்சத்து கள் அனைத்தும் உடலுக்கு உன்னதமான மருந்தா கின்றது.

புற்று நோய் உருவாவதை தடுக்குகின்றது. நார்ச்சத்து உள்ளதால் மலச்சிக்கல் இல்லாது செய்கின்றது. பூக்கோவா கருவில் உள்ள குழந்தையின் மூளை, முதுகுத்தண்டு வளர்ச்சிக்கு உதவுகின்றது. மூட்டு வலியை குறைப்பதில் முக்கிய பங்கு வகிக்கின்றது.

விற்றமின் K சத்துக்கள் அதிகம் நிறைந்துள்ளன. வாரத்திற்கு இரண்டு முறை சாப்பிடுபவர்களுக்கு எலும்புகள், பற்கள் வலிமை பெறுகின்றன. மேலும் இந்த விற்றமின் K சத்து எலும்புகளுக்குத் தேவையான கல்சியம் சத்து சிறுநீர் வழியாக வெளியேறுவதையும் தடுக்கின்றது.

பூக்கோவாவில் மக்னீசியம், பொற்றாசியம், கல்சியம் போன்றவை இருப்பதால் இதில் எதிர்ப்புச் சக்தி அதிகமாக உள்ளது. புற்றுநோய் வராமல் தடுக்கும் தன்மை கொண்ட இது இதயத்துக்கு பலம் கொடுக்கின்றது. செரிமான கோளாறுகளை சரிசெய்கின்றது. இதை உணவில் சேர்த்துக்கொள்வதால் பல்வேறு நன்மைகள் விளையும். பூக்கோவா பயன்படுத்தி கீழ்வாதம், முடக்குவாதத்தால் ஏற்படும் வலிக்கான மருந்து தயாரிக்கலாம்.

ஒரு தேக்கரண்டி பூக்கோவா , சிறிது பூண்டு, மிளகு சேர்த்து, ஒரு குவளை நீர்விட்டு கொதிக்க வைத்து குடித்தால் மூட்டுவலி, வாத ஜுரம், வீக்கம் சரியாகும். உடல் வலியும் குறையும். பூக்கோவா இலைகளை பயன்படுத்தி அடிபட்ட வீக்கம், மூட்டு வலிக்கான மேல்பூச்சு மருந்து தயாரிக்கலாம். விளக்கெண்ணெயுடன் பூக்கோவா இலை பசையை சேர்த்து நன்றாக வதக்கி பத்தாக போட்டு துணிகட்டி வைத்தால் வலி, வீக்கம் சரியாகும். பூக்கோவா பயன்படுத்தி சிறுநீரகம், இதயத்தை பலப்படுத்தும் மருந்து தயாரிக்கலாம்.

பூக்கோவாவில் ஒமேகா – 3 கொழுப்பு அமிலங்கள் அதிகம் உள்ளன. இது இரத்தத்தில் கெட்ட கொழுப்புகளை அதிகம் சேரவிடாமல் தடுத்து, இதயத்திற்கு செல்லும் இரத்த குழாய்களில் அடைப்பு ஏற்படாமல் தடுத்து இதயத்தின் நலனை பாதுகாக்கிறது.

ஒரு தேக்கரண்டி பூக்கோவா, அரை தேக்கரண்டி சீரகம், சிறிது மிளகுப்பொடி சேர்த்து ஒரு டம்ளர் நீர் விட்டு கொதிக்க வைக்கவும். இதை வடிகட்டி குடிக்கவும். இது, இதயத்துக்கு பலம் கொடுக்கும் ஊட்டசத்தாகின்றது. எலும்பு பலவீனம் அடையாமல் செய்கின்றது. அடிபட்ட இடத்தில் இரத்தம் சேர்ந்து வீக்கம், இரத்தக் கசிவு இருந்தால் அவை சரியாகும். சிறுநீர் பெருக்கியாக இருப்பதுடன் இரத்த அழுத்தத்தை குறைக்கின்றது. இரத்தத்தை உறைய வைக்கும் தன்மை கொண்டது.

பூக்கோவாவை பயன்படுத்தி புற்றுநோய் செல்கள் வளர்ச்சியை கட்டுப்படுத்தும் மருந்து தயாரிக்கலாம். ஒரு தேக்கரண்டி பூக்கோவா, கால் தேக்கரண்டி மஞ்சள் பொடி, அரை தேக்கரண்டி சீரகம் சேர்த்து, ஒரு குவளை நீர்விட்டு கொதிக்க வைக்கவும். வடிகட்டி 50 – 100ml அளவுக்கு தினமும் புற்றுநோயாளிகள் எடுத்துக்கொள்ளும்போது, புற்றுநோய் செல்கள் வளர்வது தடுக்கப்படும்.

ஒவ்வொருவரின் உடல் எடையும் அவர்களின் உயரத்திற்கு ஏற்ற அளவில் இருப்பதே சரியானதாகும். ஆனால் இன்று பலருக்கும் அதீத உடல் எடை பிரச்சினை இருக்கிறது. உடல் எடையை குறைக்க குறிப்பிட்ட சில சத்துக்கள் அடங்கிய உணவுகளை அடிக்கடி சாப்பிட வேண்டும் இதை உணவில் சேர்த்துக் கொள்வதால் பல நன்மைகள் விளையும்.

தினமும் இதை உணவில் சேர்த்துக் கொண்டால் கீழ்வாதம், உடல் பருமன், நீரிழிவு நோய், அல்சரேட்டிவ் கொலிட்ஸ் (ulcerative colitis) மற்றும் குடல் பிரச்சினைகள் போன்ற அழற்சித் தரும் நோய்களை தடுக்க முடியும்.

# பூக்கோவா சூப்



**தேவையான பொருள்கள்**

பூக்கோவா – 1
பாசிப்பருப்பு – 200 கிராம்
வெங்காயம் – 250 கிராம்
தக்காளி – 250 கிராம்
பச்சை மிளகாய் – 10
சீரகத்தூள் – 1/2 தேக்கரண்டி
சோம்புத்தூள் – 1/2 தேக்கரண்டி
மஞ்சள்தூள் – 1/4 தேக்கரண்டி
சீரகம் – 1/2 தேக்கரண்டி
உப்பு – தேவையான அளவு
செத்தல் மிளகாய் – 5
மிளகு – சிறிது
எண்ணெய் – தேவைக்கு
கறிவேப்பிலை

**செய்முறை**

ஒரு அகலமான பாத்திரத்தில் பாசிப்பருப்பை போட்டு 1 லீற்றர் அளவிற்கு தண்ணீர் ஊற்றி மஞ்சள்தூள், சீரகம், ஒரு தேக்கரண்டி எண்ணெய் ஊற்றி அடுப்பில் வைக்கவும். பருப்பு ஒரு கொதி நிலை வந்ததும் சிறிது நேரத்தில் வெங்காயம், தக்காளி, பச்சை மிளகாய் இவை அனைத்தையும் போட்டு நன்கு வேக விடவும்.

பருப்புடன் வெங்காயம், தக்காளி சேர்த்து நன்கு வெந்ததும் அதில் சுத்தம் செய்த பூக்கோவா சேர்த்து நன்கு வேக விடவும்.

பூக்கோவா வெந்ததும் தேவையான உப்பு, சீரகத்தூள், போட்டு நன்கு கொதி நிலை வந்ததும் அடுப்பில் இருந்து இறக்கி வைக்கவும். வேறு பாத்திரத்தை அடுப்பில் வைத்து எண்ணெய் ஊற்றி மிளகு, மிளகாய், கறிவேப்பிலை போட்டு தாளித்து சூப்பில் கொட்டி ஒரு கொதிவிட்டு இறக்கினால் சுவையான பூக்கோவா சூப் தயார்.




# வேர்க்கடலை குழம்பு

**தேவையானவை:**


**வேர்க்கடலை – ஊற வைத்து**
**வேக வைத்தது அரை கப்**
**தேங்காய் துண்டுகள் –**
**2 அரைத்து வைத்துக் கொள்ளவும்**
**கடுகு, உளுத்தம்பருப்பு, சீரகத்தூள் –**
**ஒரு தேக்கரண்டி**
**புளிக் கரைசல் – சிறிதளவு**
**பொடியாக நறுக்கிய வெங்காயம் –**
**ஒரு மேசைக்கரண்டி**
**மிளகாய்த்தூள் – ஒன்றரை தேக்கரண்டி**
**மஞ்சள்தூள் – கால் தேக்கரண்டி**
**கறிவேப்பிலை – சிறிதளவு**
**எண்ணெய், உப்பு – தேவையான அளவு**

**செய்முறை**

ஒரு பாத்திரத்தில் புளிக் கரைசலை விட்டு, அரைத்த தேங்காய், மஞ்சள்தூள், மிளகாய்த்தூள், உப்பு போட்டு, தேவையான தண்ணீர் விட்டு கொதிக்கவிடவும். வேக வைத்த வேர்க்கடலையைச் சேர்த்து, ஒரு கொதிநிலை வந்ததும் தீயைக் குறைத்து வைக்கவும். கடாயில் எண்ணெய் விட்டு, காய்ந்ததும் கடுகு, உளுத்தம்பருப்பு, சீரகத்தூள், கறிவேப்பிலை போட்டு, பொரிந்ததும் நறுக்கிய வெங் காயத்தைச் சேர்த்து வதக்கவும். பொன்னிறமாக வந்ததும் கொதிக்கும் குழம்பில் கொட்டி இறக்கவும்.



# வேர்க்கடலையின் நன்மைகள்



விற்றமின்கள், தாதுக்கள் நிறைந்த வேர்க்கடலையில் பல ஆரோக்கிய நன்மைகள் உள்ளன. இது புற்றுநோயிலிருந்து பாதுகாக்கும். வேர்க்கடலை உடலுக்கு அவசியமான இரும்பு, கல்சியம் மற்றும் துத்தநாகம் ஆகிய ஊட்டச்சத்துக்களை கொண்டுள்ளது. தினமும் ஊற வைத்த வேர்க்கடலையை சாப்பிட இன்னும் பல நன்மைகள் உள்ளன.

வேர்க்கடலையில் இதயத்தை பாதுகாக்கும் பண்புகள் உள்ளன. பல்வேறு இதய பிரச்சினைகளிலிருந்து உங்களைப் பாதுகாக்கும். வேர்க்கடலையின் பண்புகள் நீண்ட காலத்திற்கு இதய நோய் அபாயத்தை குறைக்க உதவுகிறது மற்றும் உடலில் இரத்த ஓட்டத்தை மேம்படுத்துகிறது. வேர்க்கடலையில் இதயத்தை பாதுகாக்கும் பண்புகள் உள்ளன. மற்றும் உடலில் இரத்த ஓட்டத்தை மேம்படுத்துகிறது.

புற்றுநோய் அபாயத்தை மிகப் பெரிய அளவில் குறைக்கிறது. உடலில் புற்றுநோய் கட்டிகளின் வளர்ச்சியைத் தடுக்கிறது. குறிப்பாக மார்பக புற்றுநோய் ஆபத்தை தவிர்க்க உதவுகிறது.


வேர்க்கடலையில் நார்ச்சத்து அதிகம் இருப்பதால், எரிச்சலூட்டும் குடல் மற்றும் மலச்சிக்கலைத் தடுக்க உதவும். அதற்கு நீங்கள் தினமும் 6 – 7 வேர்க்கடலையை சாப்பிட வேண்டும். இவ்வாறு சாப்பிட செரிமானப் பிரச்சினை ,குடல் அழற்சி பிரச்சினை, மலச்சிக்கல் என வயிறு தொடர்பான பல பிரச்சினைகளை தவிர்க்கலாம்.

## ‘இயேசுவே நான் உம்மில் நம்பிக்கை வைக்கிறேன்’ என்ற மகுட வாக்குடன்

# இலங்கையில் யாழ்ப்பாணம் மறைமாவட்டத்தில் முதன்முதல் தொடங்கப்பட்ட இறை இரக்க பக்தி

கிளிநொச்சி பிரமந்தனாறு இறை இரக்க யாத்திரைத்தலத்தின் 2022ஆம் ஆண்டுக்கான பெருவிழா இன்று ஏப்ரல் மாதம் 24ஆம் திகதி யாழ்ப்பாணம் ஆயர் மேதகு கலாநிதி யஸ்ரின் பேணாட் ஞானப்பிரகாசம் ஆண்டகை தலைமையில் அவரின் குருத்துவ 48ஆவது ஆண்டு நிறைவு தினத்தில் கொண்டாடப்படுகிறது. இதனையொட்டி காலைக்கதிர் தினசரிப் பத்திரிகை மற்றும் காலை, மாலை இணையத்தளப் பத்திரிகையின் கடந்த வார ஞாயிறு தின கிறிஸ்தவ செய்தி இதழில் சிறப்பிதழ் வெளியானது. இவ்வாரம் ஆண்டவர் இயேசுவின் உயிர்ப்பு விழாவின் பின்னர் வரும் ஞாயிறு தினத்தில் இறை இரக்க ஆண்டவர் பெருவிழா (2001 ஆம் ஆண்டு முதல்) உலகெங்கிலும் கொண்டாடப்படும் வேளை இலங்கையில் முதன்முதலில் யாழ்ப்பாணம் மறைமாவட்டத்தில் 1987ஆம் ஆண்டு இறை இரக்க பக்தி தொடங்கப்பட்ட வரலாறு பற்றி ஆய்வு செய்கிறது நம் இதழ்.





- கலாநிதி ரூபன் மரியாம்பிள்ளை அடிகள் -
(ஊடக வருகை விரிவுரையாளர் - இலங்கை திறந்த பல்கலைக்கழகம்; ஓய்வு நிலை ஊடக வருகை விரிவுரையாளர் - யாழ் பல்கலைக்கழகம்; இயக்குநர் - பிசப் சவுந்தரம் மீடியா சென்ரர்)

ஆண்டவர் இயேசுவிற்கு மேற்கொள்ளப்படும் பக்தி முயற்சி இறை இரக்க பக்தி முயற்சியாகும்.

கத்தோலிக்க திருச்சபையில் செய்யப்படும் பக்தி முயற்சிகள் அனைத்தும் பொதுவாக புனிதர்களுக்கே மேற்கொள்ளப்படுகின்றன. ஆண்டவர் இயேசுவிற்கு மேற்கொள்ளப்படும் சில பக்தி முயற்சிகளில் இறை இரக்க பக்தி முயற்சி உலகளாவியதும் மிகவும் சக்தி வாய்ந்ததுவுமாகும்.

இன்னும் சிறப்பாக இறை மக்களால் முழுமையாக முன்னெடுக்கப்பட்டு குருக்களை வேண்டி நிற்காமல் செய்யப்படும் பக்தி முயற்சியாகும். திருப்பலிக்கு மட்டும் குருக்களின் உதவி வேண்டப்படுகிறது.

இதனை விட முக்கியமாக ஆண்டவர் இயேசு இறந்த நேரமான நண்பகல் சரியாக 3 மணிக்கு இப்பக்தி முயற்சி மேற்கொள்ளப்படுகிறது. மதிய நேர வெய்யிலையும் – செய்ய வேண்டிய பணிகளையும் – எடுக்க வேண்டிய ஓய்வையும் பொருட்படுத்தாது இறைமக்கள் வேக வேகமாக நண்பகல் 3 மணிக்கு ஆலயம் நோக்கி ஓடி வருவது கண்கொள்ளாத காட்சியாகும். இதனை விட தனிப்பட வீடுகளில் இருந்து தனியாக இறை இரக்க பக்தியைப் பலர் மேற்கொள்ளுகின்றனர்.

### இறை இரக்க பக்தியின் ஆரம்ப வரலாறு

போலாந்து நாட்டில் கிறாக்கோ என்னும் இடத்தில் உள்ள ஒரு கன்னியாஸ்திரி மடத்தில் இருந்த மரிய பவுஸ்தீனா கொவால்ஸ்கா என்ற அருட்சகோதரிக்கு 1931ஆம் ஆண்டு முதல் 1938ஆம் ஆண்டு வரை காட்சி கொடுத்து இறை இரக்க பக்தி வழிபாட்டு முறைக்குரிய செயல்களையும் முறைகளையும் தெரிவித்தார்.

இறை இரக்க ஞாயிறை திருவழிபாட்டு ஆண்டில் 2000 ஆம் ஆண்டில் இணைத்தவர் திருத்தந்தை 2ஆம் யோண் போல் அவர்களாவர். ஐந்து ஆண்டுகளுக்குப் பின் 2005 ஆம் ஆண்டு இறை இரக்க ஞாயிறுக்கு முந்திய இரவு திருத்தந்தை 2ஆம் யோண் போல் அவர்கள் இறைவனின் இரக்கத்தில் இரண்டறக் கலந்தார். 2011ஆம் ஆண்டு இறை இரக்க ஞாயிறன்று திருத்தந்தை 2ஆம் யோண் போல் அவர்கள் முத்திப்பேறு பெற்றவராகவும், 2014ஆம் ஆண்டு அதே இறைஇரக்க ஞாயிறன்று புனிதராகவும் உயர்த்தப்பட்டார்.

திருத்தந்தையர் 2ஆம் யோண் போல் அவர்களையும் 23ஆம் யோண் அவர்களையும் புனிதர்களாக உயர்த்த திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் ஏன் இறை இரக்கத்தின் ஞாயிறைத் தேர்ந்தெடுத்தார் என்று செய்தியாளர்கள் அவரிடம் கேட்டபோது அவர் இவ்வுலகம் என்றுமில்லாத அளவுக்கு இரக்கத்தை இழந்து தவிக்கிறது, எனவே நாம் வாழும் உலகிற்கு இரக்கத்தின் காலம் மிக அதிகமாகத் தேவைப்படுகிறது, எனவே இறைஇரக்க ஞாயிறு தினத்தைத் தெரிந்தேன் என்று பதில் சொன்னார்.

அருட்சகோதரி மரிய பவுஸ்தீனாவிற்கு 1993ஆம் ஆண்டு புனிதர் பட்டத்திற்கு முன்னர் வழங்கப்படும் இறையடியார் பட்டம் வழங்கப்பட்டது. பின்னர் 2000ஆம் ஆண்டில் இயேசுவின் உயிர்ப்பு விழாவின் பின்னர் வரும் ஞாயிறு தினத்தில் தற்போது புனிதரான திருத்தந்தை யோண் போல் அவர்கள் அருட்சகோதரி மரிய பவுஸ்தீனாவிற்கு புனிதர் பட்டம் வழங்கினார். அன்றைய தினத்திலேயே ஆண்டவர் இயேசுவின் உயிர்ப்பு விழாவின் பின்னர் வரும் ஞாயிறு தினத்தில் இறை இரக்க ஆண்டவர் பெருவிழாவை கொண்டாடும் படியும் பணித்தார். 2000ஆம் ஆண்டிலேயே இது உத்தியோகபூர்வமாக பிரகடனப்படுத்தப்பட்டது.

### எக்ஸ்.ஆர்.பிரான்சீஸ் என்பவரால் இறை இரக்க பக்தி ஆரம்பம்

1987 இல் யாழ்ப்பாணம் இந்திய அமைதிப் படையினரின் கட்டுப்பாட்டில் இருந்தபோது அவர்களின் கெடுபிடி அதிகமாயிருந்தமையால் அரியாலை புனித யூதாததேயு ஆலயத்தை சேர்ந்த எக்ஸ்.ஆர்.பிரான்சீஸ் என்பவர் ஒரு சிறிய குழுவுடன் புனித யூதாததேயு ஆலயத்தில் இறை இரக்க வழிபாட்டை முதன்முதல் ஆரம்பித்தார்.

இவர் 1989ஆம் ஆண்டு இவ்வழிபாட்டை யாழ் அருள் ஆச்சிரமத்திலும் ஆரம்பித்தார். அப்போது யாழ் ஆயராக இருந்த மேதகு கலாநிதி வ.தியோகுப்பிள்ளை ஆண்டகை இறை இரக்கப்பக்தி யாழ் மறைமாவட்டத்தில் கோவில் கோவிலாக சென்று பரப்பவும் இறை இரக்க செபமாலையை ஆங்கிலத்திலும் தமிழிலும் அச்சு செய்யவும் அனுமதி கொடுத்தார். இறை இரக்க பக்தி செப புத்தகத்தை தமிழில் மொழி பெயர்ப்புச் செய்யும் பணியை



யாழ் சுண்டிக்குழி புனித திருமுழுக்கு யோவான் ஆலய பங்கைச் சேர்ந்த செல்வி வலயற் இம்மானுவேல் சிறப்புற செய்து கொடுத்தார். இதே காலப்பகுதியில் அப்போதைய திருமலை – மட்டுநகர் ஆயர் மேதகு கலாநிதி கிங்ஸ்லி சுவாம்பிள்ளை ஆண்டகையும் அப்போதைய மன்னார் ஆயர் மேதகு கலாநிதி இராயப்பு யோசவ் ஆண்டகையும் முறையே தமது திருமலை – மட்டுநகர் மற்றும் மன்னார் மறைமாவட்டங்களில் இறைஇரக்க பக்தி வழிபாட்டை பரப்ப அனுமதித்தனர்.

எக்ஸ்.ஆர்.பிரான்சீஸ் அவர்கள் இறை இரக்க பக்தியை கொழும்பிற்கும் பரப்பும் நோக்குடன் 1991 ஆம் ஆண்டு கொழும்பு புதுச்செட்டித்தெரு வியாகுலமாதா ஆலயத்தில் பங்குத்தந்தையாக இருந்த றெஜிநோல்ட் லூசியன் அ.ம.தி அடிகளாரின் உதவியுடன் அங்கு தொடங்கினார். பின்னர் 1992 ஆம் ஆண்டு கொழும்பு புனித லூசியாள் பேராலயத்திலும் ஜிந்துப்பிட்டி வேளாங்கன்னி அன்னை ஆலயத்திலும் தொடக்கி வைத்தார்.

காலைக்கதிர்
Kalaikathir
கிறிஸ்தவ செய்தி இதழ்

### ஜேக்கப் மரியதாஸ் சிவப்பிரகாசம் அவர்கள் பணி

1993ஆம் ஆண்டின் இறுதிப்பகுதியில் எக்ஸ்.ஆர்.பிரான்சீஸ் குடும்பத்தினர் கனடாவிற்குச் செல்ல நேர்ந்தமையால் கொழும்பை வதிவிடமாகக் கொண்ட ஜேக்கப் மரியதாஸ் சிவப்பிரகாசம் அவர்கள் இறை இரக்க பக்தியை பரப்பும் பணியைப் பொறுப்பெடுத்தார். ஜேக்கப் மரியதாஸ் சிவப்பிரகாசம் அவர்கள் கொழும்பு, நீர்கொழும்பு ஆலயங்களிலும், காலி மறைமாவட்டத்தில் தெனியாய – எட்டியாந்தோட்டம் – மஸ்கெலியா மட்டகலை – டிக்கோயா – நோர்வூட் – தலவாக்கலை – நாவலப்பிட்டி முதலான மலையக பகுதிகளில் நூற்றுக்கு மேற்பட்ட தோட்டங்களிலும் ஆலயங்களிலும் இறை இரக்க பக்தியைப் பரப்பினார்.

### இறை இரக்கத்தின் சாயல் படம் மூலமே வெளிப்படுத்தப்பட்டது

போலந்து நாட்டில் கிறாக்கோ என்னும் இடத்தில் உள்ள ஒரு கன்னியாஸ்திரி மடத்தில் இருந்த மரிய பவுஸ்தீனா கொவால்ஸ்கா என்ற அருட்சகோதரிக்கு 1931ஆம் ஆண்டு முதல் 1938ஆம் ஆண்டு வரை காட்சி கொடுத்து வந்தார். இக்காட்சிகளில் மனுக்குலம் அழிவுப்பாதையை நோக்கிச் சென்று கொண்டிருக்கிறது, அதைக் காப்பாற்றுவதற்கு மனிதர்களை இறை இரக்கத்திடம் அழைத்து வாருங்கள் என்று தெரிவித்து இறை இரக்க பக்தி வழிபாட்டு முறைக்குரிய செயல்களையும் முறைகளையும் தெரிவித்தார். அப்போது இறை இரக்கத்தின் சாயலைப் படமாக வரையும் படியே வேண்டப்பட்டார்.

1931ஆம் ஆண்டு மரிய பவுஸ்தீனா என்ற அருட்சகோதரிக்கு வழங்கப்பட்ட தரிசனத்தில் இருந்தே இந்த இறை இரக்க படம் தோற்றம் பெறுகிறது . 1931 ஆம் ஆண்டு பெப்ரவரி 22ஆம் நாள் சகோதரி பவுஸ்தீனாவிற்கு இயேசு காட்சி அளித்தபோது அவர் வெண்ணாடை அணிந்தவராகத் தோன்றினார். ஒருகரம் நெஞ்சைத் தொட்டபடியும் மறுகரம் ஆசீரளிக்கும் பாவனையாகவும் இருந்தன. அவரது இதயத்திலிருந்து சிவப்பும் வெண்மையுமான இரு ஒளிக்கதிர்கள் வீசின. இந்தத் தோற்றத்தைப் படமாக வரையும் படியும் அதற்கடியில் ‘இயேசுவே நான் உம்மில் நம்பிக்கை வைக்கிறேன்’ என்னும் சொற்களை எழுதும்படியும் இயேசு அவருக்குக் கூறினார்.

அந்த இரு ஒளிக்கதிர்களுக்கு விளக்கம் கேட்டபோது அவை தமது இதயத்திலிருந்து வெளிப்பட்ட இரத்தத்தையும் தண்ணீரையும் குறிக்கின்றன என்றும், வெண்கதிர் ஆன்மாவைத் தூய்மைப்படுத்தும் தண்ணீருக்கும், செங்கதிர் ஆன்மாவின் உயிரான அருளுக்கும் அடையாளமாக இருக்கின்றன என்றும் விளக்கினார். சகோதரி பவுஸ்தீனாவின் வர்ணனைக்கமைய ஒரு நல்ல ஓவியரைக் கொண்டு இப்படம் வரையப்பட்டது. இயேசு கேட்டுக்கொண்டபடியே அப்படம் மடத்து கோவிலில் வணக்கத்துக்கு வைக்கப்பட்டது.




- எஸ்.என்.உதயநாயகம் -
(பகவான் ஸ்ரீ சத்ய சாயி பாபா அறங்காவளர் சபை, ஸ்ரீலங்கா)

# பகவான் ஸ்ரீ சத்ய சாயி பாபா எப்போதும் எம்முடன் இருக்கிறார்!

## மகா சமாதி தினம் இன்று

சித்தர்கள் முத்தியடைந்தால், முத்தியடைந்த ஸ்தலம் சக்திவாய்ந்ததாகும். புட்டபர்த்தியில் சக்தி வாய்ந்த ஸ்தலமாக பகவான் ஸ்ரீ சத்ய சாயி பாபாவின் மகாசமாதி இருக்கிறது. அங்கு பாபா வாழ்ந்து கொண்டு தானிருக்கிறார். அந்த நம்பிக்கை நம்மிடம் இருக்க வேண்டும். பல அதிசயங்களை உலகமெங்கும் நிகழ்த்தினாலும், முத்தியடைந்த திருத்தலத்தில் மட்டுமே தெய்வீக அதிர்வலைகளை உணரமுடியும். ஒரு சில பக்தர்கள் பாபா சமாதியடைந்து விட்டார் என்று எண்ணத்



துடன் விலகியிருக்கிறார்கள். ஒரு சில சாயி ஸ்தாபனங்களில், அவரது கொள்கைகளை கடைப்பிடிப்பதில் கருத்து வேறுபாடு. பாபா எப்போதும் எம்முடன்தான் இருக்கி றார் என்ற எண்ணங்கள் இருந்தால், நாம் விலகியிருக்கவோ அல்லது கருத்து வேற்றுமையோ ஏற்பட வாய்ப்பிருக்காது. அவரது தெய்வீகத்தைக்கூட உணரவில்லை.

மகாபாரதத்தில் கூட, தெய்வமாகிய கண்ணனை அருகில் வைத்துக் கொண்டே, மானிடராகிய பஞ்ச பாண்டவர்கள் கண்ணனின் தெய்வீகத்தை உணர்ந்திருக்கவில்லை. இந்த வேதனையை உத்தவர் கூறிய துண்டு. உத்தவர் என்பவர் பகவான் கிருஷ்ணின் குழந்தைப் பருவம் முதலே, அவருக்குப் பணிவிடைகள் செய்து, சேவகராகவும், தேரோட்டியாகவும் சேவை புரிந்தவர்.

உத்தவர் கிருஷ்ணனிடம் ஒரு கேள்வி கேட்டார். 'நடப்பதையும் நடக்கப் போவதையும் நன்கறிந்த ஞானியாகிய தாங்கள், உற்ற நண்பனுக்கு ஏற்படும் துயரத்தைத் தீர்க்க, உடனே அழைப்பில்லாமலேயே வந்து உதவி செய்பவது உங்களது கடமை. பஞ்சபாண்டவர்களை சூதாட்டத்தில் தவிக்கவிட்டு, கைநழுவியது மட்டுமல்ல, பாஞ்சாலியின் மானத்தை கடைசியில் காப்பாற்றி பெயர் எடுத்தது. இது நியாயமா?' – என்று வினவியபோது, அதற்குப் பதிலாக கிருஷ்ணன் அர்ஜ்னனுக்கு கூறிய பகவத்கீதையைப் போன்று, உத்தவருக்கும் சில அறிவுரைகளைக் கூறினார். 'உத்தவரே! விவேகம் உள்ளவனே ஜெயிக்கவேண்டும் என்பது உலக தர்ம நியதி. துரியோதனுக்கு இருந்த விவேகம், தருமனிடத்தில் இல்லை. அதனால் தான் தருமன் தோற்றான். துரியோதனனுக்கு சூதாடத் தெரியாது. ஆனால் அவனிடத்தில் பந்தயம் வைப்பதற்கு, செல்வமும், ஏராளமான ஆஸ்தியும் இருந்தும், தனது மாமா சகுனியைப் பகடை உருட்டச் சொன்ன விவேகம், இந்த தருமனிடத்தில் இல்லை. இருந்திருந்தால், மைத்துனனாகிய ஸ்ரீ கிருஷ்ணன் பகடையை எனக்காக உருட்டுவார் என்று கூறியிருக்கலாமே. சகுனியும், நானும் பகடையை உருட்டியிருந்தால், சகுனியின் நிலைமை என்னவாயிருக்கும்? தருமன் என்னை ஆட்டத்தில் சேர்க்க மறந்துவிட்டான். அதுமட்டுமல்ல, சூதாட்டம் எனக்குத் தெரியக்கூடாது என்பதற்காக, என்னை சூதாட்ட மண்டபத்துக்கு வரக்கூடாதென என்னிடமே வேண்டிக் கொண்டான். என்னை மண்டபத்துக்குள் வரமுடியாதவாறு அவனே கட்டிப் போட்டுவிட்டான்.

'பீமனையும், அர்ஜுனனையும், நகுல, சகாதேவனையும் வைத்து இழந்த போதும் கூட, ஐவரும் என்னைப் பிராத்தனை செய்ய மறந்துவிட்டார்கள். பாஞ்சாலி கூட, என்னைக் கூப்பிடாமல், தனது பலத்தையே நம்பி, சபையில் வாக்குவாதங்கள் செய்து கொண்டிருந்தாள். நல்லவேளை துச்சாதனன் துகிலுரித்தபோது தான் எனது ஞாபகம் அவளுக்கு வந்தது' என்றார்.

அதற்கு உத்தவர்'அருமையான விளக்கம். ஆனால் கூப்பிட்டால் தான் நீ வருவாயா? ஆபத்பாந்தவா!! என்கிறோம், அப்படியானால். ஆபத்துக்களில் உன் அடியார்களைக் காப்பாற்றமாட்டாயா?'என்றார்.

உடனே கிருஷ்ணன், 'மனித வாழ்க்கை அவரவர் கர்ம வினைப்படிதான் அமைகிறது. நான் அதை நடாத்துவதுமில்லை, அதில் குறுக்கிடுவதுமில்லை. நான் வெறும் சாட்சி பூதம். நடப்பதையெல்லாம் அருகில் நின்று பார்த்துக்கொண்டு நிற்பவனே! அதுதான் தெய்வ தர்மம்.' – என்றார்.

'கிருஷ்ணா! அப்படியானால், நீ அருகிலிருந்து நாம் செய்யும் தீமைகளைப் பார்த்துக் கொண்டிருப்பாய். நாங்கள் தவறுகளைத் தொடர்ந்து செய்து கொண்டேயிருந்து, பாவங்களைக் குவித்து, துன்பங்களை அனுபவித்துக் கொண்டே இருக்க வேண்டும். அப்படித் தானே?' என்றார் உத்தவர்.

'உத்தவரே! நான் சொன்ன வாசகங்களின் உட்பொருளை நன்றாக உணர்ந்து பாருங்கள். நான் சாட்சி பூதமாக அருகில் நிற்பதை நீங்கள் உணரும் போது, உங்களால் தவறுகளையோ, தீமைகளையோ நிச்சயமாகச் செய்யமுடியாது. அதை நீங்கள் மறந்துவிடும் போதுதான், எனக்குத் தெரியாமல் செயல்களைச்



செய்துவிடலாம் என்று எண்ணுகிறீர்கள். பாதிப்புக்கு உள்ளாகும் சம்பவங்கள் நிகழ்வதும் அப்போதுதான். எனக்குத் தெரியாமல் சூதாடலாம் என்று தருமன் உணர்ந்திருந்தால, இந்தச் சூதாட்ட நிகழ்ச்சி வேறு விதமாக முடிந்திருக்கும் அல்லவா?'என்றார் கிருஷ்ணன்.

அப்படித்தான் பகவான் ஸ்ரீ சத்ய சாயி பாபாவும் எப்போதும் எம்முடன் இருக்கிறார் என்ற உண்மையை உணரவேண்டும். அப்போதுதான் நாம் வேறு வழிகளை நாடாது, தப்பான எண்ணங்களை மனதில் புகுத்தாது, சத்ய சாயி மார்க்கத்தைக் கடைப்பிடிக்கமுடியும்.

பகவான் ஸ்ரீ சத்ய சாயி பாபாவின், மகா சமாதி தினம் இன்று ஏப்ரல் மாதம் 24 ஆம் திகதி, ஞாயிற்றுக் கிழமை ஆகும். இன்றைய தினம் காலையில், கொழும்பு, புதுச்செட்டித் தெருவிலுள்ள சாயிநிலையத்தில், 'ஆராதனா மஹோற்சவம்' நிகழ்வாக, மகாருத்ர யாகமும், புட்டபர்த்தியிலுள்ள பகவானின் மகா சமாதியில், வைத்து எடுத்து வரப்பட்ட, பகவானின் ஐம்பொன் திருவுருவச்சிலைக்கு, பூரண அபிஷேகமும் இடம்பெறும். அதைத் தொடர்ந்து அன்னதானம் வழங்கப்படவுள்ளது.

காலைக்கதிர்
Kalaikkathir

## ராஜபக்ஷக்கள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அமைச்சர் சமல் ராஜபக்ஷவின் கொழும்பு இல்லத்தில் இந்தச் சந்திப்பு நடந்துள்ளது என தெரியவருகின்றது. எனினும் இந்த சந்திப்பில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ கலந்துக் கொள்ள வில்லை எனக் கூறப்படுகின்றது.

இந்தக் கலந்துரையாடலின்போது நாட்டில் நிலவும் அரசியல் நிலைமை தொடர்பில் விரிவாகக் கலந்துரையாடப் பட்டுள்ளது எனவும் அந்தச் சிங்கள இணையத்தளம் கூறியுள்ளது.

நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி, அதனால் ஏற்பட்டுள்ள விலை அதிகரிப்புகள், எரிபொருள், சமையல் எரிவாயு உட்பட பொருள்களுக்கான தட்டுப்பாடு போன்றவற்றின் காரணமாக மக்கள் அரசாங்கத்திற்கும் ஜனாதிபதிக்கும் எதிராக தொடர்ச்சியான போராட்டங்களை நடத்தி வருகின்றனர்.

மக்களின் போராட்டம் ஆரம்பமான சூழ்நிலையில், ஜனாதிபதி மற்றும் பிரதமரைத் தவிர அரசாங்கத்தின் அமைச்சரவையில் அங்கம் வகித்த ராஜபக்ஷவினர் அனைவரும் பதவிகளை ராஜினாமா செய்தனர். புதிதாக நியமிக்கப்பட்ட அமைச்சரவையிலும் ராஜபக்ஷவினர் எவரும் இடம்பெறவில்லை.

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ பதவி விலகி இடைக்கால அரசாங்கம் ஒன்றை அமைக்க வழிவிட வேண்டும் என ஆளும் கட்சியில் அங்கம் வகிக்கும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் கோரிக்கை விடுத்து வரும் நிலையில் ராஜபக்ஷ குடும்பத்தினருக்கு இடையில் இந்த பேச்சுகள் நடத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## நாட்டின் சில வங்கி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

வெளியிடுகையில் அவர் இதனைத் தெரிவித்தார்.

"வங்கிகள் இல்லாமல் நாட்டின் பொருளாதாரம் தாக்குபிடிக்க முடியாது. வங்கிகளைப் பாதுகாப்பதற்கான வலைப் பின்னல் ஒன்றை நாங்கள் உருவாக்க வேண்டும்.

டொலர் நெருக்கடி மற்றும் வங்கிகள் செயலிழக்கும் ஆபத்து ஆகிய இரண்டையும் சிறிய விடயங்களாக நாங்கள் கருதுவிட முடியாது. சில வங்கிகள் முற்றாக அழியும் நிலையில் உள்ளன. சில வங்கிகள் மீளக் கட்டியெழுப்பப்பட வேண்டும்.

எதிர்காலத்தில் உலகளாவிய ரீதியில் எரிபொருள், உணவு, உரம் போன்றவற்றுக்குத் தட்டுப்பாடு ஏற்படக்கூடிய ஆபத்து உண்டு. சர்வதேச ரீதியில் கோதுமை மா உற்பத்தி உக்ரைன், ரஷ்யா போன்ற நாடுகளில் இருந்துதான் கிட்டுகின்றது. அந்த உற்பத்தி இப்பொழுது வீழ்ச்சி அடையத் தொடங்கி விட்டது.

நாட்டின் இன்றைய நிலைக்குத் தனியார் துறையைக் குற்றம் சுமத்துவதற்கு நான் பின் நிற்கப்போவதில்லை. இந்த அரசு அதிகாரத்திற்கு வந்த பின்னர், தனியார் துறையினர் ஜனாதிபதியிடம் சென்று வரிகளைக் குறைத்தால் நாட்டின் பொருளாதாரம் மேம்படும் என்றனர். அப்படி அபிவிருத்தி ஏற்பட்டதா?

இந்த நேரத்தில் பெரிய மாற்றம் ஒன்றையே மக்கள் எதிர்பார்க்கிறார்கள். இத்தகைய சமயத்தில் அரண்மனைக்குள் இருந்துகொண்டு மாறி மாறி சதி செய்வதில் அர்த்தமில்லை. புரட்சி வீதிகளுக்கு வந்து விட்டது. அதை எதிர்கொள்ள வேண்டிய தேவை நமக்கு ஏற்பட்டு இருக்கின்றது." – என்றார் ரணில் விக்கிரமசிங்க.

## எம்பிலிப்பிட்டிய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அமைப்பாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ஹேஷா விதானகேயால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இந்தப் போராட்டத்தில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ உட்பட நாடாளுமன்ற உறுப்பினர்கள், அரசியல்வாதிகள், பொதுமக்கள் என பெருந்திரளானோர் கலந்து கொண்டனர்.

## மஹிந்த விலகா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

பிரேரணைக்கு ஆதரவளிக்க, 40 பேரடங்கிய சுயாதீன குழு கவனம் செலுத்தியுள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

விமல் வீரவன்ஸ, உதய கம்மன்பில்ல, வாசுதேவ நாணயக்கார ஆகியோரின் கட்சியினர் மற்றும் சிறிலங்கா சுதந்திரக் கட்சி ஆகியவற்றைச் சேர்ந்த எம்.பிக்களே இவ்வாறு தீர்மானித்திருக்கின்றனர் என்று கூறப்படுகின்றது.

அந்த சுயாதீன குழு, பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தியுடன் பல சுற்றுப் பேச்சுக்களை நடத்தியுள்ளது என்றும் அறியமுடிகின்றது.

நம்பிக்கையில்லாப் பிரேரணை வெற்றியடையுமாயின், இடைக்கால அரசாங்கத்தை நிறுவுவது தொடர்பிலான திட்டங்கள் குறித்தும் அந்தக் குழு கலந்துரையாடியுள்ளது என்றும் அறியமுடிகின்றது.

இடைக்கால அரசாங்கத்தின் அமைச்சரவை 20க்கு கீழ் மட்டுப்படுத்திக்கொள்வது குறித்தும் யோசனைகள் முன்வைக்கப்பட்டுள்ளன என அறிய முடிகின்றது.

## உங்களின் சிங்கள...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

தொடர்பான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே இத்தகவலை அவர் வெளியிட்டார்.

மன்னார் முள்ளிக்குளம் பிரச்சினை தொடர்பில் அப்போதைய பாதுகாப்புச் செயலாளராக இருந்த கோட்டாபய ராஜபக்ஷவை, மன்னார் மாவட்ட ஆயராக இருந்த இராயப்பு ஜோசப்பும் நானும் சந்திக்க சென்றோம். சந்திப்பிற்கான நேரம் பிற்பகல் 3 மணிக்கு ஒதுக்கப்பட்டிருந்த போதும் இரவு 7 மணிக்கே கோட்டாபய ராஜபக்ஷவைச் சந்திக்க வாய்ப்பளிக்கப்பட்டது.

நீண்ட நேரமாக நாம் காக்க வைக்கப்பட்ட நிலையில் சந்திப்பு இடம்பெற்ற போது பாதுகாப்பு செயலாளரான கோத்தபாய ராஜபக்ஷ, இராயப்பு ஜோசப் ஆண்டகையைக் கருத்திற்கொள்ளாமல் அவமதிக்கும் வகையில் நடந்து கொண்டார்.

இதன்போது எனது மக்களின் பிரச்சினைகளைப் பேச வந்த போது நீங்கள் அதனை கருத்திற்கொள்ளவில்லை. நான் உயிருடன் இருந்தாலும் இல்லையென்றாலும் நிச்சயமாக ஒரு கால கட்டத்தில் சிங்கள மக்கள் உங்களைத் தூஷிப்பார்கள் என்று கோட்டாபய ராஜபக்ஷவிடம் இராயப்பு ஜோசப் ஆண்டகை நேரில் கூறினார்.

அன்று இராயப்பு ஜோசப் ஆண்டகை கூறியது இன்று உண்மையாகியிருக்கிறது. அதே பாதுகாப்பு செயலாளரான தற்போதைய ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவை இன்று அவரின் சிங்கள மக்களே தூஷிக்கின்றார்கள். ஜனாதிபதி பதவியை விட்டு செல்லுமாறு கூறுகின்றார்கள். ராஜபக்ஷ குடும்பத்திற்கு எதிராக வீதி வீதியாக மக்கள் போராடுகின்றார்கள். – என்றார்.

## நானேதான் பிரதமர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இடைக்கால அரசு ஒன்றை அமைப்பதற்காக பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தமது பதவியை விட்டு விலகி இடம் கொடுக்க வேண்டும் என்ற கோரிக்கை சில தரப்புகளினால் முன்வைக்கப்படும் நிலையில், தாமே பிரதமர் என்பதை விடாப்பிடியாக உறுதியுடன் தெரிவித்திருக்கின்றார் மஹிந்த ராஜபக்ஷ.

தமக்கு சுகவீனம் என்றும், கொழும்பில் தனியார் ஆஸ்பத்திரி ஒன்றில் தாம் சிகிச்சை பெறுகின்றார் என்றும் வெளியான செய்திகளை அவர் அடியோடு மறுத்தார்.

"அவை முழுமையாகப் பொய்யான செய்திகள். நான் ஒரு நோயாளியைப் பார்க்க கூட ஆஸ்பத்திரிப் பக்கம் போக வில்லை. இந்த இளைஞர்களோடு எல்லாம் சமதையாக ஓடக்கூடிய உடல் ஆரோக்கியத்துடன் நான் இருக்கிறேன்" – என்றார் பிரதமர்.

தனியார் வானொலி ஒன்றுக்கு அளித்த பேட்டியிலேயே அவர் இதனைக் குறிப்பிட்டிருக்கிறார்.

புதிய பிரதமர் ஒருவர் தலைமையில் சகல கட்சி அரசு ஒன்று அமைக்கப்பட வேண்டும் என்ற யோசனையை பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ அந்தப் பேட்டியில் நிராகரித்தார்.

வித்தியாசமான கொள்கை போக்குடையவர்களின் ஒன்றிணைவு பயனளிக்காது என்றார் அவர். "என்னைத் தவிர வேறு யாருக்கும் கீழ் செயற்பட ஒருவரும் தயாராக மாட்டார்கள். ரணிலின் தலைமையின் கீழ் கூட.

சர்வகட்சி அரசு ஒன்று என்றாலும் அதுவும் என் தலைமையின் கீழ்தான் – நான் பிரதமராக இருக்கையில்தான் – சாத்தியமானது'' என்றார் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ.

# வடக்கின் பெரும் போரில் வென்றது சென்ஜோன்ஸ்!




(பிரபாகரன் டிலக்சன்)

யாழ்ப்பாணம் சென்ஜோன்ஸ் கல்லூரிக்கும் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரிக்குமிடையிலான 115ஆவது வடக்கின் பெரும் போர் துடுப்பாட்டப் போட்டியில் சென்ஜோன்ஸ் கல்லூரி 99 ஓட்டங்களால் வெற்றிபெற்றுள்ளது.

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி மைதானத்தில் கடந்த வியாழக்கிழமை ஆரம்பமான இப்போட்டியில் நாணய சுழற்சியில் வெற்றிபெற்ற யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி முதலில் களத்தடுப்பை தீர்மானித்தது.

இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய யாழ்ப்பாணம் சென்ஜோன்ஸ் கல்லூரி 84.1 ஓவர்களில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 167 ஓட்டங்களைப் பெற்றது.

துடுப்பாட்டத்தில் சென்ஜோன்ஸ் கல்லூரி சார்பில் கரிசன் 41 ஓட்டங்களையும் அணித்தலைவர் அபிசேக் 40 ஓட்டங்களையும் அதிகபட்சமாக பெற்றுக் கொண்டனர்.

பந்துவீச்சில் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி சார்பில் விதுர்சன் மற்றும் கவிதர் சன் ஆகியோர் தலா 3 விக்கெட்டுகளை வீழ்த்தினர்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி தனது முதல் இனிங்ஸில் 45 ஓவர்களில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 125 ஓட்டங்களை பெற்றது.

மத்திய கல்லூரி சார்பில் சாரங்கன் 41 ஓட்டங்களையும், நிசாந்தன் 28ஓட்டங்களையும் அதிகபட்சமாக பெற்றனர்.

பந்துவீச்சில் சென்ஜோன்ஸ் கல்லூரி சார்பில் விதுசன் 6 விக்கெட்டுகளையும், அசாந்த் 4 விக்கெட்டுகளையும் கைப்பற்றினார்கள்.

42 ஓட்டங்கள் முன்னிலையோடு இரண்டாம் இனிங்ஸூல் துடுப்பெடுத்தாடிய சென்ஜோன்ஸ் கல்லூரி அணி 67 ஓவர்களில் 7 விக்கெட்டுக்களை இழந்து 220 ஓட்டங்களை பெற்று ஆட்டத்தை இடைநிறுத்தியது.

துடுப்பாட்டத்தில் சென்ஜோன்ஸ் கல்லூரி சார்பில் சபேசன் 105 ,ஜெபனேசர் 35, சுகீதன் 34 ஓட்டங்களைப் பெற்றனர்.

பந்துவீச்சில் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி சார்பில் நியுட்டன் 3 விக்கெட்டுகளையும், கௌதம் 2விக்கெட்டுகளையும் கைப்பற்றினர்.

262 ஓட்டங்களை இலக்காகக் கொண்டு இரண்டாம் இனிங்ஸில் துடுப்பெடுத்தாடிய மத்திய கல்லூரி 62.3 ஓவர்கள் 163 ஓட்டங்களுக்கு அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 99 ஓட்டங்களால் தோல்வியடைந்தது.

மத்திய கல்லூரி சார்பில் துடுப்பாட்டத்தில் கஜன் 53 ஓட்டங்களையும், சாரங்கன் 33 ஓட்டங்களையும் அதிகபட்சமாக பெற்றுக்கொண்டனர்

பந்துவீச்சில் சென்ஜோன்ஸ் கல்லூரி சார்பில் அசாந்த் 6 விக்கட்டுகளைக் கைப்பற்றினார்.

போட்டியின் ஆட்டநாயகனாகவும் சிறந்த துடுப்பாட்ட வீரராகவும் சதத்தினை பூர்த்தி செய்த சென்ஜோன்ஸ் கல்லூரி வீரர் சபேசன் தெரிவுசெய்யப்பட்டார்.

சிறந்த பந்துவீச்சாளராக யாழ்ப்பாணம் சென்ஜோன்ஸ் கல்லூரி வீரர் அசாந்தும் –

சிறந்த களத்தடுப்பாளராக மத்திய கல்லூரி வீரர் சஞ்சயனும் –

போட்டியின் சகலதுறை ஆட்டக்காரனாக மத்திய கல்லூரி வீரர் கஜனும் –

சிறந்த விக்கெட் காப்பாளராக மத்திய கல்லூரி வீரர் சாரங்கனும் – தெரிவு செய்யப்பட்டனர்.

## இன்னும் இருபது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அரசாங்க முன்மொழிவுகளை ஜனாதிபதியிடம் சமர்ப்பித்துள்ளனர் என நாடாளுமன்ற உறுப்பினர் டலஸ் அழகப்பெருமவின் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்தக் குழுவின் மொத்த எண்ணிக்கை இப்போது 20ஐ நெருங்குகிறது.

இவர்களின் இத்தகைய அச்சுறுத்தலுக்குப் பின்னால் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் மறைமுக ஆதரவும் ஆசீர்வாதமும் இருப்பதாகவும் விடயமறிந்த வட்டாரங்கள் கூறுகின்றன.

இவர்கள் சுயேச்சை அணியாக இயங்கும் நோக்கோடு ஆளும் தரப்பிலிருந்து வெளியேறினால் பிரதமர் மஹிந்த தலைமையிலான அரசு நாடாளுமன்றத்தில் பெரும்பான்மையை இழக்கும், தான் மாற்று அரசாக இடைக்கால நிர்வாகம் ஒன்றை ஏற்படுத்த வேண்டிய நிலைமை ஏற்படும், அதற்கு முன்னர் நீங்களாகவே பிரதமர் பதவியிலிருந்து விலகி இடைக்கால அரசு ஒன்றை நான் அமைப்பதற்கு இடமளியுங்கள் என்ற அழுத்தத்தை பிரதமருக்கு கொடுக்க ஜனாதிபதி முயலுகின்றார் என்று கூறப்படுகின்றது.

அதற்கான அச்சுறுத்தலே இந்த இருபது எம்.பிக்கள் குழுவின் நகர்வு மூலம் முன்வைக்கப்படுவதாக கொழும்பில் விடயமறிந்த வட்டாரங்கள் தகவல் வெளியிட்டன.

தற்போது, அரசாங்கத்திற்கு நாடாளுமன்றத்தில் அதிகபட்சமாக 116 உறுப்பினர்கள் உள்ளனர். எனினும் 20 பேர் சுயேச்சையாக மாறும் நிலையில் அரசதரப்பு எம்.பிக்கள் எண்ணிக்கை 100 ஆசனங்களுக்குள் வீழ்ச்சியடைவதுடன், அது தன் பெரும்பான்மையையும் இழக்கும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

காலைக்கதிர் Kalaikkathir

# அச்சமின்றி சிகிச்சை பெறும் சூழலை உருவாக்குங்கள்!

## கிளிநொச்சி பிரதேச மக்கள் கோரிக்கை

கிளிநொச்சி – அக்கராயன் வைத்தியசாலையின் வைத்தியரின் பொறுப்பற்ற செயற்பாடு தொடர்பில் பொருத்தமான நடவடிக்கையை மேற்கொள்ளுமாறு பிரதேச மக்களும், வைத்தியர்களும் வடக்கு மாகாண மற்றும் கிளிநொச்சி மாவட்ட சுகாதார அதிகாரிகளிடம் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

கிளிநொச்சி பிரதேச பொது மக்களின் நலன் கருதி விபரீதங்கள் எவையும் இடம்பெற முன்னர் பொருத்தமான நடவடிக்கையை விரைந்து மேற்கொள்ளுமாறு பொது மக்கள் வலியுறுத்தியுள்ளனர்.

மேற்படி வைத்தியசாலையின் வைத்தியர் ஒருவரின் செயற்பாடுகள் வைத்தியசாலைக்கு செல்லும் நோயாளர்கள் மத்தியில் அச்சத்தை ஏற்படுத்தியிருக்கின்றன எனவும் விசனம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் பிரதேச மக்கள் தங்களின் கவனத்துக்குக் கொண்டுவந்துள்ளனர் எனவும், பெயர் குறிப்பிட விரும்பாத வைத்தியர்கள் தாங்களும் இந்த விடயம் தொடர்பில் பிராந்திய சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகம் மற்றும் வடக்கு மாகாண சுகாதாரப் பணிப்பாளர் அலுவலகத்தின்கவனத்துக்குக்கொண்டுசென்றுள்ளனர் எனவும், ஆனால் இதுவரை எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை எனவும் கவலை தெரிவித்துள்ளனர்.

பொது மக்களுடன் நேரடியாகத் தொடர்பு கொள்ள முடியாத சுகாதார திணைக்களத்தின் ஏனைய பணிகளுக்கு மேற்படி வைத்தியரைப் பயன்படுத்துமாறும், அத்தோடு அவருக்கு சுகவீனங்கள் இருப்பின் அதற்கான சிகிச்சைகளை மேற்கொள்ள நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு தாம் பரிந்துரைத்துள்ளோம் எனவும் குறிப் பிட்டுள்ளனர்.

இந்நிலையில், இந்தக் கோரிக்கை தொடர்பில் சம்பந்தப்பட்ட தரப்பினர்கள் எவரும் எதுவித நடவடிக்கையையும் மேற்கொள்ளவில்லை எனவும், இதனால் எதிர்காலத்தில் ஏதேனும் விபரீதத்துக்கு இட்டுச் செல்லும் நிலைமையை உருவாக்கிவிடுமோ என்று அச்சம் ஏற்பட்டுள்ளதாகவும் வைத்தியர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

எதியோப்பியாவில் வாரத்தில் ஒருமுறைமட்டுமே எரிவாயு விநியோகம் இங்கு அவ்வாறு இல்லை! மக்களிடம் நன்றியை எதிர்பார்க்கிறார் பந்துல எத்தியோப்பிய போன்ற நாடுகளில் வாரத்திற்கு ஒரு முறை மாத்திரமே சமையல் எரிவாயு விநியோகிக்கப்படுகிறது எனவும் இலங்கையில் அவ்வாறான நிலைமை இல்லை என்பது குறித்து பொது மக்கள் நன்றி கூற வேண்டும் எனவும் முன்னாள் அமைச்சர் பந்துல குணவர்தன நாடாளுமன்றத்தில் தெரிவித்துள்ளார்.

நாடு வரலாற்றில் என்றும் எதிர்நோக்காத மிகப் பெரிய பொருளாதார நெருக்கடியை நாங்கள் எதிர்நோக்கி வருகின்றோம். இலங்கை மட்டுமல்ல முழு உலகமும் பொருளாதார நெருக்கடியை எதிர்நோக்கி வருகிறது.

இந்தப் பொருளாதார நெருக்கடி காரணமாக ஏற்பட்டுள்ள பொருளாதார கஷ்டங்களால் பாகிஸ்தான், நேபாள மக்களும் வீதியில் இறங்கியுள்ளனர்.

இது 1930 ஆம் ஆண்டுக்கு பின்னர் உலகம் எதிர்நோக்கி வரும் மிக மோசமான பொருளாதார நெருக்கடி. உலகில் வேகமாக அபிவிருத்தியடைந்து வரும் நாடான எதியோப்பியாவில் வாரத்திற்கு ஒரு முறை மாத்திரமே சமையல் எரிவாயு விநியோகிக்கப்படுகிறது.

வாரத்தில் இரண்டு நாள்கள் மாத்திரமே பெற்றோல் வழங்கப்படுகிறது. இப்படியான நிலைமை 1930 ஆம் ஆண்டுக்கு பின்னர் உலகில் ஏற்பட்டுள்ளது.

கொவிட் காரணமாக உலகில் இந்தப் பொருளாதார நெருக்கடி ஏற்பட்டுள்ளது. உலகில் பலம்மிக்க நாடான அமெரிக்காவும் மிகப் பெரிய பணவீக்கத்தை சந்தித்துள்ளது. உலகில் ஏனைய நாடுகளில் நூல் அறுந்த பட்டம் போல் பொருள்களின் விலைகள் அதிகரித்து வருகின்றன.

2006 ஆம் ஆண்டு முதல் வரவு – செலவுத் திட்டத்தில் துண்டு விழும் தொகை ஈடு செய்ய முயற்சிகள் எடுக்கப்படவில்லை. இலங்கையில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடிக்கு அரசியல்வாதிகளின் பேராசையே காரணம் எனவும் பந்துல குணவர்தன விமர்சித்துள்ளார்.

# ஜனாதிபதி கோட்டாபய திருடினார் என்பதை ஒப்புவித்தால் மறுதினமே பதவி விலகுவேன்

## மஹிந்தானந்த அளுத்கமகே உத்தரவாதம்



கோட்டாபய ராஜபக்ஷ கொள்ளையிட்டார் என்பதை ஒப்புவிக்கும் ஓர் அறிக்கையை நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்தால், மறுதினமே நாடாளுமன்ற உறுப்பினர் பதவியில் இருந்து விலகிவிடுவேன் என நாடாளுமன்ற உறுப்பினர் மஹிந்தானந்த அளுத்கமகே தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் அவர் இதனைக் கூறியுள்ளார். சிறப்பு நீதிமன்றத்தை ஏற்படுத்தி, தினமும் வழக்கு விசாரணைகளை நடத்தி ராஜபக்ஷவினரை சிறையில் அடைக்க கடந்த அரசாங்கம் முயற்சித்தது.

எனினும் அவர்களால் கடந்த 5 ஆண்டுகளாக ஒரு திருடனைக் கூட பிடிக்க முடியவில்லை எனவும் மஹிந்தானந்த அளுத்கமகே தெரிவித்துள்ளார்.

கோட்டாபய ராஜபக்ஷ சம்பந்தப்பட்ட கோப்புகள் மூடப்பட்டுள்ளன என இரத்தினபுரி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் வருண லியனகே சுமத்திய குற்றச்சாட்டுக்குப் பதிலளிக்கும் போதே அவர் இதனைக் கூறியுள்ளார்.

கோட்டாபய ராஜபக்ஷ கொள்ளையிட்ட ஒரு பிடி மண், கடுகளவு எதனையும் கண்டுபிடிக்க முடிந்திருந்தால், அவர் தற்போது ஜனாதிபதி மாளிகைக்கு பதிலாக சிறையில் இருந்திருப்பார்.

கோட்டாபய ராஜபக்ஷ சிறையில் அடைப்பதற்காக சிறப்பு நீதிமன்றத்தை ஏற்படுத்தி, தினமும் வழக்கு விசாரணைகள் நடத்தப்பட்டன.

மிக் விமானம் உட்பட அனைத்தையும் தேடினர். தேடப்பட்ட அனைத்துக்கும் எதிராக வழக்கு தொடர்ந்தனர். எனினும் ஐந்து ஆண்டுகளாக கோட்டாபய ராஜபக்ஷ கொள்ளையிட்டார் என்பதை கண்டுபிடிக்க முடியாது போனது எனவும் மஹிந்தானந்த அளுத்கமகே கூறியுள்ளார்.

# 13 வருடங்களுக்குப் பின் தேசிய ரீதியில் பணவீக்கம் 21.5 சதவீதமாக அதிகரிப்பு

தேசிய ரீதியில் பணவீக்கம் 20 சதவீதத்துக்கும் அதிகமாக உயர்ந்துள்ளது. 2022 மார்ச் மாதம் 21.5 சதவீதமாக பணவீக்கம் காணப்படுவதாக புள்ளி விவரவியல் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது. 2008 ஆம் ஆண்டு புலிகளுடன் இடம்பெற்ற யுத்தத்தின் போது இதனைவிட சற்று அதிகமாக அதாவது 24.3 வீதமாக காணப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது எனினும், கடந்த 5 மாத காலமாக பணவீக்கம் இரட்டை இலக்கத்தால் அதிகரித்து வருகிறது. உணவு தொடர்பான பணவீக்கம் மார்ச் மாதம் 29.5 சதவீதமாக காணப்பட்டது.

கடந்த 8 மாதகாலமாக உணவு தொடர்பான பணவீக்கம் இரட்டை இலக்கத்திலேயே அதிகரித்து வருகின்றது.

மேலும் உணவு தவிர்ந்த பணவீக்கம் கடந்த மூன்று மாத காலமாக இரட்டை இலக்கத்தில் அதிகரித்து வருவது குறிப்பிடத்தக்கது.

## இலங்கை மாணவன் ஆஸியில் விபத்தில் சாவு


ஆஸ்திரேலியாவில் உள்ள பல்கலைக்கழகம் ஒன்றில் கல்வி பயின்று வந்த இலங்கை மாணவன் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

சம்பவத்தில் அத்தனகல்ல, வல்பொல பிரதேசத்தை சேர்ந்த 29 வயதுடைய இசுரு ஜீவந்த என்பவரே உயிரிழந்துள்ளார் என அடையாளம் காணப்பட்டுள்ளார். மேற்படி இலங்கை மாணவன் பயணித்த கார் விபத்துக்குள்ளானதில் அவர் உயிரிழந்துள்ளார் என வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள் ளன.

மாணவன் உயர்தர கணிதப் பிரிவில் கம்பஹா மாவட்டத்தில் மூன்றாம் இடத்தைப் பெற்று மொரட்டுவ பல்கலைக் கழகத்துக்குத் தேர்வாகி இருந்த நிலையில், மேற்படிப்புக்காக ஆஸ்திரேலியாவுக்கு சென்றுள் ளார். உயிரிழந்தவரின் உடலை இலங்கைக்கு கொண்டு வர அவரது நண்பர்கள் நிதி திரட்டி வருகின்றனர் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

# மீன் உற்பத்திகளை அதிகரிப்பதற்கான ஒத்துழைப்புகள் வரவேற்கப்படுகின்றன

## அமைச்சர் டக்ளஸ் தெரிவிப்பு



நன்னீர் மீன் வளர்ப்பு மற்றும் அடைக்கப்பட்ட கூடுகளில் மீன் வளர்க்கும் முறைமையை விருத்தி செய்து மொத்த மீன் உற்பத்தியை அதிகரிப்பதற்கு திட்டமிட்டுள்ளளேன் என தெரிவித்துள்ள அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, அவற்றிற்கான ஒத்துழைப்புக்களையும் முதலீடுகளையும் எதிர்பார்க்கின்றேன் எனவும் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய நாடுகள் சபையின் உணவு மற்றும் விவசாய விகாரங்களுக்கான பிரிவின் இலங்கை மற்றும் மாலைதீவு பிரதிநிதி விம்லேந்திரா ஷாரன் அவர்களுடனான சந்திப்பின் போதே கடற்றொழில் அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இலங்கையில் மேற்கொள்ளப்பட்டுவருகின்ற கடற்றொழில் மற்றும் நீர்வேளாண்மை செயற்பாடுகளின் தற்போதைய நிலைவரம் தொடர்பாக பிரஸ்தாபிக்கும் வகையில் கடற்றொழில் அமைச்சில் நடைபெற்ற இந்தக் கலந்துரையாடலில், கடற்றொழிலாளர்கள் தற்போது எதிர்கொள்ளும் எரிபொருள் பிரச்சினை உட்பட்ட பிரச்சினைகள் மற்றும் அவற்றுக்குத் தீர்வு காண்பதற்கு மேற்கொள்ளப்பட்டு வருகின்ற நடவடிக்கைகள் தொடர்பாக ஐக்கிய நாடுகள் சபையின் பிரதிநிதிக்கு கடற்றொழில் அமைச்சரால் தெளிவுடுத்தப்பட்டது. மேலும், சீநோர் நிறுவனத்தின் ஊடாக படகு கட்டும் தொழிலை விஸ்தரிப்பதற்கு மேற்கொள்ளப்படும் முயற்சிகள், அறுவடை செய்யப்படுகின்ற மீன்கள் பழுதடையும் விகிதத்தைக் குறைப்பதற்கான முயற்சிகள் போன்றவற்றுக்கு ஐக்கிய நாடுகள் சபை கட்டமைப்புக்களால் வழங்கக் கூடிய ஒத்துழைப்புக்களை எதிர்பார்ப்பதாகத் தெரிவித்த கடற்றொழில் அமைச்சர், வடக்கில் உருவாக்கப்படுகின்ற கடலட்டைப் பண்ணைகள் தொடர்பாகவும் எடுத்துரைத்தார்.

மேலும், நோர்வே போன்ற நாடுகளில் பின்பற்றுவதைப் போன்று குடாகடல் போன்ற பொருத்தமான நீர்நிலைகளில் கூடுகளை உருவாக்கி மீன் வளர்ப்புக்களை உருவாக்குவது மற்றும் நன்னீர் மீன் வளர்ப்பு போன்றவற்றின் ஊடாக மீன் உற்பத்தியை அதிகரிப்பது தொடர்பான தனது திட்டங்களையும் தெளிவுபடுத்திய அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, அவற்றுக்கான ஒத்துழைப்புக்களையும் முதலீடுகளையும் பொருத்தமான தரப்புக்களிடம் இருந்து எதிர்பார்ப்பதாகவும் தெரிவித்தார். இந்நிலையில் கருத்து தெரிவித்த ஐக்கிய நாடுகள் சபையின் பிரதிநிதி, கடற்றொழில் அமைச்சின் எதிர்பார்ப்புக்கள் அடங்கிய திட்டவரைவை முன்னுரிமை அடிப்படையில் வழங்குமாறும், அவற்றை உரிய தரப்புக்களின் கவனத்திற்கு எடுத்துச் சென்று ஒத்துழைப் புக்களுக்கான தொடர்புகளை முடிந்தளவு ஏற்படுத்துவதாகவும் உறுதியளித்தார்.